1-10-1986
ரூ. 1

# தமிழரசு







தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் பிறந்த நாட்களை முன்னிட்டும், மகாகவி பாரதியார் நினைவு நாளையொட்டியும் சென்னையில் அன்னார்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாண்புமிகு மேலவைத் தலைவர், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர்கள் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



# தமிழ் நாட்டில் என்றும் இருமொழித் திட்டமே

—பேரறிஞர் அண்ணா



பேரவைத்தலைவர் அவர்களே!

மொழிப் பிரச்சினை 1937லிருந்து 1967ஆம் ஆண்டுவரையில், ஒவ்வொரு வடிவிலேயும், ஒவ்வொரு கோணத்திலேயும் தொடர்ந்து இருந்து வருகிறது. இதைப் பற்றிய எல்லா முறைகளும் எல்லோருக்கும் தெரியும். எல்லா நிலைமைகளையும் எல்லோரும் அறிந்திருக்கிறார்கள்.

தமிழ்நாடு சட்டப்பேரவையில், 23.1.1968 அன்று '1967-ஆம் ஆண்டு ஆட்சிமொழிகள் (திருத்த) சட்டத்தையும், அதைச் சார்ந்த தீர்மானத்தையும் இந்திய நாடாளுமன்றம் நிறைவேற்றியதன் விளைவாக இம்மாநிலத்தில் ஏற்பட்டுள்ள கடும் நிலையைக் குறித்து ஆய்வு செய்தல் வேண்டும்' என்ற தீர்மானத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்மொழிந்தார்.

இத்தீர்மானத்தின் மீது உறுப்பினர்கள் தம் கருத்துக்களைக் கூறி விவாதித்தனர். பின்னர் மாண்புமிகு முதல் அமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சில திருத்தங்களை முன் வைத்துப் பேசினார்கள். அப்போது அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகள்:

''தேச ஒருமைப்பாடு முக்கியமா? மொழி முக்கியமா? தேச ஒருமைப்பாடு தான் முக்கியம் என்றால் இவ்வளவு மனக் கிலேசத்தை உண்டாக்குகின்ற மொழிப் பிரச்சினையை ஏன் கிளப்பினீர்கள்? அந்த மொழிப் பிரச்சினையைக் கிடங்கில் போட்டு வையுங்கள், பின்னால் பார்த்துக் கொள்ளுங்கள். ஒரு அமைதியான சூழ்நிலையில் அதைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்துக்கொள்ளலாம்'' என்று கனம் ராஜாஜி அவர்கள் சொல்கிறார்களே, ஏன் நீங்கள் அதைக் கேட்கவில்லை? உண்மையிலேயே ஒருமைப்பாடு முக்கியம் என்று நீங்கள் கருதுவீர்களானால் கனடா நாட்டில் உள்ளவர்களைப் பார்க்க வேண்டும்.

பிரஞ்சுமொழி பேசுகின்ற மக்களும் ஆங்கில மொழி பேசுகின்ற மக்களும் இன்று அல்ல, நேற்று அல்ல, கடந்த 300 ஆண்டுகளாக அங்கே சேர்ந்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள். 150 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே நிர்வாகத்தின் கீழ் ஒன்றாக இணைந்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

கொஞ்சம் விட்டுக் கொடுக்கலாம். விட்டுக்கொடுப்பது நாமேதானா? தியாகம் செய்ய வேண்டுமென்பது நமக்கு மட்டும்தானா? எல்லாக் காலத்துக்கும் நாம் விட்டுக்கொடுத்து வந்திருக்கிறோமே, மற்றவர்கள் எதையாவது விட்டுக் கொடுத்திருக்கிறார்களா? நீங்கள் யோசித்துப் பார்க்கவேண்டும்! ''தேச ஒருமைப்பாட்டுக்காக நாம் இந்தியை ஏற்றுக் கொள்ள வேண்டும், கொஞ்சம் விட்டுக் கொடுக்கிற மனப்பான்மையுடன்'' என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லலாம்.

தமிழரசு

மலர் : 17 இதழ் : 7

1-10-1986

திருவள்ளுவர் ஆண்டு 2017

அட்சய - புரட்டாசி 15

சரி, நாம் விட்டுக்கொடுக்கலாம்; அவர்கள் விட்டுக் கொடுப்பது என்ன? தேச ஒருமைப்பாடுக்காக அந்த மக்கள் செய்கிற தியாகம் என்ன? ஏற்கிற கஷ்டம் என்ன? இழந்துவிட்ட நன்மை என்ன? தேச ஒருமைப் பாட்டுக்காக நாம் பெருமையுடன் விட்டுக் கொடுக்க விட்டுக்கொடுக்க அவர்கள் செய்து கொண்டு போகிற காரியங்கள் என்ன?

நம்மீது இந்தியைத் திணிக்கிற துணிவைத் தான் பெற்றார்கள். நாம் எந்த அளவுக்குத் தொடர்ந்து விட்டுக்கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறோம் என்பதை காங்கிரஸ் வரலாற்றைப் பார்த்தாலும் சரி, மற்ற மற்ற வரலாறுகளை எடுத்துப் பார்த்தாலும் சரி, நன்றாகத் தெரியும்.

தமிழ்நாட்டுப் புலவர்கள், பெரும் பேராசிரியர்கள், மறைந்த சோமசுந்தர பாரதியார், மறைந்த சேதுப்பிள்ளை, மறைந்த உமா மகேசுவரம்பிள்ளை, மறைந்த மறைமலையடிகள், இன்றும் நல்லவேளையாக நம்மிடையே இருந்துவரும் பெரியார் ராமசாமி ஆகிய இப்படிப்பட்டவர்கள் எல்லாம் சேர்ந்து அந்த நாட்களில் இந்தியை எதிர்த்து ஆயிரம் பேர் சிறை சென்றார்கள்.

அதிலே இரண்டுபேர் மருத்துவமனையில் இறந்துபட்டார்கள். அதற்குப் பிறகு கட்டாய இந்தி என்பது எடுபட்டு விருப்பப் பாடம் என்று ஆயிற்று. விருப்பப்பாடமாக ஆனபின் இந்தி ஆபத்து இல்லையென்று வேறு வேலைகளைப் பார்த்தோம்.

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் காங்கிரஸ் ஆட்சியில் முதலமைச்சராக வந்தபோது மறுபடியும் இந்தி புகுத்தப்பட்டது. நாங்கள் மறுபடியும் போராட்டத்தைத் துவக்கினோம். அந்தப் போராட்டத்தில் பல கஷ்டங்களை மேற்கொண்டோம். பலர் சிறைச்சாலைக்குச் சென்றார்கள்.

பின்னர் இந்திக்கு இந்திய அரசியல் அரங்கத்தில் தேசிய மொழி என்று சொல்வதற்குப் பதிலாக ஆட்சிமொழி என்ற பெயர் கொடுக்கப்பட்டது.

'ஆட்சிமொழி' என்றால் இந்திக்காரர்கள்தானா எங்களை ஆளவேண்டுமென்ற அரசியல் கிளர்ச்சி எழுந்த காரணத்தால் ஆட்சிமொழி என்பதையும் மாற்றி, 'இது ஆட்சிமொழி என்பது கூட அல்ல; இது இணைப்புமொழி' என்ற பெயர் கொடுக்கப்பட்டது.

இப்போது பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் இந்தி மட்டும்தான் இணைப்பு மொழி என்று சொல்லவில்லை.

இந்தி இந்தியாவுக்குள் இணைப்புமொழி; ஆங்கலம் உலகத்திற்கு இணைப்பு மொழி என்று இணைப்பு மொழியை இரண்டாகச் சொல்லுகிறார்கள். இந்த வார்த்தை மாற்றங்கள் எல்லாம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் ஒவ்வொரு கட்டத்தைக் குறிப்பதாகும். வெறும் வார்த்தை ஜாலங்கள் அல்ல.

நாங்கள் அதற்காகப் பாடுபட்டவர்கள் என்ற முறையில்—நொந்து போனவர்கள் என்ற முறையில்-கொடுமைகளைத் தாங்கிக் கொண்டவர்கள் என்ற வகையில் இன்றைய தினம் ''இந்திப்பாடம் இனி இல்லை'' என்று நான் தீர்மானத்தைப் படித்தபோது அதிலே எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை என்னால் தான் உணர்ந்து கொள்ள முடியுமே தவிர, அதற்காகக் கஷ்டப்படாதவர்களால் உணர்ந்துகொள்ள முடியாது.

இந்திய அரசியல் சட்டத்தில் இந்தியைப் புகுத்தியது காங்கிரசு. அன்று முதற்கொண்டு நாங்கள் எதிர்த்துக் கொண்டு வருகிறோம்.

அதுபற்றி நேரு உறுதிமொழி அளிக்க வேண்டுமென்பதை வற்புறுத்துவதற்காக அப்போது வர இருந்த குடியரசுத் தலைவருக்குக் கருப்புக் கொடி காட்ட வேண்டும்; நம்முடைய மனக் கொதிப்பைத் தெரிவிக்க வேண்டும் என்று தீர்மானம் போட்டு, உடனே அப்போது என்னோடு இருந்த இன்று உங்களுக்கு உதவியாக இருக்கிற -சம்பத், குடியரசுத் தலைவரைப் பார்த்தார். குடியரசுத் தலைவர் உறுதிமொழி தருவதாகச் சொல்லிய பிறகு நாங்கள் அதற்குமேல் அந்தக் காரியத்தில் ஈடுபட வேண்டாமென்று முடிவு செய்தோம்.

அதற்குப் பிறகு நேருவினுடைய உறுதிமொழி சீனப் படையெடுப்பு நேரத்தில் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டது.

அதற்குப் பிறகும் தரப்பட்டது. அப்போது கொண்டு வரப்பட்ட சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் சென்னைக் கடற்கரையில் கூட்டம் கூட்டப்பட்டது. அதிலே கலந்து கொள்வதற்காக நான் டில்லியிலிருந்து விமானம் மூலம் வந்தேன்.



அப்போது தேசிய மொழிகள் 14 ஆக இருந்தன. இந்தியாவின் தேசிய மொழிகள் அனைத்தையும் ஆட்சிமொழியாக ஆக்கப்பட வேண்டும்; அப்படி ஆக்கப்படுகிற காலம் வரையில் ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சிமொழியாக நீடிக்க வேண்டும் என்பது எங்கள் கழகத்தின் தீர்மானம்-திட்டம், அது நிறைவேறுகிற வரையில் நாங்கள் முழுத் திருப்தி அடைவோம் என்று சொல்வதற்கில்லை.

ஆனால் இப்போது வந்திருக்கிற சட்டம் இருக்கிறதே இது உங்களுக்கு எப்படிப் படுகிறது என்று கேட்டார்கள். அது எனக்கு

எப்படிப் படுகிறதென்றால், மழை பெய்கிற போது குடை பிடிக்காவிட்டாலும் தலைக்கு மேலே துணியை வைத்துக் கொண்டு பிடித்துக் கொள்வது போல், உடனடியாக இந்தி வந்து விடாமல் ஆங்கிலத்தை வைத்துத் தடுக்கிறோம். அப்படித் தடுத்துக் கொண்டிருக்கும் போது 14 மொழிகளுக்காகவும் பாடுபட்டு அவற்றை வளரச்செய்து இந்திக்கு மட்டும் சலுகை காட்டுகிற அந்தத் திட்டத்தை மாற்றி, எல்லா மொழிகளுக்கும் சமஅந்தஸ்து கொடுத்து, எல்லா மொழிகளின் வளர்ச்சிக்கும் அதற்குரிய சலுகைகளைக் கொடுத்து வளரச் செய்வார்களானால் நாம் அந்த நிலைக்கு வரமுடியும்.

அதுவரை கொஞ்சம் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்துக் கொள்ளவேண்டும். அப்படிப் பொறுத்துக் கொள்கிற நிலையில் இந்தி நுழைந்து விடுமானால் பிறகு நாம் தலைதூக்க முடியாது என்பதால் இந்த மொழிச் சட்டம் இந்தி வரும் வேகத்தைத் தடுக்கிறது.

நான் ஆங்கிலத்தைப் புறக்கணிக்கிறவன் அல்ல. ஆனால் ஆங்கிலம்தான் இருக்கவேண்டும். தமிழ் அதற்கு உரிய இடத்தைப் பெறவேண்டாம் என்ற எண்ணம் கொண்டவனும் அல்ல.

ஆங்கிலம் எந்தெந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறதோ அந்த அந்தக் காரியங்களுக்கு இந்தியாவில் உள்ள மொழிகளில் எது தகுதி உள்ள மொழி என்றால் அது 'தமிழ் தமிழ்' என்று சொல்லத் தயக்கப்படமாட்டேன். அவ்வளவு வளம் உள்ள மொழி.

எங்களுடைய இறுதி இலட்சியம் 14 மொழிகள் தவிர ஆங்கிலம்; ஆங்கிலமே நீடித்திருக்க வேண்டுமானால் நேருவின் உறுதிமொழி நிறைவேற்றப்பட வேண்டும்.

(ஆய்வுக்குப் பிறகு மூலத் தீர்மானம், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.)

## பேரவைத் தீர்மானம்

''பல்வேறு மொழி - பண்பாடு - நாகரிகங்களைக் கொண்ட இந்தியாவில் ஒரு வட்டார மொழியை மட்டும் ஆட்சி மொழியாக்குவது இந்திய ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் குலைத்து, ஒரு மொழிப் பகுதி மற்ற மொழிப் பகுதிகளை அடிமை கொள்ளச் செய்திடும் என்று உணரப்படுவதால்,

தமிழும், மற்ற தேசிய மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும். அதுவரையில் ஆங்கிலமே ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்து வர வேண்டும். அதற்கு ஏற்றபடி இந்திய அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவு திருத்தப்பட வேண்டும் என்று இந்த மன்றம் வற்புறுத்துகிறது.

இப்பொழுது நிறைவேற்றப் பட்டுள்ள மொழிச் சட்டம் இந்த இலட்சியத்துக்கு ஒத்ததாக அமையவில்லை என்று கருதுவதுடன், இந்தியா பிளவுபடவும் அரசாங்க நிர்வாகத்தில் இருப்பவர்களிடையே, வெறுப்பு, குழப்பம், வேதனைகள் மலிந்த இரு பிரிவுகளை உண்டாக்கிடவும் வகை செய்கிறது என்று கருதுவதோடு முதலில் குறிப்பிட்ட மொழி உரிமை இலட்சியம் நிறைவேறுவதற்கான முறையில் தொடர்ந்து வலியுறுத்தி வருவது எனத் தீர்மானிக்கிறது.

மொழித் திருத்தச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் இந்தி பேசாத பகுதி மக்களுக்கு அநீதியையும் சங்கடத்தையும், புதிய பளுவையும் உண்டாக்குகிறபடியால், அந்தத் தீர்மானம் அமலாக்கப் படக்கூடாது என்பதில் பல அரசியல் கட்சிகளும் ஒருமித்த கருத்து தெரிவித்திருப்பதைக் கவனத்தில் கொண்டு, மத்திய அரசு உடனடியாக அந்தத் தீர்மானத்தை நீக்கி வைத்து இந்தி பேசாத மக்களுக்குச் சங்கடமும், பளுவும் ஏற்படாத ஒருமுறையை வகுக்க வேண்டுமென்று இந்த மன்றம் வலியுறுத்துகிறது. மொழிப்பிரச்னை பற்றி ஆய்ந்தறியவும், மொழிச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தால் விளையும் தீங்கை அகற்றும் வழிகளையும், எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும் கொண்ட ஒரு மேல்மட்ட மாநாட்டை இந்தியப் பேரரசு கூட்ட வேண்டும் என்று இம்மன்றம் கேட்டுக்கொள்கிறது.

மொழிச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் இந்தி பேசாத பகுதியினருக்குப் பளுவையும், சங்கடத்தையும் தருவதுடன், மும்மொழித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்துவதன் மூலம் இந்தித் திணிப்பை நடத்தி, இறுதியில் இந்தியையே ஆட்சி மொழியாக ஆக்கிவிடுவது என்ற நோக்கத்துடன் அமைந்திருக்கிறது என்று இந்த மன்றம் கருதுகிறது.

மத்திய அரசின் இந்தித் திணிப்புத் திட்டத்தை இந்த மன்றம் ஏற்க மறுக்கிறது.

மத்திய அரசின் மொழித் தீர்மானத்தை இந்த அரசு செயல்படுத்த மறுக்கிற வகையிலும் தமிழக மக்களும் மாணவர்களும் வெளியிட்டுள்ள கருத்துக்கு மதிப்பளிக்கிற முறையிலும்,

தமிழகத்தின் எல்லாப் பள்ளிகளிலும் மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டு, தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுக்கு இடமளித்து, இந்தி மொழியை அறவே நீக்கிட இம்மன்றம் தீர்மானிக்கிறது.

என்.சி.சி. முதலிய அணிகளில் பயன்படுத்தப்பட்டு வரும் இந்தி ஆணைச் சொற்களை நீக்கி விடுவது என்றும், இதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்க மறுத்தால் என்.சி.சி. போன்ற அணிகளைக் கலைத்துவிடவும் இந்த மன்றம் தீர்மானிக்கிறது.

தமிழகத்தில் தமிழ் பயிற்சி மொழியாகவும், பாடமொழியாகவும் எல்லாக் கல்லூரிகளிலும், நிர்வாக மொழியாகப் பல்வேறு துறைகளிலும், ஐந்தாண்டுக் காலத்துக்குள் நடைமுறைக்கு வருவதற்கான துரிதமான நடவடிக்கையை மேற்கொள்வது என்று இம்மன்றம் தீர்மானிக்கிறது.

அரசியல் சட்டத்தில் இந்திக்கு பிரத்தியேக அந்தஸ்து அளித்திருப்பது அகற்றப்பட்டு, நாட்டின் பிற மொழிகளுக்கு கீழ்நிலை அளிக்கும் ஷரத்துக்களெல்லாம், எல்லா இந்திய மொழிகளுக்கும் சம அந்தஸ்து நல்கும் வகையில் திருத்தப்பட வேண்டும்.

8-வது ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள எல்லா மொழிகளின் வளர்ச்சிக்கும், மத்திய அரசு சமமாக நிதி வசதிகளை வழங்க வேண்டும்.''

# உலக உத்தமர் காந்தி

## -பேரறிஞர் அண்ணா



"இன்று உலக உத்தமர் காந்தி அடிகளின் பிறந்தநாள். நாடெங்கும் இந்நாள், நன்னாளாகக் கொண்டாடப்படுகிறது, அவரவர் தத்தமக்கு விருப்பமான முறையில் காந்தி அடிகளுக்குத் தமது உள்ளன்பினைக் காணிக்கையாக்கி அளிக்கின்றனர். அவருடைய திருவுருவப் படத்திற்கு மாலையிட்டும் அவர் புகழ் பற்றிய பாடல்களை இசைத்தும், பஜனை நடத்தியும், நூற்புத் தொண்டாற்றியும், சேரிகளைத் திருத்தும் பணிபுரிந்தும், இந்நாளைக் கொண்டாடுகின்றனர்.

"காந்தியடிகள் ஒரு தனி மனிதர் என்ற முறையிலே மட்டும் கவனிக்க வேண்டியவர் அல்லர்:

அவர், காலத்தின் சின்னம்!
ஓர் எழுச்சியின் அடையாளம்!
ஒரு மறுமலர்ச்சியின் உருவம்!

அரசியல் கண்ணோட்டத்துடன் மட்டும் திருப்தி அடைய விரும்பினால், அவருடைய அறப்போர் மாண்பினை மட்டும் வியந்து பாராட்டுவதுடன் இருந்து விடத் தோன்றும். ஆனால், அரசியல் துறையிலே மட்டும் அரும்பெரும் வெற்றி பெற்று, மற்ற துறைகளிலே ஈடுபடாதிருந்தவர் அல்ல அவர். எல்லாத் துறைகளிலும் தமது முத்திரையைப் பொறித்துச் சென்றவர். எல்லாத் துறையினரும், 'எமக்காகவே காந்தி அடிகள் வாழ்ந்தார்! எமக்காகவே பணிபுரிந்தார்!' என்று சொந்தம் கொள்ளத்தக்க முறையிலே அவருடைய வாழ்க்கையும் தொண்டும் அமைந்திருந்தன.

"காந்தி அடிகளின் புகழொளி மூலமே, உலகம் இந்தியாவைக் கண்டு வந்தது. தன்னலமற்ற, விளைவு பற்றிய கவலையற்ற போராட்ட மனோபாவத்தை நாட்டிலே காந்தி அடிகளால்தான் உண்டாக்க முடிந்தது. அதற்கு முன்பெல்லாம் விடுதலை கோரி மனுச் செய்யும் மேதாவிகளிடமே நாடு இருந்தது. அவருடைய உருவமோ, உடலமைப்போ, பேச்சோ, நடவடிக்கையோ இராணுவ மனப்பான்மையை ஏற்படுத்தக்கூடிய விதமாக இல்லை. ஆனால் அவரால் இராணுவங்களையும் எதிர்த்து நிற்கக்கூடிய வீர உணர்ச்சியை இலட்சக்கணக்கானவர்களிடத்தில் உண்டாக்க முடிந்தது.

"அவருடைய பொதுப்பணியிலே ஒரு கடுமையான சொல், ஒரு நேர்மையற்ற செயல், ஒரு சுயநலத் திட்டம் இருந்ததில்லை. அவருடைய சேவையினால் ஏற்பட்ட செல்வாக்கு இந்தியாவின் ஒளியையும், ஆசியாவின் புகழையும், நிறத்திமிர் கொண்டு இறுமாந்திருந்த ஐரோப்பிய வல்லரசுகளுக்கும் கிலி உண்டாக்கக்கூடிய அளவுக்குப் பரப்பிற்று.

"அவருடைய மொழியைக் கேட்க வெளிநாட்டு அரசாங்கத் தலைவர்கள் ஓடோடி வந்தனர். அவர் மண்குடிசையிலே தங்கினால், அது மதிப்பளிக்கக்கூடியதென்று மன்னர் மன்னர்கள் எண்ணினர்.

"காந்தி அடிகள் மறையவில்லை; நம்மோடு இருக்கிறார், நம்முள் இருக்கிறார், நம்முடன் கலந்து விட்டார் என்று எண்ணுதல் வேண்டும். அவருடைய எண்ணங்கள் மடிந்து விடவில்லை. அவைகளை நம்முடைய இலட்சியமாகக் கொண்டுள்ளோம் என்ற உறுதி பிறந்திட வேண்டும். மறைந்த காந்தி அடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடுவதன் பொருள் இதுவாகவே இருக்க வேண்டும்.

"அவர் இறவாப் புகழ் பெற்றார் என்பதனை எடுத்துரைக்கும் நாள் மட்டுமல்ல இது. அவருடைய எண்ணங்களை ஏற்றுக் கொண்டவர்கள் நாங்கள், எனவே அவர் காண விரும்பிய மாண்பு பிறந்திடப் பணிபுரிவோம் என்ற உறுதி பெற!

"அவருடைய நாட்களில் அவர் குரல் கேட்டு, அன்னிய அரசு வெருண்டோடிற்று, ஆனால் ஓட்டப்பட வேண்டியவை பல இருக்கின்றன.

"பொய்ம்மையும், கயமையும்"
"கல்லாமையும் இல்லாமையும்"
"ஜாதிப்பித்தமும் வகுப்புமாச்சரியமும்"
வெருண்டோட வேண்டும்.
அதற்குத் தேவைப்படும்
"தூய்மையும் வாய்மையும்"
"அஞ்சாமையும் பணியாற்றுந்தன்மையும்"

நம் ஒவ்வொருவருக்கும் இன்றே பிறந்திட வேண்டும். அதற்கே இன்று காந்தியடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம்.

"பரம ஏழைகளும் இது தங்கள் நாடு என்று எண்ண வேண்டும். அதன் அமைப்பில் தங்களுக்கு முக்கியத்துவமும், அதிகாரமும் இருக்கிறது என்று அவர்கள் நினைக்க வேண்டும். மக்களில் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்பதே இருக்கக் கூடாது. எல்லாச் சமூகத்தினரும் அன்னியோன்யமாய் வாழ வேண்டும். அத்தகைய இந்தியா உருவாகவே நான் பாடுபடுவேன்.

"இதுவே உலக உத்தமர் காந்தி அடிகளின் இலட்சியம் என்று பண்டித ஜவஹர்லால்நேரு கூறியதை நினைவுபடுத்துகிறேன்".

(1967-ஆம் ஆண்டு, அக்டோபர் 2-ஆம் நாள் சென்னை வானொலியில் ஆற்றிய உரையிலிருந்து.

(நன்றி: அனைத்து இந்திய வானொலி, சென்னை).

# அண்ணலும் அண்ணாவும்



**மோ**கனதாஸ் கரம்சந்திர காந்தி என்றும், பாயி (சகோதரன்) என்றும் பாபுஜி என்றும் அழைக்கப்பட்ட ஓர் உன்னத மனிதர், பிறகு காந்திஜி என்று மட்டும் அழைக்கப்பட்டாரே அதைப்போல அண்ணாதுரை என்றும் தளபதி என்றும் சி.என். ஏ. என்றும் அறிஞர் என்றும் அண்ணா என்றும் அழைககப்பட்ட அன்பின ஊற்று, பின்பு தென்னாட்டுக் காந்தி என்று அழைக்கப்பட்டார்.

அழைக்கப்படும் முறையில் மட்டுமல்ல, அன்பு செலுத்தும் விதத்திலும் பிறரை ஆட்கொள்ளும் திறத்திலும் அண்ணலுக்கும் அண்ணாவுககும் ஏராளமான ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

நாட்டில் எத்தனையோ விஷயங்களில் அடிப்படை ஒற்றுமைகள் இருந்து வருகின்றன. இலக்கியத்துறையை எடுத்துக்கொண்டால் இராமாயணத்துக்கும் கந்த புராணத்துக்கும் தொடர்பிருக்கிறது. இராமாயணத்திலே வில்லுக்குப் பெருமை என்றால், கந்த புராணத்திலே வேலுக்குப் பெருமை. இராமாயணத்திலே அனுமன் தூது சென்றால், கந்த புராணத்திலே வீரபாகு தூது செல்கிறான். அதிலே இராவணனின் தங்கை சூர்ப்பனகை அங்க பங்கம் அடைந்தால், இதிலே சூர பத்மனின் தங்கை அஜமுகி அதே நிலைக்கு ஆளாகிறாள்.

மன்னர்கள் காலத்திலும் இந்த ஒற்றுமை அதிகமாகத் தெரிகிறது. அண்ணன் ராமனுக்காகத் தம்பி பரதன் மனம் இரங்கி, தனது அன்னை தனக்காகக் கேட்டுப் பெற்ற ஆட்சியுரிமையை உதறித் தள்ளி, அண்ணனின் பாதுகையை ஆட்சிப் பீடத்தில் ஏற்றியிருக்கிறான் என்றால், அண்ணன் செங்குட்டுவன் அரசுரிமை பெறுவதற்காகத் தம்பி இளங்கோ, அரசை வெறுத்துத் துறவியாகியிருக்கிறான்.

வடமதுரை மன்னன் கண்ணன் தந்த பகவத்கீதை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது மட்டுமல்ல-அகில உலகமே ஏற்றுக்கொண்டிருக்கின்ற உன்னத நூலாகத் திகழ்கிறது. அதுபோல் தெற்கே - தென்மதுரையில் திருவள்ளுவர் யாத்த திருக்குறள் ஆங்கிலத்தில் மட்டுமல்ல, பல மொழிகளிலும் பெயர்க்கப்பட்டு உலகப் பொதுமறையாகப் போற்றிப் புகழப்படுகிறது.

வட இந்தியாவில் ஒரு பால கங்காதர திலகர் தோன்றினார்; தென் இந்தியாவில் கப்பல் ஓட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் தென்னாட்டுத் திலகர் என்று அழைக்கப்பட்டார். அங்கே சுபாஷ்சந்திரபோஸ் பிறந்தார், இங்கே பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் தென்னாட்டு போஸ் எனறு மக்களால் புகழப்பட்டார். அவர்களைப்போலவே, வடபுலத்தில் தோன்றிய காந்தியடிகளுக்கு இணையாக தென் புலத்தில் தோன்றிய அண்ணா தென்னாட்டுக்காந்தி என்று அழைக்கப்பட்டார்.

பட்டப்படிப்பு, எளியஉடை, இனிய பண்பு, அடக்க உணர்வு, வன்முறை தவிர்ப்பு, அரசியலாற்றல், பெண்கள் முன்னேற்றப் பணி, கனிவான பேச்சு, செல்வாக்கு, கண்டவுடன் சூழ்ந்து கொண்ட நிருபர்கூட்டம், கட்டளைக்குக் காத்துக் கிடந்த தொண்டர் குழாம் -தன்னல மறுப்பு - வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் - வெளிநாட்டார் வரவேற்பு -போப் ஆண்டவர் தரிசனம்-இப்படிப் பற்பல சிறப்பம்சங்கள் காந்தியடிகளுக்கு அடுத்து, பேரறிஞர் அண்ணா அவர்களுக்குத்தான் கிடைத்திருக்கின்றன.

காந்தியடிகள் காட்சிக்கு எளியராக இருந்திருக்கிறார். அவரது தோற்றத்தையும் அவருக்கு இருந்த ஈடற்ற புகழையும் கணக்கிட்டுப் பார்த்தால் இரண்டுக்கும் சம்பந்தமே இருக்காது. பெரும் புகழும், மகாத்மா என்ற சிறப்புப் பெயரும் பெற்றவர் இவர்தானா என்ற வியப்பு ஏற்படும்படியாக இருந்தது அவரது தோற்றம்!

**புலவர் தமிழ்ப்பித்தன்**

*1914*ஆம் வருடம் இந்தியாவிலிருந்துதொழிலாளர்களை வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கும் ஒப்பந்தத் தொழிலாளர் முறையை ரத்து செய்ய வேண்டும் என்ற தீர்மானம் மாளவியா அவர்களால் இம்பீரியல் சட்டசபையில் கொண்டுவரப்பட்டது. தீர்மானம் தவிர, கிளர்ச்சியும் தேவைப்படலாம் என்ற கருத்தும் காங்கிரஸ் கட்சியில் இருந்துவந்தது. எனவே இது குறித்துப் பொதுமக்களின் கருத்தைக் கேட்கச் சுற்றுப்பயணம் தொடங்கினார் காந்தியடிகள். பாட்னா சென்றிருந்தவர் முஜாபர்பூருக்கும் செல்ல முடிவு செய்தார், தமது வருகையை கிருபளானிக்கு தந்தி மூலம் தெரிவித்திருந்தார்.

காந்தியடிகளின் தந்தியைக் கண்ட கிருபளானி, அவரை வரவேற்க, தமது மாணவர் குழுவினருடன் ரயில் நிலையத்துக்குச் சென்றார். ரயில் வண்டி,நிலையத்தில வந்து நின்றதும், காந்தியடிகளும் அவரது நணபர் சுக்லாவும் மூன்றாவது வகுப்புப்பெட்டியலருந்து இறங்கி, பிளாட்பாரத்திலிருந்து வெளியே போகும் வழியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள்.

கிருபளானியும் அவரது மாணவர்களும் காந்தியடிகளை முதல் வகுப்புப் பெட்டியில் தேட ஆரம்பித்தார்கள். அங்கே அவர் இல்லாததால் அவர்கள் குழப்பம் அடைந்தார்கள். காந்தியடிகளைச் சரிவரத் தெரியாத சூழ்நிலை வேறு! ஆகவே அனைவரும் பிளாட்பாரம் முழுவதும் தேட ஆரம்பித்துவிட்டார்கள். அவர்கள் அங்கும் இங்கும் பரபரப்பாக அலைவதைப் பார்த்த சுக்லா, அவர்கள் யாரைத்தேடுகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டார்.

''கர்ம வீரர்காந்தியைத்தானே தேடுகிறீர்கள்?'' - மாணவர்களிடம் கேட்டார் சுக்லா.

''ஆம்! அவரைத்தான் தேடுகிறோம்'' கிருபளானியும் மாணவர்களும் பதில் சொன்னார்கள்.

''அவர் இதோ என் அருகில் நிற்கிறார்'' - சுக்லா தெரிவித்தார். மறுவிநாடி, சுக்லாவின் அருகில் இருந்த காந்தியடிகளை அவர்கள் அனைவரும் சூழ்ந்து கொண்டுவிட்டார்கள். அவரைப் பார்த்ததும் அவர்களுக்கு வியப்பாக இருந்தது. இடுப்பில் வேஷ்டி, சட்டை, குல்லாயுடன் எளிய தோற்றத்தில் காந்தியடிகள்

விளங்கினார். இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்ற காந்தியடிகள் அவ்வளவு எளிய தோற்றத்தில் இருப்பார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

அண்ணாவும் காட்சிக்கு எளியராகவே இருந்துவந்தார். அவருக்கு இருந்த அமோகமான புகழுக்கும் அவரது எளிய தோற்றத்துக்கும் சம்பந்தமே இல்லை! கல்லூரியில் எம்.ஏ. பட்டம்பெற்று, பல அறிஞர்களையும் வாதத்தில் வென்று, பல்லாயிரக்கணக்கான மக்களின் இதயத்தில் இடம் பெற்றிருப்பவர் இவர்தானா என்று வியக்கும்படியாக இருந்தது அவரது எளிய தோற்றம்.

1945ஆம் ஆண்டு. அப்போது, நாஞ்சில் நாடு திருவாங்கூர் சமஸ்தானத்தின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலம். கோட்டாறு சுயமரியாதை வாசிப்புச்சாலை பகுத்தறிவுப் பிரச்சாரப் பணியில் தலை சிறந்திருந்தது. அதன் ஆண்டு விழா கொண்டாட முடிவாகியது. அண்ணாவைத் தலைமைப் பேச்சாளராக அழைக்க முடிவாகியது. அண்ணாவிடம் தேதியும் கேட்கப்பட்டது. அண்ணா தேதி கொடுத்தார். அந்தத் தேதியில், நெல்லையிலிருந்து கோட்டாறுக்கு பஸ்ஸில் வருவதாக அண்ணா பதில் விடுத்திருந்தார். விழா நிகழ்ச்சியன்று அதிகாலையில வரவேற்புக் குழுவினர், மலர் மாலைகளுடன் பஸ் நிலையம் சென்று காத்திருந்தனர். அண்ணாவின் வருகையை எதிர்பார்த்திருந்தனர்.

வண்டி வந்து சேர்ந்தது. ''பெரியார் வாழ்க! அண்ணா வாழ்க!'' என்ற வாழ்த்தொலி விண்ணை எட்டியது! அண்ணாவின் கழுத்தில் மாலைபோட இளைஞர் பட்டாளம் துடித்துக்கொண்டிருந்தது. தனது மாலைதான் அண்ணாவின் கழுத்தில் முதலில் விழவேண்டும் என்ற எண்ணத்துடன் வேகமாகச் சென்றார் வரவேற்புக்குழுத் தலைவர். நவநாகரிகமாக உடையணிந்து வந்த ஒருவர் கழுத்தில் மாலையைச் சூட்டினார். அவ்வளவுதான், மறுவிநாடி அவரைத் தொடர்ந்து மற்றவர்களும் நவநாகரிக உடைக்காரரின் கழுத்தில் மாலை அணிவித்துவிட்டனர். ஆனால், அவரோ திகைத்துப் போய்விட்டார். நிலைமையைப் புரிந்து கொண்ட அவர், ''அடடா! என்ன தவறு செய்து விட்டீர்கள்! அண்ணா பின்னால் அல்லவா வருகிறார்'' என்றார். வரவேற்புக் குழுவினருக்கு ஏமாற்றம் ஆகி விட்டது.



அவரது எளிய தோற்றத்தைப் பார்த்து அதிசயப்பட்டனர். எம்.ஏ. படித்தவர் - கல்லூரி வாழ்வு கண்டவர்; அவ்வளவு எளிமையாக இருக்கமாட்டார் என்பதுதான் மாலை மாறிய தவறுக்கு அடிப்படையான காரணம்!

## புத்தகப் படிப்பு

காந்தியடிகள் ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் புத்தகங்கள் படித்து வந்தார். லண்டனில் கல்வி கற்று வந்த நாளிலும் சரி, தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்து வந்த நாளிலும் சரி, இந்தியாவில் வாழ்க்கை நடத்தி வந்த நாளிலும் சரி, அறிஞரின் நூல்களைப் படிப்பதில் அவர் அளவற்ற ஆனந்தம் அடைந்திருக்கிறார். பயணம் செய்கின்ற காலங்களிலும் புத்தகம் படிக்கும் வழக்கத்தைக் கைக் கொண்டிருக்கிறார்.

ஒருமுறை டர்பனுக்குப் பயணம் செய்தார். அவரை வழி அனுப்ப வந்திருந்தார் போலக் என்னும் நண்பர். அவர், ரஸ்கின் எழுதிய (Unto the last) என்ற புத்தகத்தைக் கொண்டு வந்திருந்தார். காந்தியடிகள் அந்தப் புத்தகத்தை அவரிடமிருந்து பெற்றுக் கொண்டார். பயணத்தின்போது படிக்கத் தொடங்கினார். இடையில் நிறுத்தவில்லை. படித்து முடித்து விட்டுத்தான் புத்தகத்தைக் கீழே வைத்தார்.

புத்தகங்கள் படிப்பதென்றால் ஏற்படுகின்ற ஆனந்தம் வேறெதிலும் இருப்பதில்லை - அண்ணா அவர்களுக்கு! புத்தகம் படிப்பது அவரைப் பொறுத்த அளவில் பொழுது போக்கல்ல - இலட்சிய வெறி என்று தான் சொல்ல வேண்டும். நள்ளிரவு நேரத்தில் கூட அவரது நயனங்கள் புத்தகங்களில் பதிந்திருக்கும்.

ஒரு முறை புகைப்படக்காரர் ஒருவர் அண்ணாவைப் பல கோணங்களில் படம் எடுப்பதில் ஈடுபட்டிருந்தார். பலவிதமான போஸ்களில் படம்பிடித்த அவர், அண்ணாவிடம் ஒரு புத்தகத்தைக் கொடுத்து, அதைப்படிப்பது போல் போஸ் கொடுக்குமாறு சொன்னார். அதற்கு ஒப்புக் கொண்ட அண்ணா, போஸ் கொடுத்தவாறேபுத்தகத்தைஉண்மையாகவே படிக்கத் தொடங்கி விட்டார். புகைப்படக்காரர் வேண்டிய அளவு புகைப்படங்கள் எடுத்துக் கொண்ட பின்னர் ''போஸ் கொடுத்தது போதும் அண்ணா'' என்று கூற, உடனே அண்ணா, ''இரு இரு! இன்னும் இரண்டு பக்கம்தான் இருக்கின்றன. படித்து முடித்துவிடுகிறேன்'' என்று சொல்ல, புகைப்படக்காரர் வியப்பில் ஆழ்ந்தார். படிப்பது போல போஸ் கொடுக்கச் சொன்னால், அந்தக் குறுகிய காலத்திற்குள்ளேயே அந்தப் புத்தகத்தைப் படித்து முடித்து விட்டார் அண்ணா.

புற்றுநோய்ச் சிகிச்சைக்காக சென்னை அடையாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது- மேரிகரோலி என்னும் கதாசிரியர் எழுதிய Master Christian என்னும் நவீனத்தை, ஹிக்கின் பாதம்ஸ் புத்தக நிலையத்திலிருந்து வரவழைத்துப்படுக்கையிலிருந்தவாறே படித்துக் கொண்டிருந்தார் அண்ணா. இதுதான் அவர் படித்த கடைசி நூல்.

இந்நூலைப் படித்துக்கொண்டிருக்கும்போது அறுவைச் சிகிச்சைக்கு நாள் குறிப்பிடப்பட்டது.

''இரண்டு நாள் கழித்து அறுவைச் சிகிச்சையை வைத்துக் கொள்ளலாமா?'' என்று டாக்டர் மில்லரிடம் கேட்டார் அண்ணா.

அண்ணாவும் மற்றவர்களைப் போல நல்லநாள் பார்க்கிறார் போலும் என்று நினைத்த டாக்டர், ''எதற்காக இரண்டு நாள் தள்ளிப் போடச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

''இந்தப் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் இரண்டு நாளில் முடித்துவிடுவேன்! அதன்பிறகு அறுவைச் சிகிச்சையை வைத்துக் கொள்ளலாம்'' என்றார் அண்ணா.

தனது உடலில் வந்த நோய்க்குச் சிகிச்சை செய்வதைக்கூட ஒத்திபோட வைத்தது அண்ணாவின் புத்தகப்படிப்பு.

இப்படி-அண்ணலுக்கும் அண்ணாவுக்கும் இடையேயுள்ள ஒற்றுமை-ஒப்பியல்புகள் ஒன்றா இரண்டா? ஏராளம் உண்டு.

# அண்ணாவின் அரசு தரும் உணவு, உடை, வீடு!

திருப்பூர் வி. ஆர். மணிமாறன்,
தலைவர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்.



பூத்துக் குலுங்கும் புத்தம் புது நந்தவனமாய்ப் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் ஆட்சி மக்கள் மனத்தை மணக்கவைத்து மகிழ்ச்சிக்கு விழா எடுத்து வருகிறது!

ஏழை எளிய மக்கள் ஏற்றம் பெற்றிட எழிலார்ந்த திட்டங்களுக்கு இங்கேதான் அடிக்கடி முடிசூட்டு விழா நடத்தப்படுகின்றது. சமுதாய நலச் சட்டங்களுக்குச் சாகா வரம் கொடுத்து சரித்திரத்திற்கு வசந்த காற்றைத் தாரை வார்த்துத் தந்துகொண்டிருக்கிற ஆட்சி இந்த ஆட்சிதான்!

எதிர்பார்ப்புகள் எரிமலையாக வெடித்தாலும் ஆவேசப் பெருமூச்சுக்கள் அலை கடலாய் ஆர்ப்பரித்தாலும், அமைதி தெய்வம் ஆராதிக்கப்படுகிற மண்டபம், அர்ச்சனை செய்யப்படுகிற கொலு பீடம், தமிழகத்தின் அத்தாணி மண்டபம்!

சட்டமும், ஒழுங்கும், இங்கேதான் பூப்பந்து விளையாடுகின்றன. புன்சிரிப்பைக் காட்டுகின்றன. பூரித்துக் கிடக்கின்றன. பூகோளத்தில், வேறு எங்கும் காணாத பக்குவமும் பாதுகாப்பும் இங்கேதான் தொட்டில் குழந்தைகளாய்க் கண்மலர்ந்து கொண்டிருக்கின்றன!

ஒன்பதாண்டுக் கால உத்தமர் ஆட்சி காயங்களும், ஊனங்களும் இல்லாத அரசியல் நாகரிகத்திற்கும், ஒழுக்க இலக்கியத்திற்கும், இலக்கணம் கற்றுக் கொடுக்கும் பல்கலைக் கழகமாய் இந்தத் தமிழகத்தைப் பரிமளிக்க வைத்திருக்கிறது!

மகத்தான சாதனைகளின் வெள்ளோட்டம் இங்கு உயிரோட்டம் கண்டு உலக அரங்கில் முதற்பரிசு பெறும் மூலமந்திரத்திற்கு வித்திட்டுக் கொண்டிருக்கிறது.

மனித சமுதாயத்தின் இன்றியமையாத தேவைகளான —

* உண்ண உணவு
* உடுக்க உடை
* உறங்க வீடு

என்ற இம் மூன்றும் இந்த ஆட்சியில்தான் முழுமையை நோக்கிப் பயணமாகி முழு நிலவாய்ப் பிரகாசித்து, நட்சத்திர



மண்டலத்தையே நாட்டுக்குக் கூட்டி வந்து, ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சிக் கொண்டிருக்கின்றன.

பஞ்சமில்லாத ஒரு பூமி!
பசிப்பிணி இல்லாத ஒரு மாநிலம்!
பட்டினியைப் பார்க்காத ஒரு நாடு!

-இந்த பூலோகத்தில் எங்கே இருக்கிறது? புண்ணியத்தின் மூலதனம், தர்மத்தின் தாய்வீடு, சத்தியத்தின் கரு பீடம், கண்ணியத்திற்குரிய புரட்சித் தலைவர் ஆண்டு கொண்டிருக்கிற இந்தத்தமிழ்ப் பூமிதான்!

அந்தப்பூலோகச் சொர்க்கம்
தாய்வயிற்றுச் சிறையுடைத்து
தரைமீது கண்மலர்ந்த
காவியத்துப் பூந்தளிர்கள்
பத்துமாத சோதனையில்
பக்குவமாய் வெற்றிபெற்று

சுதந்திரப் பூப்பறிக்கும் சுந்தரத் திரு விளக்குகள். இன்றைய கனவுகளின் நாளைய நிஜங்கள். இன்றைய நிஜங்களின் நாளைய நிரூபணங்கள். அந்த இளமுல்லை மொட்டுக்கள் அடிவயிறு காய்ந்தால், ஞான வளம் காயும் என்பதை உணர்ந்து, வருங்கால தேசத்தின் வளப்பமே அந்த மழலைகளின் அறிவு வளர்ச்சியிலே இருக்கிறது என்பதை அறிந்து, ஒவ்வொரு நாள் மதியமும் ஒரு சந்திரோதயத்தை ஒவ்வொரு பிஞ்சு முகத்திலேயும் தோன்ற வைத்த அருட்பெருந்தகையின் ஆற்றல் வேறு எங்கு உண்டு? எவரிடத்தில் உண்டு?

'பாத்திரம் நிறையப் பாலைக் கண்டு பழகிய உங்களுக்கு, சாக்கடை நடுவே வாழும் ஏழையின் நிலை புரியாதென்றால் ஆச்சரியப்படுவதற்கில்லை.'

என்ற வர்க்கபேதத்தின் சாராம்சத்தை வெளிக்காட்டி, சாக்கடை நடுவே வாழும் சேரிப் பிள்ளைகள் கூட பாத்திரம்

நிறையச் சோறுண்ணும் அமுத சுரபிகளை அள்ளித் தந்த வள்ளல் பெருமானின் அருள் உள்ளம் வேறு எங்கு உண்டு? எவரிடத்தில் உண்டு?

பொருளாதாரத்தில் சிக்கல் இல்லை! வாங்கும் சக்தியின் வளத்திற்கு எல்லை இல்லை! எப்பொருளும் எளிதில் கிடைக்கும் இதமான சூழ்நிலைக்கு முட்டுக்கட்டை இல்லை! தனி மனித வருமானம், மற்ற மாநில வருமானத்தைக் காட்டிலும் கணிசமான அளவு உயர்ந்த நிலை!

இத்தகைய ஆட்சி முறையின் நேர்த்தி நிலை இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எங்கும் இல்லை என்பது நிதர்சனமான உண்மை நிலை.

ஆகவேதான்

பசிக்கு மூடு விழா!
பட்டினிக்கு முற்றுப்புள்ளி!
பஞ்சத்திற்கு முடிவுரை!

உண்ண உணவு என்ற தேவைக்குப் பூமாலை சூட்டிப் பொட்டிட்டு அழகு பார்க்கும் புரட்சித் தலைவர் ஆட்சி இமயப்புகழ் பெற்று வெற்றிச் சின்னம் பொறித்து நிற்கிறது!

'இரண்டாயிரம் ஆடைகளில் எதை அணிவது என்று தெரியாமல் திண்டாடும் நீங்கள் ஒரு ஆடை இருந்தால் மானத்தை மறைக்கலாமே என்று ஏங்கும் ஏழைகளைப் பற்றி எப்படி அறிந்துகொள்ள முடியும்?'

என்று ஆடையில்லாமல் தவிக்கும் ஏழை மக்களுக்காக ஒரு உரிமைக் குரல் 1958-ஆம் ஆண்டில் நாடோடி மன்னன் திரைப்படத்தில் கம்பீரமாய் எழுப்பப்பட்டது.

அன்று படம். இன்று அதுவே பாடமாக, நடைமுறையாகப் பரிமளித்து, பாதையோரங்களில் மரத்தடி நிழல்களில் கந்தலையே சாசுவதமாக்கிக் கொண்டுவாழும் பரம ஏழைகளுக்கு மானத்தை மறைக்கும் ஆடைகளைத் தரும் அற்புதக் கொடைத்தன்மை பேகனையும் தோற்கடிக்கும் அருள்தன்மையல்லவா?

'ஆளுக்கொரு வீடு கட்டுவோம்—
அதில்
ஆய கலைகளைச் சீராகப்
பயில்வோம்.'

என்ற பாடல் வரிகள், புரட்சித் தலைவரின் இதயத்திலே இருந்து இன்றைக்கு நேற்றைக்கு உதித்ததல்லவே! அது முப்பத்தி மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலேயே சுகப்பிரசவம் அடைந்த சுந்தரக் கொள்கையாயிற்றே!

எண்ணமாய், நினைவாய், சிந்தனையாய், உணர்வோடு உணர்வாய் ஊறிப்போன அந்த இலட்சியம், காலத்தின் பரிணாம வளர்ச்சியில் 'குடும்பத்திற்கு ஒரு வீடு' என்ற எல்லையில் கால் பதிக்கும் வல்லமைக்குச் சாட்சியம் அல்லவா கூறிக்கொண்டிருக்கிறது. அதற்கான சான்றுகள், நல்ல சமிக்ஞைகளை சாதனைப் பூக்களாய் மலரவிட்டுக் கொண்ருக்கின்றன!

தமிழகத்தில் உள்ள மக்கள் அனைவரும் வீட்டுவசதியைப் பெற்றாக வேண்டும் என்ற விழுமிய நோக்கம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தணியாத இலட்சியமாய் ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. அவரவர் பொருளாதாரத்தைக் கணக்கில் கொண்டு, நலிவுற்றவர்கள், குறைந்த வருவாய்ப் பிரிவினர், மத்திய வருவாய்ப் பிரிவினர், உயர்வருவாய்ப் பிரிவினர், இப்பிரிவினரெல்லாம் உள்ளடங்கியுள்ள தொழிலாளர்கள், அரசு அலுவலர்கள், காவல்துறையினர் என்ற பற்பல பிரிவினருக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்கும் மகத்தான பணியை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மங்கலகரமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 1947-ஆம் ஆண்டு 'நகர அபிவிருத்திக் கழகம்' என்ற பெயரில் சின்னஞ்சிறியதாகத்தொடங்கப்பட்டு, பின்பு 1961-ஆம் ஆண்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமாக மாற்றப்பட்டு கடந்த 1977-ஆம் ஆண்டுவரை, அதாவது 30 ஆண்டுக் காலத்தில் 9517.42 இலட்சம் ரூபாய் செலவில் 42,983 குடியிருப்புகளை மட்டுமே கட்டும் வாய்ப்பைப் பெற்றது. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர், இதயதெய்வம், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்ற கடந்த பத்தாண்டுக் காலத்தில் - முப்பது ஆண்டுகளில் கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளைக் காட்டிலும் இரு மடங்கிற்கும் மேலாகக் குடியிருப்புகளைக் கட்டி தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ஒரு மாபெரும் வரலாற்றுச் சாதனைக்கு வைரமுடி சூட்டியிருக்கிறது!

கடந்த பத்தாண்டுகளில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் குடிசைகளில் குடியிருப்போருக்கு 6,016 குடியிருப்புகளும், பொருளாதாரத்தில் நலிவுற்றோர்களுக்கு



33,348 குடியிருப்புகளும், தொழிலாளர்களுக்கு 636 குடியிருப்புகளும், அரசு ஊழியர்களுக்கு 9,562 குடியிருப்புகளும், நடுத்தர வருவாய்ப்பிரிவினருக்கு 20,167 குடியிருப்புகளும், குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 18,865 குடியிருப்புகளும் கட்டி முடிக்கப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்டு பொது மக்கள் அக்குடியிருப்புகளில் வசித்து வருகிறார்கள். இந்தக் குறுகிய காலத்திற்குள் ரூபாய் 269 கோடி செலவில் 91,241 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பெற்று வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரியம் 1,34,224 குடியிருப்புகளை 364 கோடி ரூபாய் செலவில் கட்டியுள்ளது. 30 ஆண்டுக் காலச் சாதனையை எண்ணும்போது 10 ஆண்டுக்கால புரட்சித் தலைவரின் சாதனை இமயத்தின் உயரத்தையல்லவா காட்டுகிறது. இந்தச் சாதனை வருங்காலங்களில் தொடர்கதையாய் வளரவிருக்கிறது!

'மூன்றாண்டுக் காலத்தில் 30 இலட்சம் வீடுகள்' என்ற முனைப்பான திட்டத்திற்கு முகவுரை எழுதி, முடிவுரை எழுத இருக்கும் ஆட்சி, முன்னணி முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சிதான்!

அந்த இதய தெய்வம் வாழ்க!




SAA/NIA/2802/TM

முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

(ஜெனரல் இன்ஷ்யூரென்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)

**இன்சூரன்ஸ் — நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!**







மதுரை மாநகரில்...

# அறிஞர் அண்ணா - பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா

புதுவையிலே 29-4-1891-ல் கனகசபை - லட்சுமிஅம்மாள் தம்பதியரின் மகனாகத் தோன்றி, தன்னுடைய புயல்வேகப் பாடல் களால் புரட்சிக் கவிஞர் என்று போற்றிப் புகழப்பட்டவர் பாரதி தாசனார். 21-4-1964-ல் மறைந்த அவரது பெருமை விண்ணளாவியது ஆகும்.

காஞ்சியிலே 15-9-1909-ல், நடராசன்-பங்காரு அம்மை யாரின் மகனாகப் பிறந்து, தனது எழுத்தாலும் பேச்சாலும் இணை யற்ற நிர்வாகத் திறத்தாலும் பேரறிஞர் என்ற பெருமை பெற்றவர் அண்ணா. 3-2-1969ல் மறைந்த அவர் பெற்ற புகழ் அளவிடற்கரியது ஆகும்.

இந்த இருபெரும் மேதை களின் பிறந்த நாளையும் ஆண்டு தோறும் கொண்டாடி தனிச் சிறப்பு அடைந்து வருகிறது தமிழ்நாடு அரசு.

அண்மையில் (15-9-86) இவர்கள் பிறந்த நாள், உலகத் தமிழ்ச் சங்கம் கண்ட மாமதுரை யில் சிறந்த நாளாகக் கொண் டாடப்பட்டது. முழுநாள் விழா வாம் இதன் காலை நிகழ்ச்சிகள், அரசுக் கலைஞர்களான திரு எம். பி. என். சேதுராமன், திரு எம்.பி.என். பொன்னுசாமி குழு வினரின் நயம்மிக்க நாயன இசை யோடு தொடங்கியது.

**வரவேற்புரை**

செய்தி - மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப அவர்கள் தமது வரவேற்புரை யில்:—

''தாழ்ந்து கிடந்த தமிழகத் தைத் தட்டியெழுப்பிய பேரறி ஞர் அண்ணா - தன்மானக் கவிஞ ராம் புரட்சிக் கவிஞர் பாரதி தாசனார் ஆகியோரின் பிறந்த நாள் விழா, அவர்களுடைய கனவுகளை நனவாக்கிக்கொண் டிருக்கிற மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர் களின் பெருவிருப்பத்திற்கிணங்க இன்று இங்கே கொண்டாடப்படு கிறது.

''ஏழை எளியவர்கள் ஏற்றம் பெற உழைத்த ஆன்றோர்களைச் சான்றோர்களை நினைவு கொள் ளும் விதத்தில், அவர்களின் பிறந்தநாள் விழாக்களைத் தமிழ் நாடு அரசு கொண்டாடி வரு கிறது. அவர்களுக்கு நினைவா லயங்கள் அமைக்கப்படுகின்றன; அவர்கள் பெயராலே பல்கலைக் கழகங்கள் அமைக்கப்பட்டன; போக்குவரத்துக் கழகங்களுக்கு அவர்கள் பெயரிட்டுக் கவுரவிக் கப்படுகிறது; தந்தை பெரியார், கர்மவீரர் காமராசர், பசும் பொன் முத்துராமலிங்கத்தேவர், பேரறிஞர் அண்ணா ஆகியோர் பெயராலே புதிய மாவட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கப்ப லோட்டிய தமிழன் வ.உ. சிதம் பரனார் பெயரால் இன்னொரு மாவட்டமும் மலர்கிறது. இந்த வகையில் இணையற்ற பெருமை பெறுகிறது தமிழ்நாடு அரசு'' என்று தெரிவித்தார்.

**தொடக்கவுரை**

மாண்புமிகு தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி (டெல்லி) திரு எம். பட்டுராசன் அவர்கள் தொடக்கவுரையாற்றினார்.

''அறிஞர் அண்ணா அவர்கள் தனது எழுத்துவன்மையாலும் பேச்சு வன்மையாலும் புதிய தோர் சகாப்தத்தை உருவாக்கி னார். எந்தக் கோணத்திலிருந்து ஆராய்ந்தாலும் போற்றத்தக்க மாமனிதராகத் திகழ்ந்தவர் அவர். இலக்கியம், நாடகம், திரைப்படத் துறையிலெல்லாம் கூட நிகரற்று விளங்கினார். அனைவரும் புகழும்படி தமிழக

அரசை நிர்வகித்தார். தமிழ் என்றாலே தம் நினைவு வரும் அளவிற்கு வாழ்ந்த பெருமை பெற்றவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார். உயிர் தமிழுக்கு, உடல் மண்ணுக்கு என்று கூறி, தமிழுக்கு எந்தப் பங்கமும் வராமல் காத்தார். எந்தக் கால கட்டத்திலும் இவர்களுடைய புகழ் ஓங்கியே வந்திருக்கிறது.

''நவோதயா பள்ளி மூலம் டெலிவிஷன் மூலம் இந்தியைத் தமிழ்நாட்டில் நுழைப்பதற்கான வேலைகள் நடந்து வரும் இந்த நேரத்தில், தமிழுக்காகத் தன்னை அர்ப்பணித்தவர்களின் பிறந்த நாள் விழாக்களைக் கொண்டாடிப் பெருமை கொள்கிறது தமிழ்நாடு அரசு. எந்த வகையில் இந்தியைத் திணிக்கலாம் என்று சிலர் முயலுவதைப் பார்க்கிறபோது - எந்த நாளும் தமிழகத்திலே இந்தியை நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்று போராடி வந்த அமரர் அண்ணா காலத்திய இந்தி எதிர்ப்புப் போர் என் நினைவுக்கு வருகிறது.

''1965-இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போரில் கையிழந்தோர், காலிழந்தோர், உயிரிழந்தோர் எத்தனையோ பேர். அந்த பழைய மொழியுணர்வு புதுப்பிக்கப்பட்டு, இன்றைக்குப் புரட்சித் தலைவர் அட்சியில் அமைதிப்பூங்காவாக இருக்கும் தமிழகத்தின் அமைதியைக் குலைக்கவே இந்தித் திணிப்பு முயற்சியோ என அஞ்சுகிறேன். எந்த ரூபத்திலும் இந்தியை ஏற்க நாங்கள் தயாரில்லை; தமிழுக்காக எந்தவிதமான தியாகத்தையும் செய்யத் தயார்.''

**தலைமையுரை:**

நாடாளுமன்ற உறுப்பினர் திரு வலம்புரிஜான் அவர்கள் ஆற்றிய தலைமையுரை விவரம் வருமாறு:

"நாங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் உப்பைத் தின்று வளர்ந்தவர்கள். உப்பை நாங்கள் சாப்பிடுகிறோமே தவிர, அதனால் புரட்சித் தலைவரின் உடம்பில் இரத்தம் ஏறிக் கொண்டிருக்கிறது. அதனால்தான் இரத்தத்தின் இரத்தமான அன்பு உடன்பிறப்புக்களே என்று அவர் குறிப்பிடுவது!



''அரசியல்வாதி என்றாலே குறைத்து மதிப்பிடுகிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால்—பண்போடு, பகுத்தறிவோடு, பாசத்தோடு வாழ்ந்த அண்ணாவே அரசியல்வாதியாக இருந்ததால் அரசியல் தனி மரியாதை பெற்றது. அண்ணாவின் பேச்சில் மென்மை இருந்தது; மேன்மை இருந்தது. 'வசவாளர்கள் வாழ்க' என்று கூறிய முதல் அரசியல்வாதியல்லவா அவர்!

''நாம் கண் விழிக்கும்போது கதிர் வரும் என்பது நமக்குத் தெரியும். ஆனால் நமக்கு விழிப்புணர்ச்சி உண்டாக்குவது சந்திரனே! இதைத்தான் புரட்சிக் கவிஞர் 'நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா' என்று குறிப்பிட்டார். 'இந்திக்குத் தென்னாட்டில் ஆதிக்கமா? எல்லாரும் வாருங்கள் நாட்டினரே' என்று எழுச்சி முழக்கம் செய்தவர் அவர்.

''இந்தி படித்தால் வேலை கிடைக்கும் என்கிறார்கள் இன்று. அதெப்படி முடியும்? ஆங்கிலம் படித்தால் வேலை என்று அப்போது வெள்ளைக்காரன் சொன்னான். தீர்ந்து விட்டதா அந்தப் பிரச்னை? நீ அடிமை நான் ஆண்டான் என்றால் எங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? இந்தி மொழியால் நாட்டு ஒற்றுமை வளரும் என்கிறார்கள். தேச ஒற்றுமை ஒரு மொழியால் அமைந்ததாக வரலாறு இருக்கிறதா?

''தமிழ்ப் பாதுகாப்பில், இந்தி எதிர்ப்பில் தமிழகமே அணிவகுக்கும் என்று இந்த நேரத்தில் சூளுரைத்துச் சொல்கிறேன். எங்களை அடிமை கொள்ள இந்தி மட்டுமல்ல; வேறு எந்த மொழி வந்தாலும் விடமாட்டோம்.''

தலைமையுரைக்குப் பின், பேரறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசனார் இருவரையும் பற்றிய கருத்தரங்கம் தொடங்கியது.

கருத்தரங்கில் பங்கேற்றோர்















'பண்பு நலன்' என்ற தலைப்பில் பேராசிரியர் சொ. சொ. மீ. சுந்தரம் அவர்கள் பேசியதாவது:

''பேரறிஞர் அண்ணா அவர்களைக் காமராசர் திட்டிக் கொண்டேயிருந்தார். 'என்ன இப்படித் திட்டுகிறாரே' என்றபோது சிரித்த முகத்தோடு அண்ணா சொன்னார் ''கோழி மிதித்து குஞ்சு சாகாது'' என்று. அதுதான் அவருடைய பண்பு. மடக்கி எழுதினால் கவிதை, நீட்டி எழுதினால் உரைநடை

என்று இப்போதெல்லாம் எழுதுகிறார்கள். பாரதிதாசனார் இருந்திருந்தால், இதை அனுமதித்திருக்கவே மாட்டார். அதற்காகவேனும் அவரைப் போல் பலர் பிறந்திருக்கக் கூடாதா என்று எண்ணத் தோன்றுகிறது''.

புலவர் வளன் அரசு அவர்கள் 'மொழிப்பற்று' எனுந் தலைப்





பில் பேசும்போது குறிப்பிட்டதாவது:

''பாவேந்தருக்கும் நாவேந்தருக்கும் நடக்கும் நல்லதோர் விழா இது. அண்ணாவோடு மொழிப்பற்று இரண்டறக் கலந்து நின்றதென்றால், அந்த உணர்வைத் தந்த பெருமை பாரதிதாசனாருடையது. 'கமழும் தமிழினை உயிரென ஓம்பு; காணும் பிறமொழிகளோ வெறும் வேம்பு' என்ற புரட்சிக் கவிஞருக்குச் சிலை வைக்க வேண்டும் என்று 1946-ல் நிதி வழங்கிய விழாவில் கூறி, அதை மறவாதிருந்து 1968-இல் சிலையெழுப்பிய பெருமை அண்ணாவினுடையது. 'எந்த உருவத்தில் இந்தி வந்தாலும் எதிர்ப்போம்' என்று கூறுவதால் இந்த அரசு அண்ணா வழி நடக்கும் அரசு, பாவேந்தர் வழி நடக்கும் அரசு என்பதில் சந்தேகமேயில்லை''.

'அரசியல்' என்ற தலைப்பில் உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர் திருமதி பா. வளர்மதி அவர்கள் தெரிவித்ததாவது :

''மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உருவில் நான் அண்ணாவைப் பார்க்கிறேன்; புரட்சிக் கவிஞரைப் பார்க்கிறேன். ஒரு சமயம், மதுரைப் பொதுக் கூட்டத்தில் தேவர் அவர்கள் அண்ணாவைப் பற்றித் தரக் குறைவாகப் பேசிவிட்டார். மறு கூட்டம் போட்டு அதற்குப் பதில் சொல்ல எண்ணி, முத்தண்ணன் போய் அண்ணாவை அழைத்தார். ''அந்தக் கூட்டத்தில் எவ்வளவு பேர் இருந்திருப்பார்கள்?'' என்று அண்ணா கேட்க, ''ஐநூறு அறுநூறு பேர் இருந்திருப்பார்கள்''என்று இவர் கூற -''நான் கூட்டத்திற்கு வந்தால் எவ்வளவுபேர் கூடுவார்கள்'' என்று மீண்டும் அண்ணா கேட்க, ''பத்தாயிரம் பேருக்கு மேல் கூடுவார்கள்'' என்று முத்தண்ணன் தெரிவிக்க -''ஐநூறு பேரிடம் சொன்ன கருத்துக்குப் பத்தாயிரம் பேரிடம் விளக்கம் சொல்வது அவசியம்தானா? வேண்டாம் போங்கள்'' என்று கூறி விட்டார் அண்ணா. அப்படிப்பட்ட ஆரோக்கியமான அரசியல்வாதி அறிஞர் அண்ணா''

'கலைத் தொண்டு' என்ற தலைப்பில் பேசிய டாக்டர் திருமதி சக்தி பெருமாள் ஆற்றிய உரைச் சுருக்கம் வருமாறு:

''திரு. வி. க., ரா. பி. சேதுப் பிள்ளை எல்லாம் பேச்சாளர்களாக இருந்த காலத்தில், பேச்சை ஆள்பவராக வளர்ந்து சிறப்புற்றவர் அறிஞர் அண்ணா. மேடைப் பேச்சைக் கலைத் தொண்டு போல ஆற்றுவது அவருக்குக் கைவந்த கலையாக இருந்தது. மிகச் சாமான்யர்களைக் கதாபாத்திரங்களாக வைத்து முதன் முதல் நாடகம் எழுதிப் புரட்சி செய்தார். அதனாலல்லவா''இங்கே நான் ஒரு பெர்னார்ட்ஷாவைப் பார்க்கிறேன்'' என்று 'கல்கி'யே போற்றிப் புகழ்ந்தார்! கவிதையுலகில், கலையுலகில் பல சீர்திருத்தங்களைச் செய்து புகழ் பெற்றார் புரட்சிக் கவிஞர். இவர்கள் இருவரும் ஆற்றிய கலைத்தொண்டு கரைகாண முடியாதது ஆகும்.''

பேராசிரியர் சோ. சத்திய சீலன் அவர்கள் 'சீர்திருத்தம்' என்பது பற்றிப் பேசியதாவது :

'சீர்திருத்தத்தை நாம் நிற்கிற களத்திலேயிருந்து தொடங்க வேண்டும். அப்படி அண்ணா அவர்கள் நின்று சீர்திருத்தத்தைத் தொடங்கிய களம் அரசியல் களம் ஆகும். இந்த மண்ணில் சீர்திருத்த உணர்வுகளுக்கு மரியாதையைத் தேடித்தந்து-அந்த உணர்வை வளர்த்து அரசியலிலே புதுமை உண்டாக்கியவர் அண்ணா. ஆனால் அதை அவர் மென்மையாகச் செய்தார். சீர்

# இப்போது! பேன்மின்த்*

(மோரென்ட்டல் சிட்ரேட்)

## நாக்குப் புழுக்களை அழிக்கிறது.
## நாக்குப் புழுக்கள் உங்கள் லாபத்தை அழிக்கும் முன்பு.



நாக்குப்புழுக்கள்—உங்கள் கண்ணுக்குத் தெரியாத எதிரிகள்.

கால்நடையின் வயிற்றிற்குள் நாக்குப் புழுக்கள் வளர்ந்து வாழ்கின்றன. அவை கால்நடையின் ஊட்டச் சத்துக்களை. உண்ணுகின்றன. இதன் பலனாக கால்நடை மெலிந்து, உற்பத்தி குறைந்து விடுகிறது, லாபம் குறைந்து விடுகிறது.

மேய்ச்சல் தளத்திலே கால்நடைகள் மேயும்போது நாக்குப் புழுக்கள் தொற்றிப் பரவுகின்றன. அடிக்கடி புழு நோய் வருவதால், நிரந்தரமான, புழுவே அற்ற கால்நடைகள் இருக்க வாய்ப்பே இல்லை எனலாம். ஆகவேதான், கால்நடை மருத்துவர்கள், 3-4 மாதங்களுக்கொரு முறைப்புழுக்களை அப்புறப்படுத்த வேண்டுமென்று சிபாரிசு செய்கின்றனர்.

பேன்மின்த் நாக்குப்புழுக்களை அழிக்கிறது நாக்குப்புழுக்கள் உங்கள் லாபத்தை அழிக்கும் முன்பாக.

பேன்மின்த், உலகெங்கிலும் கால்நடைகளைத்தாக்கும் நாக்குப் புழுக்களை ஒழிக்கிறது.

பேன்மின்த், பாதுகாப்பானது பலகீனமான சோர்வான, கால்நடைகளுக்கும், சினையுள்ள மற்றும் கன்று ஈன்ற கால்நடைக்கும். இதர சில புழுக்கொல்லிகளை போல் இது, பால் நிறத்தில் மாற்றமோ, தீய விளைவுகளோ ஏற்படுத்தாது. பேன்மின்த் கொடுத்த பின்பும், பாலினைப் பயன்படுத்தலாம்.

இப்போது, பேன்மின்த் எளிதான வசதியான புழுக்கொல்லி.

உபயோகிக்க எளிதானது பேன்மின்த்—காரணம், உடனடி உபயோகத்திற்கான கரைசல் மாத்திரை, உருண்டை ஆகிய வடிவங்களிலே கிடைக்கின்றது.

கால்நடை மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

கரைசல் கிடைக்கிறது
100 மி.லி, 500 மி.லி. மற்றும்
4.5 லிட்டர் பேக்குகளில்

சிறிய கால்நடைக்கு
மாத்திரைகள்.




பெரிய கால்நடைக்கு
உருண்டைகள்.

PF 2106

ஒப்பற்ற **பேன்மின்த்**

புழுக்களை அழித்திடும் ஆரோக்கியம் அளித்திடும்

*யு.எஸ்.ஏ .:.பைஸர் இன்கார்ப்பரேட்டடின் ட்ரேட்மார்க்

pfizer

கேட்பதன் பேரில் மேலும் தகவல்கள் கிடைத்திடும்.

திருத்தத்தை வளர்க்க என்ன செய்யலாம் என்று பாரதி தாசனைக் கேட்டபோதுதனக்கே யுரிய வீரக் குணத்தோடு அவர் 'கொலை வாளினை எடடா' என்றார். இவர்கள் இருவரும் தமிழுக்கும்தமிழர்க்கும்நாமறிந்த தாயும் தந்தையும் போலிருந் தார்கள். ஆகவே - ஏடாண்டவ னுக்கும் நாடாண்டவனுக்கும் எடுக்கப்படும் விழா அல்ல இது; தாய்க்கும் தந்தைக்கும் நாம் எடுக்கும் விழா. நன்றி தெரி விக்கும் விழா அல்ல; அவர்கள் விரும்பியது போலத் தமிழை அரி யணையில் அமர்த்தும் நாள் எந்நாளோ, அதுவே அவர் களுக்கு நாம் நன்றி தெரிவிக்கும் நாள்''.



**நன்றியுரை :**

கருத்தரங்கின் முடிவில்-நன்றி யுரையாற்றிய செய்தி - மக்கள் தொடர்புத்துறை துணை இயக்கு நர் திரு வி.டி. வீரப்பன் அவர்கள் ''இங்கே நாதசுர இசைபொழிந்த சகோதரர்களுக்கா - நயம்பட உரை நிகழ்த்திய கற்றறிவாளர் களுக்கா - அல்லது, செவிக்குணவு கிடைத்ததால் வயிற்றுணவை மறந்து மூன்றுமணி வரை கேட்டு ரசித்த பெருமக்களுக்கா.... யாருக்கு நன்றி தெரிவிப்பதெனப் புரியாமல் தவிக்கிறேன்'' என்றார்

## மாலை நேர நிகழ்ச்சிகள்

பேரறிஞர் அண்ணா -புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் இருவ ரின் பிறந்த நாள் விழா நடக் கிறது என்பதாலோ என்னவோ மதுரையில் மூன்று நாட்களாக மாலை நேரத்தில் பெய்து வந்த மழையும் நின்றுவிட்டிருந்தது. வடக்கு மாசி வீதி - ஆலால சுந்தர விநாயகர் ஆலயத்தருகே மாலை நேர சிறப்புக் கூட்ட நிகழ்ச்சி அலங்கார மேடையில் மதுரை எம். பி. என். சேது ராமன், எம்.பி.என். பொன்னு சாமி நாயன இசை மழையோடு தொடங்கியது.

மாண்புமிகு செய்தி - அற நிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் பங் கேற்ற இந்நிகழ்ச்சிக்கு, மாண்பு மிகு வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் கா. காளி முத்து அவர்கள் தலைமை தாங்கினார்.

இந்த அரசு நிகழ்ச்சியின் ஆரம்பக் கட்டமாக செய்தி- மக்கள் தொடர்புத்துறை இயக் குநர் திரு இரா. கற்பூரசுந்தர பாண்டியன், இ.ஆ.ப., அவர் களின் வரவேற்புரை அமைந்தது.

''இதுவரை அரங்குகளிலே கொண்டாடப்பட்டு வந்த இப் படிப்பட்ட விழாக்கள், இப்போது தான் இதுபோலத் திறநத வெளி களிலே எல்லா மக்களும் கண்டும் கேட்டும் இன்புறத்தக்கதாக நடத்தப்படுகின்றன. நலிவுற்ற மக்களுக்கு நலம் சேர்க்கும் விதத் தில் நாட்டுக்குழைத்த நல்லவர் களுக்குப் பிறந்தநாள் விழாக்கள் நடத்திப் பெருமை பெற்று வரு கிறது தமிழ்நாடு அரசு'' என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.

**நலத்திட்ட விளக்கவுரை**

மதுரை மாவட்ட வருவாய் அலுவலரான திரு. கி. இராச மாணிக்கம் அவர்கள் அரசு நலத் திட்ட உதவிகள் குறித்து விளக்க வுரையாற்றினார். தமது உரை யில் - ''அண்ணா வழியில் அய ராது நடைபோடும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்களின் ஆட்சியில் ஏழை களுக்கான நலத்திட்டங்களுக்கு என்றுமே பஞ்சம் இருந்ததில்லை; அரசு நலத்திட்டங்கள் மற்ற மாவட்டங்களை விட மதுரை மாவட்டத்திலேயே அதிகம்நிறை வேற்றப்பட்டுள்ளன என்றே கூறலாம்'' எனக் குறிப்பிட்டார்.

**படத் திறப்பு**

வண்ண விளக்குகள் அழகு செய்த மேடையின் இருபுறமும் பேரறிஞர் அண்ணா - புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் ஆகி யோரின் திருவுருவப் படங்கள் அணி செய்தன. அப்படங்களை மாண்புமிகு செய்தி - அறநிலை யத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் திறந்து வைத் தார்.

மாண்புமிகு அமைச்சர் பெரு மக்களுக்குச் செய்தி - மக்கள் தொடர்புத்துறை இயக்குநரும், விழாவுக்கு வருகை தந்திருந்த நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப் பினர்களுக்குத் துணை இயக்குந ரும் மாலைகள் அணிவித்து மரி யாதை செய்தனர்.

அறிஞர் அண்ணாவின் அருமை குறித்தும்பாவேந்தரின் பெருமை குறித்தும் - திரு. பி. செல்வேந் திரன், எம்.பி., திரு. ஏ. சிவகு மார்,எம்.எல்.ஏ., திரு எஸ்.சுப்ப ராயர்,எம்.எல்.ஏ., திரு வி.ஆர். செயராமன், எம்.எல்.ஏ., திரு டி. முகமது சலீம், எம்.எல்.ஏ. திரு எம்.மாரிமுத்து,எம்.எல்.ஏ., திரு பாலுச்சாமி, எம்.எல்.ஏ., வேளாண் பொறியியல் துறைத் தலைவர் திரு. கே. எஸ். இரா சேந்திரன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. வெ. பாலகுரு ஆகியோர் விரி வாகச் சொற்பொழிவாற்றி னார்கள்.

**சிறப்புரை**

முன்னாள் அமைச்சர் டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் தமது சிறப்புரையில் தெரிவித்தகருத்துக்கள் வருமாறு:

''தந்தை பெரியார் அவர்களை, பேரறிஞர் அண்ணா அவர்களை, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களை நீண்ட காலமாக

அறிந்த - பழகிய எனக்கு இந்த விழாவிலே கலந்து கொள்ளுவது பெருமகிழ்ச்சியளிப்பதாக இருக்கிறது.

''பேரறிஞர் அண்ணா அவர்கள் மக்களுக்காக-கழகத் தொண்டர்களுக்காகக் கொடுத்த அறிவுரைப் படியே நடந்து பெரும்புகழ் பெற்று வருகிறார் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், மக்களிடம் செல்லுங்கள்; மக்களோடு சேர்ந்து வாழுங்கள்; மக்களை நேசியுங்கள்; அவர்களோடு சிந்தியுங்கள்; அவர்களுக்காகத் தொண்டாற்றுங்கள்; அவர்களோடு திட்டமிடுங்கள் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். இன்று நம்முடைய புரட்சித்தலைவர் அவர்கள் அதன் படி ஆட்சி செலுத்தி வருவதைப் பார்க்கிறோம்.

''வேறு யாரும் அண்ணாவின் அடியொற்றி இப்படி நடந்ததில்லை. இவர் நடக்கிறார். ஆகவேதான் இந்த ஆட்சி அண்ணாவுக்குப் பிறகு நீடித்து நிலைத்து நிற்கிறது. நமது புரட்சித தலைவரும் யாராலும் அசைக்க முடியாத அளவுக்கு வேரூன்றிய தலைவராகத் திகழ கிறார்.

''1938-ல், அண்ணா அவர்கள் இந்தி எதிர்ப்புப் போரில் சிறை சென்று மீண்டபோது வரவேற்று வாழ்ததுப் பாடினார் புரட்சிக் கவிஞர். அப்படிப்பட்ட இந்தி எதிர்ப்பு உணர்ச்சிக்கு இன்றைக்கு நாம் ஆளாக வேண்டிய நிலையிலிருக்கிறோம்''.

## அமைச்சர்கள் உரை

தன்னுடைய தலைமையுரையில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் குறிப்பிட்டதாவது :

''திராவிட இயக்கப் புலவன் பாரதிதாசன், திராவிட இனப் புரவலன் அண்ணா ஆகியோரின் படங்கள் இங்கே திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. தங்கத்திலே வைரம் போல இருவரின் பிறந்தநாள் விழாக்களும் இணைந்து நடத்தப்படுகின்றன. இரண்டுபேருமே ஒரே இலட்சியத்தை உயிர் மூச்சாகக் கொண்டிருந்தவர்கள். ''அமெரிக்க நாட்டிலே ஒரு பாரதிதாசன் இருக்கிறார்; அந்தக் கவிஞன் பெயர் வால்ட்விட்மன்'' என்று அண்ணா ஒரு முறை கூறினார். அந்த அளவுக்குப் பாரதிதாசனின் புரட்சிக் கருத்துக்களை மதித்தவர் பேரறிஞர் அண்ணா. அந்த அளவிற்குப் பாவேந்தரின் எழுத்தோவியங்கள் நாணலைத் தேக்காக மாற்றின; தகரத்தை எஃகாக ஆக்கின.

''பொருளாதாரம் பற்றி மற்றவர்களிடம் விளக்கம் கேட்டால், எதையாவது நீளமாகச் சொல்லி குழப்பி விடுவார்கள். ஆனால் அண்ணா அவர்களோ, 'நெய்க்குத் தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமா என்று பார்ப்பது தத்துவம்; அது ஏந்த அளவுக்கு மக்களுக்கு உதவும் என்று பார்ப்பது பொருளாதாரம்'' எனச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார்.

''பக்கத்து வீட்டில் பனை மட்டையில் மழை பெய்வது போல் சப்தம் கேட்டது; எட்டிப் பார்த்தால் இந்தி வகுப்பு நடத்திக் கொண்டிருந்தார் ஈஸ்வர ஐயர் என்றொரு பாடலில் புரட்சிக்



தமிழ்நாடு சுற்றுலா
வளர்ச்சிக் கழகத் தலைவர்
திரு. வெ. பாலகுரு

கவிஞர் சொல்லுவார். இன்று தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட இந்தியைத் திணிக்க முயற்சி நடக்கிறது. உத்தரப் பிரதேசத்தில், பீகாரில் இந்தி இருக்குமானால் அதை அந்த மாநில மக்கள் காக்கப் பாடுபடுவதில் எங்களுக்குக் கசப்பு இல்லை. அது தமிழ்நாட்டில் நுழைவதைத் தான் எதிர்க்கிறோம்.

''காலப் பழமை என்ற வைரம் பாய்ந்த மொழி தமிழ்மொழி; ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன்னால் இந்தி என்றொரு மொழியே கிடையாது உருதுக்கு எதிராக உருவாக்கப் பட்ட மொழியே அது. இந்தித் திணிப்பை மூதறிஞர் ராஜாஜி, சாக்ளா போன்றவர்களே எதிர்த்தார்கள். கொள்கை ரீதியாக அண்ணா அவர்கள் எதிர்த்தார். அந்தக் கொள்கையின் அரணாகவே புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கிறார்.

''நவோதயா கல்வி மூலம் இந்தியைத் திணிக்க முயற்சி நடக்கிறது. மாநில அரசு மூலம் ஒரு கல்வித் துறை, மத்திய அரசு மூலம் ஒரு கல்வித்துறை என்றால் அது எப்படி ஒத்து வரும்? பண்டித நேருவின் உறுதிமொழியையும் மீறி இந்தி வருமானால் தமிழ் மொழியைக் காக்க நாங்கள் உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.''

மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பேச்சு விவரம் வருமாறு :

''இப்படிப்பட்ட விழாக்கள் மண்டபத்துக்குள்ளே நடந்த காலம் போய் இப்போது மாசி வீதியிலே நடத்தப்படுகிறது. ஆன்றோர்களின் - சான்றோர்களின் பெருமைகள் குடத்திலிட்ட விளக்காகி விடக்கூடாது; அவர்



வேளாண் பொறியியல்
துறைத் தலைவர்
திரு, கே.எஸ். இராசேந்திரன்

களுடைய அருமை பெருமைகள் இளைய சமுதாயத்திற்கும் எட்ட வேண்டும் என்ற வகையிலேதான் இத்தகைய விழாக்கள் பொது இடங்களிலே நடத்தப்படுகின்றன.

''இன்றைய விழாவிலே பேசியவர்கள் எல்லாம் இங்கே மொழிப் பிரச்னை பற்றி ஒரே விதமான ராகத்தை இசைத்திருக்கிறார்கள். நான் அதிலிருந்து சற்று மாறுபடுகிறேன். இந்தி மொழித் திணிப்புப் பிரச்னையில் இளைஞர்கள், மாணவர்கள் உணர்ச்சி வசப்பட வேண்டாம். அண்ணாவின் அரசை நடத்தும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவரின் ஆட்சிக் காலத்திலே அதற்காக யாரும் அஞ்சவோ மிரளவோ தேவையில்லை. 'எப்பக்கம் வந்து புகுந்துவிடும்-இந்தி எத்தனைப் பட்டாளம் கூட்டி வரும்?' என்று அன்று புரட்சிக்

கவிஞர் பாடிய பாடல் இன்றைக்கும் பாடப்படுகிற பாடல் தான் என்பதை நினைவில் வையுங்கள். அன்புகூர்ந்து உணர்ச்சி வசப்படாதீர்கள். அந்த நிலைக்கு நம்மை யாரும் இழுத்துச் சென்றுவிட முடியாது. நடப்பது இந்தித் திணிப்பை ஆதரிக்கிற ஆட்சியல்ல. இந்தி மொழி ஆதிக்கம் தமிழகத்தில் ஏற்படாத வாறு வாசற்படியிலேயே தடுத்து நிறுத்தப்படும்.

''அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி உள்ள வரை தமிழகத்தில் இந்தித் திணிப்பை யாராலும் செய்து விட முடியாது. இந்தி மொழி இங்கே ஆதிக்கம் பெற்றுவிட முடியாது. பேரறிஞர் அண்ணா படத்தை, புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் படத்தைச் சான்றாக வைத்து இதைச் சொல்கிறேன்.

''பஞ்சாபில், அசாமில், மேற்கு வங்கத்தில், குஜராத்தில் என இந்தியாவில் உள்ள பல மாநிலங்களில் நாட்டு ஒற்றுமைக்குப் பாதகமான பல்வேறு பிரச்னைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்திய ஒற்றுமை ஒரு கேள்விக் குறியாக இருக்கிறது. அதற்காக எத்தனை உயிர்களைப் பலிகொடுக்கப் போகிறோமோ தெரியாது. ஏற்கெனவே பிரதமர் இந்திரா காந்தியைப் பலி கொடுத்துவிட்டோம். இந்த நிலையில, பிரதமரின் உறுதிமொழியையும் மீறித் தமிழ்நாட்டில் இந்தியைத் திணிக்க முயலுவது வேதனையளிக்கிறது. பிரதமான் ஆணைப்படி இது நடக்கிறது என்று நான் சொல்ல மாட்டேன். இப்படிச் செய்தால் அவர் மகிழ்ச்சியடைவார் என்று கருதும் சில அதிகாரிகளால், முக்கியஸ்தர்களால் ஏற்படுகிற பிரச்னையே இது.

''தமிழகம் அமைதி கொஞ்சும் பூக்காடாக இருக்கிறது. நான் மத்தியில் இருப்பவர்களைக் கேட்கிறேன் - அண்ணா வழி நடக்கும் எங்கள் புரட்சித் தலைவர் காலத்திலே ஒற்றுமை காணாமல் வேறு யார் காலத்திலே முயலப் போகிறீர்கள்? இந்திய ஒருமைப்பாட்டைப் பற்றிக் கவலைப்படாமல், யார் தூண்டுதலிலோ - எங்கே சந்து கிடைக்கும் என்று மூட்டைப் பூச்சிபோல் இந்தியை ஒட்ட வைக்கப் பார்க்கிறீர்களே, இது முறைதானா? புதிய தொல்லைகளை நீங்கள் விலை கொடுத்து வாங்க வேண்டாம். தமிழகத்தில் வீரத்திற்குப் பஞ்சமில்லை. தமிழ்ச் சமுதாயம் அடக்கத் தோடிருக்கிறதே தவிர, அடங்கிப் போய் விடவில்லை; தூங்கிக் கொண்டிருப்பதாக எண்ணி, துடையிலே கயிறு திரித்து விடலாம் என்று மட்டும் கருதி விடாதீர்கள். ஒற்றுமை என்பது மன உணர்விலே உண்டாக வேண்டுமே தவிர, நான் அடிமைப் படுத்துவேன், நீ அடிமையாக இரு என்றால் ஒற்றுமை வராது.

''அரசியல் சாசனத்தில் இந்திக்கு ஆட்சிமொழி அந்தஸ்து இருப்பதால், இந்தி மொழியை எல்லோரும் ஏற்றாக வேண்டும் என்று மத்திய அரசில் உள்ளவர்கள் கூறினால் ஆட்சிமொழி அந்தஸ்தை இந்தி மொழி இழக்கும் வகையில் சட்டத்தில் மாற்றம் கொண்டு வருவதற்கான வேலைகளில், இந்தி பேசாத மாநிலத்தினர் ஈடுபட நேரிடும்.

''அன்று சத்தம் போட்டு இந்தித் திணிப்பைத் தடுத்தோம். இன்றைக்குச் சட்டம் போட்டுத் தடுப்போம். சட்டம் போடுகிற இடத்திலே புரட்சித் தலைவர் இருக்கிறார். ஆகவே, நம்மை அறியாமல் இந்தி இங்கே நுழைந்து விடாது; நுழைந்து விடாது, நுழைந்து விடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்''. மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இவ்வாறான தமது உரைக்குப் பின்னர், ஏழை எளிய மக்களுக்கு அரசு மூலமான கருவிகள்-உதவித் தொகைகள் வழங்கினார்.

**அரசு உதவி**

வழங்கப்பட்ட உதவிகள் விவரம் வருமாறு:

*சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 9 பேருக்கு மரக் கன்றுகள் அளிக்கப்பட்டன.

*வேலை வாய்ப்பற்ற 193 பேருக்கு ரூ. 51,225 உதவித் தொகை வழங்கப்பட்டது.

*மாணவ, மாணவிகள் 250 பேருக்கு இலவசப் புத்தகங்கள் தரப்பட்டன.

*ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஆடுவளர்க்க, 15 பேருக்கு ரூ. 82,500 கொடுக்கப்பட்டது.

*வேளாண் பயிருக்குத் திட்டத்தின்கீழ், 5 பேருக்கு ரூபாய் 55,000 கடனளிக்கப்பட்டது.

*ஆதிதிராவிடர் 21 பேருக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டது.

*35 பேருக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டது.

*ஒருவருக்கு நிலப்பட்டா கொடுக்கப்பட்டது.

*குடும்பநல நிதி ஒருவருக்கு ரூ. 20 ஆயிரம் அளிக்கப்பட்டது.

—பின்னர், நவரசம் ஜி.கே. எஸ். குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

விழா முடிவில், மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு பி. சுப்பையா நன்றியுரை கூறினார்.

—நமது செய்தியாளர்



தந்தை பெரியார் அவர்களின் 108-வது பிறந்த நாள் விழாவும், பேரறிஞர் அண்ணா அவர்களின் 78-வது பிறந்த நாள் விழாவும் 19-9-86 அன்று சென்னையில் கொண்டாடப்பட்டது. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு அ. அருணாசலம் அவர்கள் கலந்து கொண்டு தலைவர்களின் திருவுருவப்படங்களைத் திறந்து வைத்தார்.




# கலைவாணர் நினைவு நாள்

ஆகஸ்ட் 30-ஆம் நாள் மாலை சென்னை கலைவாணர் அரங்கில், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் நினைவு நாள் விழா இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்ற இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் கவிஞர் வாலி தமது உரையில் குறிப்பிட்டார்:

''வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்து இன்னும் நமது மனத்தில் நிறைந்திருப்பவர் கலைவாணர். தமிழ்ப் பேரறிஞர்களான அண்ணா, டி. கே. சி. ராஜாஜி, திரு. வி. க. போன்ற பெருமக்களுடன் தொடர்பு கொண்டிருந்தவர் கலைவாணர். மக்களுக்காக வாழ்ந்தவர் - மக்களுக்கு அள்ளித் தந்தவர் கலைவாணர்.''

தலைமை ஏற்ற தமிழ்வளர்ச்சி பண்பாட்டுத்துறைச் செயலர் திரு ஒளவை நடராசன் தமது உரையில் குறிப்பிட்டார்:

''உலகத்தில் உள்ள 160 நாடுகளில் வாழும் பல கோடிப் பெருமக்களுக்கு நடுவில் சிரிப்புடன் சிந்தனையை வழங்கிய 2 பேருக்கு மட்டும் சிலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒருவர் மேல்நாட்டு நடிகர் சார்லி சாப்ளின்; மற்றவர் நமது கலைவாணர்.

''கலைவாணரின் பணியினால் கலை உலகுக்கு கம்பீரம்-கண்ணியம் - மதிப்பு - புகழ் - சிறப்பு ஏற்பட்டுள்ளது.

''சிலகாலத்திற்குமுன்பு, நகைச்சுவை நடிகரை விகடகவி, விதூஷகன், Jester, Joker, Hilarious Comedian என்று சொல்லி வந்தார்களே தவிர, தலைமை நடிகருக்கு நிகராக அவரை நினைப்பது கிடையாது.

''நகைச்சுவை, சிறந்த கலை. உருவத்தை மாற்றி அமைத்துக் கொள்வதன் மூலம் நகைச்சுவையை உருவாக்கலாம். உடல் ஊனத்தை - குறைபாட்டைப் பயன்படுத்தி நகைச்சுவையை உருவாக்கலாம். பிறரைத் துன்புறுத்துவதன் மூலம் நகைச்சுவைக் காட்சியை அமைக்கலாம். உடல் பருமனை அடித்தளமாக வைத்து நகைச்சுவையை ஏற்படுத்தலாம். கோமாளித்தனத்தை வைத்து நகைச்சுவையை உருவாக்கலாம்.

''ஆனால் கலைவாணர் அவர்கள் ' நானும் கோமாளிதான் ' என்று சொல்லி ' நாட்டைச் சீர்திருத்தும் நாகரிகக் கோமாளி ' என்று குறிப்பிட்டார்.

''பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு நகைச்சுவையின் மூலம் நல் வழி காட்டி மகத்தான மாற்றத்தைத் தோற்றுவித்தவர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்தான். பிறர் மனத்தைப் புண்படுத்தாமல், பண்படுத்துகின்ற முறையில் நகைச்சுவையைக் கையாளும் கலை அவரிடம் நிறைந்திருந்தது''.

அடுத்து உரையாற்றிய திரு வே. நாராயணன் குறிப்பிட்டார்:

''கலைவாணரின் நினைவுநாள் விழாக்கள் வெற்றிகரமாக அமைவதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தவர் நமது மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர் அவர்கள் தான்.

''பழங்கலைகளின் பண்பு கெடாமல், அவற்றைப் புதுமைப்படுத்தி மக்கள் மன்றத்திற்குத் தந்தவர் கலைவாணர்.

''அவர் நடத்திய கிந்தனார் கதாகாலட்சேபம், தெருக்கூத்து, வில்லுப்பாட்டு ஆகியவை பழமையைப் போற்றுகின்ற விதத்தில் அமைந்துள்ளன.''

திருக்குறள் நெறிபரப்பு மையத்தின் இயக்குநர் திருக்குறளார் வீ. முனிசாமி அவர்கள் தமது உரையில் தெரிவித்ததாவது :

''மனிதனை மகிழ வைக்கின்ற கலை நகைச்சுவை. அந்தக் கலையை கலைவாணர் என்.எஸ் கிருஷ்ணன் தக்க வகையிலே பயன்படுத்தி மக்களை மகிழ்ச்சியுடன் வாழச் செய்தவர்.

'இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை' என்ற பாரதியின் வாசகத்திற்கு இலக்கணமாக இருந்தவர் கலைவாணர். அவர் ஒரு தத்துவமாக விளங்கினார்.''



கலைவாணர் நினைவாகப் பணமுடிப்புப் பெற்ற கலைஞர்கள்

திருமதி கே. எஸ். அங்கமுத்து
திருமதி சி. கே. சரஸ்வதி
திருமதி கே. எம். சரோஜா (சேலம்)
திரு டி. கிருஷ்ண அய்யங்கார்
திரு கே. ஏ. சொக்கலிங்க பாகவதர்
திரு எஸ். எஸ். மணிநாதன்
திரு எம். ஜி. முருகன்
திரு ஏ. எம். நாராயணன்
திரு எஸ். பி. நாகராஜன்
திரு எஸ். ஆர். கோபால்

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி திரு கே. எஸ். வெங்கட்ராமன் குறிப்பிட்டார்:

''கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஒரு நகைச்சுவைப் பிறவியாகவே விளங்கியிருக்கிறார். அவரது கார் ஒரு முறை கீழே சாய்ந்து விழுந்த போது அதனைப் பார்த்தவர்கள் எல்லாம் 'என்ன இது' என்று வினவிய போது, 'ஒன்றுமில்லை காரின் அடி பாகத்தை இதுவரைபார்த்ததில்லை! அது எப்படியிருக்கும் என்பதைப் பார்க்கலாமே என்ற ஆர்வத்துடன் காரைச் சாய்த்து வைத்திருக்கிறோம்' என்றாராம்''.

அடுத்து மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சிறப்புரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்தார்:

''தமிழ்நாட்டில் சிரிக்க வைப்பவர்கள் பல பேர் இருந்தனர். ஆனால் சிரிக்கவைத்துச சிந்திக்க வைப்பவர்கள் மிகச் சிலர்தான் இருந்தனர். அத்தகையவர்களில் கலைவாணர் என். எஸ் கிருஷ்ணன் சிறப்பிடம் பெறுகிறார். அவர் ஈடு செய்ய முடியாத ஒரு பெருஞ் செல்வமாகத் திகழ்ந்தார்.

''மிருகங்களுக்குச் சிரிக்கத் தெரியாது. ஆனால் மனிதனுக்குத்தான் சிரிக்கத் தெரியும். மனிதனுக்குத்தான் மனம் இருக்கிறது. அதனால்தான் அவன் சிரிக்கிறான்'' என்று சொன்னவர் கலைவாணர்.

''சிரிப்பின் மூலம் உடல் நலம் பெறலாம். உள்ளம் மலராமல் முகம் மலராது. சிரித்தால் முகம் அழகாக இருக்கும்.

''ஒருத்தர் தனியா சிரிச்சிக்கிட்டிருக்கிறாரு. அப்படின்னா என்ன அர்த்தம்! அவர் கீழ்ப்பாக்கத்துக்குப் போக வேண்டியவர்னு அர்த்தம். ஒரு மனிதன் தனியாக அழலாம். அழுதுவிட்டுக் கொஞ்சநேரம் தூங்கிவிட்டு, மறுபடியும் எழுந்து அழலாம். யாரும் தவறாக எண்ண மாட்டார்கள். ஆனால் தனியாக அமர்ந்து ஒருவர் சிரிப்பாரேயானால் அவரைக்குறித்துச் சந்தேகம் ஏற்பட்டு விடும் மற்றவர்களுக்கு!

''சிரிப்பதற்கு மனம்தான் காரணம். துன்பம் - இன்பம்-சினம் அழுகை - இவற்றிற்கெல்லாம் மனம்தான் காரணம்.

''சிரிப்பது வல்லமை: அதைவிட வல்லமை வாய்ந்தது பிறரைச் சிரிக்க வைப்பது. பிறரைச் சிரிக்க வைக்கும் பணியைச் செய்து சிறப்படைந்தார் கலைவாணர்.

''கலை கலைக்காகவே என்று சிலர் சொல்வதுண்டு. அதனை அவர் ஏற்றுக் கொள்வது கிடையாது. உணவு உணவுக்காகவே என்பது போல இருக்கிறது இது என்பார். கலை வாழ்க்கைக் காகவே - உணவும் வாழ்க்கைக் காகவே என்பார்.

''கலைவாணர் ஒரு சகாப்தம். அந்த சகாப்தம் அவரோடு முடிந்துவிட்டது. இனித் தோன்றுவது அரிதினும் அரிது' என்று குறிப்பிட்டார் பேரறிஞர் அண்ணா.

''நாடெல்லாம் புகழும் நல்ல-தரமான நகைச்சுவையை — உயர்ந்த நகைச்சுவையை வழங்கியவர் கலைவாணர்.'

ஆண்டுதோறும் கலைவாணர் நினைவுநாள் கொண்டாடப்பட்டு வருகிறது. என்றாலும் இந்த ஆண்டு ஒரு புதுமை இடம் பெற்றது.

அதாவது நலிவடைந்த நகைச்சுவை நடிக, நடிகையர் 10 பேர்களுக்கு, ஆளுக்கு 2 ஆயிரம் ரூபாய் வீதம் பணமுடிப்பு வழங்கப்பட்டது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், பண முடிப்பை வழங்கினார்.

விழாத் தொடக்கத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் கலைவாணர் நினைவு நாள்விழா குறித்து ஒரு கருத்தை வெளியிட்டார். அது வருமாறு:

''பொதுவாக, பிறந்தநாள் விழாக்கள் தான் கொண்டாடப் படுகின்றன. நினைவுநாள் என்பது நினைவு கூர்வதற்கு உரியநாள். நமக்கு ஏற்பட்ட இழப்பை—துக்கத்தை-நினைத்துப் பார்க்கின்ற நாளே தவிர கொண்டாடி மகிழ்வதற்குஉரியதல்ல! அதனால் கலைவாணரின் நினைவு நாளைக் கொண்டாடுவதைவிட - பிறந்த நாளைக் கொண்டாடுவதே சாலச் சிறந்தது.''

இயல் இசை நாடக மன்றச் செயலர் திரு வி. எஸ். ராகவன் அவர்களின் நன்றியுரைக்குப் பின்னர் நடைபெற்ற டணால் தங்கவேலு, எம் சரோஜா குழுவினரின் 'சப்தஸ்வரங்கள்' நாடகம் பொது மக்களைச் சிரிப்பு வெள்ளத்தில் மூழ்கடித்தது.

—நமது செய்தியாளர்



# பாண்டியர்கால ஊற்றுக்கிணறு!

பழங்காலத்தில் தமிழகத்தை ஆண்ட அரசர்கள் மக்களின் குறை தீர்க்கச் செய்த அறப்பணிகள் பலவாகும். மக்களுக்காக அன்னசாலைகள், சத்திரங்கள், நீர் நிலைகள், கல்விச் சாலைகள், மருத்துவச் சாலைகள் போன்றவற்றை ஏற்படுத்தியுள்ளார்கள். இவற்றைக் கல்வெட்டுக்கள், இலக்கியங்கள் முதலிய பல்வேறு சான்றுகளின் மூலம் அறிய முடிகின்றது.

இவற்றில் பண்டைய அரசர்கள் பாசனத் திற்காகவும் குடிநீருக்காகவும் செய்த பணிகள் இன்றும் குறிப்பிடத்தக்க வகையில் தமிழ் நாட்டில் ஆங்காங்கே நிலைத்து நின்று வரு கின்றன. இவை ஆயிரம் ஆண்டுகளாகியும் இன்றும் மக்களுக்குப் பயன்படும் வகையில் நிலைத்து நிற்பது குறிப்பிடத்தக்கது. மழைக் காலத்தில், மழை நீர் ஒன்று சேரும் பகுதி களை ஆய்ந்தறிந்து அப்பகுதிகளில் பாசனத் திற்காகப் பெரும் குளங்களை வெட்டியுள்ள னர். அவற்றில் பெரும் கரைகளை எடுத்து மடைகளையும் கலிங்குகளையும் அமைத்துச் சீரிய முறையில் நீர்ப்பாசனம் செய்திருக்கின்ற னர். பல இடங்களில் நீர் நிலைகளைப் பல வகையாகப் பிரித்து இருக்கின்றனர். குடி நீர்க்குளம், நீர்ப்பாசனக்குளம், ஆடுமாடு களுக்கான குளம் என்று பிரித்து வைத்தனர். இவற்றை வேறு வகைக்காகப் பயன்படுத்தி யோர் தண்டனைக்குள்ளாக்கப்பட்டனர். இக் குளங்களைச் செப்பனிடும் பணிகளும் முறை யாகஅக்காலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. அரசும் ஊர்ச்சபையும் இதற்குத் தேவையான நிதி உதவியும் அளித்துள்ளன. பாண்டிய நாட்டில் விஜய நாராணம், குள்ளபுரம் போன்ற பகுதிகளில் குளங்களில் இருந்து பிடிக்கப்பட்ட மீன்களின் மூலம் அவை சீர் படுத்தப் பெற்றுள்ளது தெரிய வருகிறது.

மலையடிவாரங்களில் உள்ள நீர்ஊற்றுக் களைப் பயனுள்ள வகைகளில் மாற்றி, அவ் வூற்றுக்களிலிருந்து நீர் வீணாகாமல் ஊர் மக்களின் குடிநீருக்கும் பயன்படுத்த ஏற் பாடுகள் அக்காலத்தில் செய்யப்பட்டுள்ளன. கொங்கு நாட்டில் உரோகடம் போன்ற இடங் களில் சுடுமண் குழாய்கள் மூலம் குளங்களில் இருந்து ஊருக்கு நீரை எடுத்து வந்துள்ளனர். அக்குழாய்களின் மீது தமிழ் எண்களை எழுதி முறையாக அவற்றைப் பூமிக்கடியில்புதைத்து தண்ணீர் எடுத்துச் சென்று இருப்பது குறிப் பிடத்தக்கது. பல இடங்களில் குடிநீருக்காகக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. பாண்டிய நாட்டில்இது போன்ற பழமையான கிணறுகள் இன்றும் பாண்டியன் கிணறு என்று அழைக்கப் பட்டு வருகின்றன. இன்றும் ஊருக்கு உண் ணும் நீரை இவை ஊட்டி வருகின்றன.

ஆற்றோரங்களிலும் கடலோரங்களிலும் இருந்த பகுதிகளில் சுடுமண் உறைகள் பதித்த உறைக்கிணறுகள் குடிநீருக்குப் பயன்படுத்தப் பட்டுள்ளன. இவ்வழக்கம் தமிழ்நாட்டில் சங்ககாலம் தொட்டே இருந்து வந்துள்ளதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. பட்டினப்பாலையில் உறைக்கிணறுகள் இருந்த பகுதி உறைக்கிணற்றுப் புதுச்சேரி என்று குறிப்பிடப்படுகின்றது.

தமிழகத்தில் அக்காலத்திலேயே நிலத் தடியில் நீர் உள்ள பகுதிகளைக் கண்டறியும் வல்லுநர்கள் இருந்துள்ளார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக அக்காலத்தில் எழுதப் பட்ட ''கூவ நூல்'' விளங்குகின்றது. இது போன்ற நூல்களின் துணை கொண்டும் வல்லு நர்களைக் கொண்டும் கடும் வறட்சி நிலவிய காலத்தில் குடிநீருக்காக நிலத்தடியில் இருந்த நீர்ஊற்றுக்களைக் கண்டறிந்து அவ்விடங்

# கற்கால மனிதன் வாழ்ந்த இடம் கண்டுபிடிப்பு!

10 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு, கற்கால மனிதன் வாழ்ந்த இடம் சோவியத் நாட்டில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதுவரை கண்டுபிடிக்கப்பட்டவற்றில் இது தான் மிகவும் பழமையானது

உக்ரேன் விஞ்ஞானப் பேரவையைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், ட்ரான்ஸ்கார்பதியாவில் உள்ள கொரோலிவோ கிராமத்துக்கு அருகில் அந்த இடத்தைக் கண்டுபிடித்தனர்.

கற்களால் ஆன ஏராளமான கருவிகள் அங்கே கண்டெடுக்கப்பட்டன. சோவியத் நாட்டின் ஐரோப்பியப்பகுதியில், இதுவரை கண்டெடுக்கப்பட்ட கற்கருவிகளில் இவைதான் புராதனமானவை. ஆனால் இவற்றை உருவாக்கிய கற்கால மனிதனின் எலும்புகள் எதுவும் அங்கே கிடைக்கவில்லை. இந்தக் கற்கருவிகளை, ஆப்பிரிக்காவில் மனித எலும்புகளுக்குப் பக்கத்தில் கண்டெடுக்கப்பட்ட கற்கருவிகளுடன் ஒப்பிட்டுப்பார்த்த போது, அவை தீயின் பயனை அறிந்திருந்த புராதன மனிதனுடையவை என்பது தெரிய வந்தது.

---

களில் கிணறுகளையும் குளங்களையும் தோற்றுவித்திருக்கின்றனர். இவ்வாறு எடுக்கப்பட்ட ஊற்றுக் கிணறுகளும் குடிநீர்க் குளங்களும் சில காலத்திற்கு மட்டுமே பயன்படுவதற்கு என்றில்லாமல், நீண்ட காலம் பயன்படும் வகையில் தொலை நோக்குடன் தோற்றுவிக்கப்பட்டுள்ளதற்குப் பல கல்வெட்டுச் சான்றுகள் தமிழகத்தில் காணப்படுகின்றன.

இதற்கு எடுத்துக்காட்டாக, நெல்லை மாவட்டத்தில் சங்கரன் கோவில் வட்டத்திலுள்ள மலையடிக் குறிச்சி என்னும் ஊரிலுள்ள பாண்டியர் காலத்துப் பழமையான ஊற்றுக் கிணறு விளங்குகின்றது. இவ்வூரில் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பாண்டியமன்னன் செழியன் சேந்தன் எடுப்பித்த குடவரைக் கோவிலுக்கு அருகில் மலையடிவாரத்தில் கி.பி. 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அப்பகுதியை ஆண்டு வந்த சுந்தர பாண்டியன் ஆட்சியில் மலையடிக்குறிச்சி மக்களுக்குப் பயன்படும் வகையில் இது தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதனை, சுந்தர பாண்டியனின் அதிகாரியாக விளங்கிய தனியானன் திருவெண்காடுடையான் தமிழ் தரையன் என்பான் சுந்தரபாண்டியனின் ஆட்சியாண்டில் [1314 ஆம் ஆண்டில்] எடுப்பித்துள்ளார். மலையடிக்குறிச்சி ஊற்றுக் கிணறு என்று இதற்குப் பெயரிடப்பட்டிருக்கிறது. இன்றும் அழியாது மலையடிக் குறிச்சியில் விளங்கும் அக்கிணற்றை அகப்பைக் கிணறு என்று அவ்வூர் மக்கள் அழைத்து வருகின்றனர். அக்கிணற்றின் அருகில் நடப்பட்டுள்ள தமிழ்க் கல்வெட்டு மூலம் ஊற்றுக் கிணற்றின் தோற்றம் பற்றிய செய்தியை அறிய முடிகின்றது. இதில் வியப்பு என்னவென்றால், இத்துணை ஆண்டுகள் கடந்த பின்பும் கூட இவ்வூற்றுக் கிணறு மக்களுக்கு வற்றாமல் நீரை வழங்கிவருவதுதான். தொலை நோக்குடன் வெட்டப்பட்ட இவ்வூற்றுக் கிணறு அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபி போல் இன்றும் அவ்வூர் மக்களுக்கு நீரை அளித்து வருகின்றது!



மலையடிக்குறிச்சி ஊற்றுக் கிணற்றில் மக்கள் நீரை மேலிருந்து இறைத்துத்தொல்லைப்படக் கூடாது என்பதற்காக அதனைத் தோற்றுவித்த திருவெண்காடுடையான் சரிவான படிக்கட்டுக்களையும் அவ்வூற்றுக் கிணற்றுக்குள் செல்லும் வகையில் அமைத்துள்ளான். நீர் குறைவாக இருக்கும் காலத்தில் கூட அகப்பையினால் இவ்வூற்றில் இருந்து நீர் எடுத்துள்ளார்கள் என்பதால் இதனை அகப்பைக் கிணறு எனவும் மக்கள் அழைத்து வருகின்றனர். பிற்காலத்தில் இப்படிக்கட்டு அகற்றப்பட்டு கிணற்றைச் சுற்றிலும் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இக்கிணற்றருகில் கம்பீரமாக நின்று பறைசாற்றும் பாண்டியன் கல்வெட்டு மூலமும் இன்றும் இந்த ஊற்றுக் கிணற்றின் பழமையையும் பெருமையையும் அறிய முடிகின்றது.

பல நூறு ஆண்டுகள் கடந்த பின்பும் இவ்வூற்றுக் கிணறு எந்தநோக்குடன்தோற்றுவிக்கப்பட்டுள்ளதோ அந்த எண்ணத்தையும் நம்பிக்கையையும் நிறைவேற்றி வருவது தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

**நா. சுலைமான்,**
**காப்பாட்சியர்,**
**அரசு அருங்காட்சியகம்,**
**மதுரை.**



# நூல் நயம்

> ‘நூல் நயம்’ பகுதிக்குப் புத்தகங்கள் அனுப்புவோர் தவறாமல் இரண்டு படிகளை அனுப்புதல் வேண்டும். அரசியல், சாதிமதங்கள் தொடர்பான நூல்களுக்கு மதிப்புரை வழங்கப்படுவதில்லை.
>
> — ஆசிரியர்

## அறிஞர் அண்ணா வாழ்க்கையில் சுவையான சம்பவங்கள்

தொகுப்பு: பொன். கு. கோதண்டபாணி
வெளியீடு: அபிராமி பப்ளிகேஷன்
307, லிங்கிசெட்டி தெரு.
சென்னை-600001

விலை: ரூ.11 பக்கம்: 152

அண்ணல் காந்தியடிகள் தனது வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம் என்று குறிப்பிட்டார். அண்ணாவின் வாழ்க்கையும் அப்படியே விளங்கியது. அவரது வாழ்க்கையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பல,வரலாறாகியுள்ளன.

அண்ணாவிடம் மிகவும் ஈடுபாடு கொண்ட இந்நூலாசிரியர் அண்ணாவின் வாழ்க்கையில் நடைபெற்ற எண்ணற்ற நிகழ்ச்சிகளில், 150 நிகழ்ச்சிகளைத் தொகுத்து நூலாகத் தந்திருக்கிறார்.

அண்ணாவின் அரும்பண்புகள், அவர் அனுபவித்த துன்பங்கள், அவரால் உதவி பெற்ற பெருமக்கள், அவர் சந்தித்த அனைத்திந்தியத் தலைவர்கள், அவர் ஆற்றிய அரசியல் பணிகள் இப்படிப் பல்வேறு செய்திகளை இந்நிகழ்ச்சிகளின்வாயிலாகஅறிந்துகொள்ள முடிகிறது. ஒருவகையில் இது அண்ணாவின் வாழ்க்கை வரலாற்று நூலாகத் திகழ்கிறது. சில இடங்களில் அண்ணாவின் அனுபவங்கள் சில அவரது மொழியாலேயே சொல்லப்பட்டுள்ளதால்-ஒருவகையில் இது அண்ணா தாமே எழுதிய தன் வரலாற்று நூலாகவும் திகழ்கிறது.

நிகழ்ச்சிகளை எளிய நடையில் சுவை ததும்பும் வகையில் எழுதியிருக்கிறார் நூலாசிரியர். அண்ணாவைக் குறித்து அறிந்து கொள்ள விரும்புவோர்க்கு இந் நூல் அரிய விருந்தாகும்.

— தமிழ்ப்பித்தன்

## நமக்காக வாழ்பவர்கள்

ஆசிரியர்: புலவர் அண்ணாமலை
வெளியீடு: பம்மி பதிப்பகம்,
32, வெங்கட்ரங்கம்தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.

விலை: ரூ.8 பக்கம்:88

ஆசிரியர், தபால்காரர், செவிலியர், மருத்துவர் ஆகிய ஐவர், நமக்குப் பயன்பட்டுவரும் செய்தியை உரையாடல் பாணியில் தெரிவித்திருக்கிறார் நூலாசிரியர். வயது வந்தோருக்குப் பயன்படும் வகையில் இந்நூல் எழுதப்பட்டிருப்பினும் அனைவரும் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய தகவல்கள் இதில் உள்ளன. அறிவியல், சமுதாய இயல், குற்றஇயல் செய்திகள் எல்லாம் இந்நூலில் சொல்லப்பட்டிருக்கின்றன. எளிய நடை நூலுக்குச் சிறப்புச் சேர்க்கிறது.

—எஸ். எஸ். சுந்தரம்

## சாதகப் பறவைகள்

ஆசிரியர்: இளசை எஸ். சுந்தரம்
வெளியீடு: புகழ்ப் பதிப்பகம்
190, லிங்கன் தெரு.
கருணாநிதி நகர்
திருச்சி-620 021

விலை: ரூ. 12 பக்கம்.124

இளசை எஸ்.சுந்தரம் சிறந்த படைப்பாசிரியர்; சிந்தனையாளர். தமிழகச் சிற்றூர்களில் நடக்கும் யதார்த்த நிகழ்ச்சிகள் அவரது கதைகளில் குறிக்கப்பட்டுள்ளன.

மனித சமுதாயம் சென்றுகொண்டிருக்கும் பாதையினைத் தெளிவாக்குவது - சீர்திருத்த வேண்டிய மனித உள்ளங்கள், சீர்தூக்கிப் பார்க்கக் கூடிய கருத்துக்களைச் செம்மையாக உரைப்பது என்ற போக்கில் அவரின் எழுத்துக்கள் அமைந்துள்ளன.

உணர்ச்சிபூர்வமாக மனிதர்களோடு ஒன்றிய முறையில் சமுதாயக் கோணல்கள் உணர்த்தப்படுகின்றன.

‘பழி ஓரிடம் பாவம் ஓரிடம்’ என்பார்கள். சமுதாயத்தின் மேல் மட்டத்திலிருப்பவர்கள் செய்யும் பாவங்களும் அவற்றை ஏற்றுத் துன்புற வேண்டிய நிலையிலுள்ள ஏழை மக்களின் மாற்றவொண்ணாத மனக்கவலைகளும் ‘பலியாடுகள்’ வாயிலாகத் தெளிவாகச் சொல்லப்படுகின்றன. கனவில் கூடத் தவறிழைக்காத உள்ளங்கள் ஏழ்மையில் வாடினால், அவைபெறும் பரிசுகள் திருடன், ரெளடி, அயோக்கியன் என்ற பட்டங்களும், அடி உதைகளும். இதை மிக நிதர்சனமாகக் காட்டியுள்ளார் ஆசிரியர் ‘பலியாடுகள்’ மூலம்.

‘எங்கள் தாய்’ என்ற கதை பாரதநாட்டின் ஒருமைப்பாடு பற்றியது. இந்தியாவின் எந்தக் கோடியில் பிறந்திருந்தாலும் அவர்களெல்லாம் உடன் பிறந்தவர்கள்தாம் என்ற கருத்து வலியுறுத்தப்படுகின்றது.

‘சாதகப் பறவைகள்’ என்ற கதை, மாற்றான் சொத்துக்கு ஆசைப்பட்டு, பாதை தவறிய கணவனைச் சாதுரியமாகத் திருத்தும் மனைவியை வெகு அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

# லைப்பாய் இருக்குமிடம்... அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்!




## லைப்பாய்

அழுக்குடனே கிருமிகளை அறவே கழுவிக் களைகிறது

LINTAS L 95 2317 TM.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

சோதிட நம்பிக்கை பற்றியது 'சருகுகள்'. 'புதிய தளிர்கள்' நேர்மையை விளக்குகிறது. 'கண்மாய் அழிகிறது', 'வெள்ளைச் சாமி மனிதனாகியபோது' இரண்டும் கருத்துள்ளவையே.

'ஊட்டு' — இறுதிக் கதை. இன்றும் சில ஊர்களில் நடைபெறும் தீண்டாமைக் கொடுமையை விளக்குகின்றது. நெல்லை வட்டாரப் பேச்சு வழக்கு கதைகளில் பெரிதும் இடம் பெற்றுள்ளது.

கதைகள் அனைத்திலும் சமுதாயக் குறைகளும் நிறைகாணும் விழைவும் தீர்வு காணமுடியாத பிரச்னைகளும் விரவிக் கிடக்கின்றன. சிறப்பான தொகுப்பு நூல்.

—டாக்டர் சிவ அரசி முத்துக்காளத்தி

## போக்கிரிப் பண்ணைகள் கவிதை

ஆசிரியர் : பேராசிரியர் ப. லோகநாதன்
வெளியிட்டோர் : ஷெல்லி பதிப்பகம், வெல்பெக் அவுஸ், ஊட்டி — 643 001.

பக்கம் : 88 விலை : ரூ.7.50

புதுக்கவிதை நூல் இது. 'எங்களுக்கு ஆங்கில மோகம் கிடையாது; தமிழ் வெறியும் கிடையாது...' என்று எழுதுகிறார் நூலாசிரியர். புதுக்கவிதைக்கும் சில கட்டுப்பாடுகள் உண்டென்பார்கள் அத்துறை வல்லார். அப்படி எதுவும் கவிதைகளிலே காணப்படவில்லை.

சுந்தரம் பிள்ளையின் மனோன்மணீயம், மறைமலை அடிகளாரின் சாகுந்தலம், பாவேந்தரின் புரட்சிக்கவி, புலவர் குழந்தையின் இராவண காவியம், பாரதிபாடிய பாஞ்சாலி சபதம் எல்லாம் 'தமிழ்ப் பேராசிரியர்களின் ஒரிஜினாலிடிக்கு ஒரிரு மாதிரிகள்' என்று கேலி செய்கிறார்! அதே நேரத்தில் — தமக்கென முயலாது பிறர்க்கென முயலும்...இந்திரர் அமிழ்தம் இயைவது ஆயினும் இனிது எனத் தனியே உண்ணாதே! முனிவு கொள்ளாதே! துஞ்சாதே! பிறர் அஞ்சுவது அஞ்சு! புகழ்எனின் உயிரும் கொடு! பழிஎனின் உலகுடன் பெறினும் கொள்ளாதே!..... என்பன போன்ற பல புறநானூற்று அடிகளையும், அறம்பாட வந்த அறிஞன், தமிழ்த் திறம் பாட வந்த மறவன்; செந்தமிழ்த் தேனீ..பைந்தமிழ்த் தேர்ப்பாகன், புதுநெறி காட்டிய புலவன் போன்ற புரட்சிக் கவிஞரின் அடிகளையும் — வாராது வந்த மாமணி போன்ற பல பாரதியாரின் சொல்லாட்சிகளையும் தன்னுடையதே போல் மிக உரிமையோடு எடுத்தாண்டிருக்கிறார்!

'பூக்காரி' போன்ற இரண்டொரு இனிய கவிதைகளும் இந்த நூலில் காணப்படுகின்றன.

—இந்திரன்

## பூந்தோட்டம்

ஆசிரியர்: கலைமாமணி திருச்சி பாரதன்
வெளியீடு: சரவணா பிரசுரம், 2497, தெற்கு ராஜ வீதி, புதுக்கோட்டை-622001.

விலை : ரூ. 19 பக்கம்: 226

'தாயே வணக்கம்' என்ற அழகிய பாடலுடன் நூல் தொடங்குகிறது. பல தலைப்புகளில், பல்வேறு பொருள்களில் பாடல்கள் உள்ளன. எல்லாம் பூந்தோட்டத்தினுள் சிரிக்கும் பூக்களைப்போல விளங்குகின்றன.

மணம் தரும் மலர்க்கூட்டம், பறவைகள்,மிருகங்கள்,இயற்கைக் காட்சிகள், அறிவுரை அமுதம், தெய்வமும் தேசமும், கதைப் பாடல்கள் புதையல் என்று ஏழு பகுதிகளாக இப்பாடல் தொகுப்பு பிரிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் ஆடிப்பாடி மகிழ்வதற்கேற்ற வகையில் இனிய சந்தமுடன் பாடல்கள் விளங்குகின்றன.

குழந்தைப் பாடல்களாக இருப்பதால்,ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு படம் போட்டிருக்கலாம்.

--பொ. மறைமலை




## நிறவெறி ஒரு சாபக்கேடு

ஆசிரியர் : டாக்டர் பி. சிரஞ்சீவினி குமாரி
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41பி, சிட்கோ எஸ்டேட், சென்னை-600098.

விலை : ரூ. 10 பக் : 174

நிறவெறிக் கோட்பாடும் காலனியாதிக்கமும் என்று தொடங்கி, 20ஆம் நூற்றாண்டு அடிமைகள் வரை இந்நூல், நிறவெறியும், காலனியாதிக்கமும் இரட்டைக்குழந்தைகள் என்பதைக் கூறி அதன் கேட்டையும், பாதிப்பையும் மிக ஆழமாக விவரிக்கிறது.

மண்ணின் மைந்தர்கள் எங்கெங்கு, தலைமுறை தலைமுறையாக அடக்கி ஒடுக்கப்படுகின்றனர். காட்டுமிராண்டித் தனமாகநடத்தப்படுகின்றனர், மனித உரிமைகள் பறிக்கப்பட்டு விலங்கினும் கேடாக நடத்தப்படுகின்றனர்என்பதை ஆதாரங்களோடு, மனதைத் தொடும் வகையில் கூறி இருக்கிறார் ஆசிரியர்.

—அ. மருதவிநாயகம்

## காக்கை குருவி எங்கள் ஜாதி

ஆசிரியர்: கலைமாமணி டி.என். சுகிசுப்பிரமணியன்,
வெளியீடு: அமிழ்தம் பதிப்பகம், 14, முத்துப்பிள்ளை தெரு, வ.உ.சி.நகர்,வேலூர்; வடஆர்க்காடு-632 001

விலை: ரூ.8 பக்கம்: 96

தம் உள்ளத்தில் ஊறிய சிந்தனைகளைப் பதினைந்து சிறு கட்டுரைகளாக எளிய நடையில் எடுத்துரைத்துள்ளார் ஆசிரியர். 'தீமை தரும் தின்பண்டங்கள்' எனும் கட்டுரை, வெளியில் விற்பனை செய்யப்படும் தின்பண்டங்களினால் ஏற்படும் தீமைகளைச் சுட்டிக் காட்டும் விதத்தில் அமைந்துள்ளது. 'குழந்தைகளும் தொழிற்கல்வியும்' கட்டுரையில் இன்றைய சிறார்கள் தொழிற்கல்வி பயில வேண்டியதன் அவசியத்தை நன்கு உணர்த்தியுள்ளார். இந்நூல் குழந்தைகள் மட்டுமின்றிப் பெரியவர்களும் படிப்பதற்கு உகந்ததாகும்.

—கு. மல்லிகா

# சாக்ரடீசும் பெரியாரும்



கிரேக்க சாம்ராஜ்யத்தின் எழிலான பொன்னகரம் ஏதென்ஸ்! நல்ல கடற்கரை-நாற்புறமும் மணற்குன்றுகள்-எங்கும் பசுமை! எந்நிலத்தும் வளமை! மக்களோ மாவீரர்! ஆனால், அவர்களுள்ளத்தைக் கப்பிக்கொண்டிருந்ததோ மடமை இருள், மூட பக்தி!

இந்நிலைகளை மாற்றியமைக்க முனைந்தார் ஒரு முதுகிழவர் - சாக்ரடீஸ். அவர் வாழ்ந்த காலமோ 2300 ஆண்டுகளுக்கு முன்னாள்! பழமை இருளில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த கிரேககத்தை மாற்றியமைக்க விரும்பினார் அம்மூதறிஞர்; தான் சிந்திக்கக் கற்றுக்கொண்டிருந்த காரணத்தினால்!

காடு சுற்றவில்லை; தவம் கிடக்கவில்லை! நாடு சுற்றினார்; நகரஞ் சுற்றினார் -கடை வீதிகளிலே அலைந்தார்; சுருங்கச் சொன்னால் தான் நின்ற இடத்தையெல்லாம் நாட்டின் நலிவு பேசும் பொதுமேடையாக்கினார்! மக்கள் குழுமினர் முதலில்; பொதுக் குரல் என்ற காரணத்தால்! ஆனால் பேச்சின் தரம் கண்டு அவர்களில் சிலர் அஞ்சினர், ஓடினர் சிலர்; ஒதுங்கினர் பலர். எஞ்சியிருந்ததோ இளைஞர்கள் கூட்டம். எனவே உதிர்ந்து போன சருகுகளை, பழுத்த இலைகளை நீக்கி விட்டு இளம் தளிர்களான இளைஞர்களுக்கே இன்னுபதேசம் செய்தார் அந்த உலகின் முதலறிஞர்!

மதம், சமுதாயம், இதிகாசம், இலக்கியம், கலை, நாகரிகம் என்ற இதுபோன்ற பிரச்னைகளிலே தன் அறிவறிந்த உண்மைகளைத் தைரியமாக எடுத்துச் சொன்னார். எதிர்ப்பு கிளம்பியது....'சாக்ரடீஸ்' ஓர் வெடிக்கும் எரிமலையெனப் பிரகடனப்படுத்தப்பட்டார்! அதற்குக் கிடைத்த தீர்ப்போ மரணதண்டனை! ஆம். இறுதியில் ஒரு கோப்பை நஞ்சு; உண்மையை, பகுத்தறிவை, குழிதோண்டிப் புதைத்துவிட்டது. சாக்ரடீஸ் மறைந்தார். ஆனால் அவர் இதயமும் எண்ணமும் மறையவில்லை. இளைஞருலகின் கண்ணீரிலே தோய்ந்தூறி 2300 ஆண்டுகளுக்குப் பின்னர், இன்று புத்தம் புதிய பொலிவுடன் அது தமிழகத்திலே பிரதிபலிக்கக் காணுகிறோம்!

பெரியார் ராமசாமி, மூதறிஞன் சாக்ரடீஸன் மறு பதிப்பு. 2300 ஆண்டுகளாகப் புடம்போட்டு வார்த்தெடுத்த தங்கம். பகுத்தறிவில், சாக்ரடீஸைவிட ஒரு பிடி மிஞ்சியவர், பேச்சிலும் மனோ திடத்திலும் அப்படித்தான்! சாக்ரடீஸ் தன் கொள்கைகளைச் சொன்னார். புத்தரும் சொன்னார், வால்டேரும், இங்கர்சாலும், புருனோவும், பிராட்லாவும் கூடத்தான் அது பற்றிப் பேசினர். ஆனால் எவரும் இதுவரை இதற்கென நிலையான ஸ்தாபனங்கள் வைத்து, கட்டுக்கோப்பான தொண்டர்களை அமைத்து பகுத்தறிவை மட்டுமல்ல; அது சம்பந்தமான எதையுமே நாட்டில் பரப்பியதில்லை! உலகில் எந்த நாட்டிலும், இதுபோன்ற தீவிரத் தலைவனிருந்ததில்லை.

சாக்ரடீஸ் விஷமிட்டுக் கொல்லப்பட்டார். புத்தரும், நபியும், கல்லால் அடிக்கப்பட்டனர். ஏசுவோ சிலுவையில் அறையப்பட்டார். புருனோவோ தீயிலிட்டுப் பொசுக்கப்பட்டார். எல்லாம் மத தெய்வீக விஷயங்களில் தலையிட்டதால்தான்! ஆனால் பெரியாரோ அவர்கள் செய்ததை விட பதின் மடங்கு அதிகமாகச் செய்துவிட்டு இன்னமும் வாழுகிறார்.

உலகைத் திருத்த வந்த உத்தமர்கள் யாருமே உயிர் வாழ்ந்ததில்லை. உலகம் அவர்களை உயிர் வாழவிட்டதுமில்லை! ஆனால் இவரோ ஒரே வார்த்தையில் கூறுவதென்றால் பலர் தோற்ற இடத்தில் இவர் வெற்றி பெற்றார்; எடைக்கு எடை வெள்ளி தந்து பாராட்டப்படுகின்ற தமிழர் தலைவராக வாழ்கிறார். மடாலயங்கள்கூட பூரண கும்பமெடுத்து வரவேற்கின்றன.

இவர் செய்த இமாலயத் தவறு என்னவென்றால் இன்னும் நூறு வருடங்களுக்குப் பிறகு பிறக்க வேண்டியவர் இந்த நூற்றாண்டில் பிறந்ததுதான்!

பெரியார் ஓர் சமுதாயச் சிற்பி..பகுத்தறிவின் தந்தை - விலைமதிக்கவொண்ணாத அறிவொளி வீசும் நன்முத்து. அவரைப் புரியாதவர் முத்தெடுக்க ஆழ்கடலில் இறங்கப் பயப்படுவர். அவரைப் புரியாமல், புரிந்து கொண்டதாக நடிப்பவர் முத்தெடுத்துவந்ததாகக் கடலில் மூழ்கிப் பாசியை மட்டுமே கொண்டு வருபவர்! ஆனால் அவரைப் புரிந்தவரோ வெகு சிலர்தான்! வாழ்க அந்த சாக்ரடீசின் வாழையடி வாழை!

**நன்றி: கௌதமன், 'கலை' (1958)**

# இங்கர்சாலும் அண்ணாவும்



அமெரிக்கா தந்த அறிவுலக மேதை இணையில்லா சட்ட விற்பன்னன், தன்னிகரில்லா சொற்போர் மன்னன், ஈடில்லா எழுத்தரசன், சக்திமிக வாய்ந்த சிந்தனைச் சிற்பி, பகுத்தறிவின் புனித காவலன், வைதீகத்தின் பரம விரோதி ! மூடத்தனத்தின் கொடிய வைரி ! இளைஞர் உலகின் எழிலான அறிவாசிரியன் ! குணத்தால் தங்கம் ; செயலால் பெரு வீரன், ஆற்றலால் சிங்கம், எழுத்தால் அதிமேதை, எழுச்சியால் பொங்குங் கடல் ! சொல்திறனால் மேருவென உயர்ந்து விட்ட பேரறிஞன் !

இவர்தான் இங்கர்சால் ! — அமெரிக்காவின் பெருமிதம் !

முகிழ்த்தெழும் தமிழினத்தின் முழுமதி. தமிழ் மணக்கும் முல்லைக் காட்டின் தனி வண்டு. பல்லவம் விரும்பித் தந்த புகழான சிந்தனைச் சிற்பி ! நெஞ்சை அள்ளும் சொல்லழகும், உள்ளங் கவரும் எழுத்தழகும், பளிங்கு நீரோடை போன்ற எண்ணத்தெளிவும் கொண்ட தனித் தமிழ்க் காவலன்! மறுமலர்ச்சி எழுத்தாளர்களின் ஏக சக்ராதிபதி ! மாணவ மணிகளின் மகிழ்வுற்ற விடுதலை வீரன் ! சொற் பெருக்காற்றுவதற்கென்றே பிறந்துவிட்ட தமிழகத்தின் சொற்சுரங்கம் ! —பெரியாரின் பிரதம சீடன் !!

இங்கர்சால் — அறிஞர் அண்ணா — இரு வேறு நாட்டவர் ! இருவேறு காலத்தவர் ! இரு வேறு நூற்றாண்டினரும்கூட ! ஆனாலும் எண்ணத்தால் — எழுச்சியால் ஒரே வைரத்தின் இரு சம ஒளிப்பட்டைகள்! ஒரே மலை முகட்டைச் சுற்றிச்சுற்றி வட்டமிடும் அழகான வெண் முகில்கள் ! ஒரே இலட்சியத்தை மாறி மாறிப் பிரதிபலிக்கும் கானருவிப் பூங்குயில்கள் !

காதல், வீரம், கலை, இலக்கியம், பகுத்தறிவு, தன்மானம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவை போன்ற பிரச்னைகளிலே அவர்கள் கொண்ட — கொண்டுள்ள — கருத்துகள் ஒரே கோட்டில் அமைந்தவை! ஒரே நோக்கோடும் அமைக்கப்பட்டவை ! காலத்தால், சூழ்நிலையால், அவசியத்தால், நிர்ப்பந்தத்தால், இவர்களின் பிரச்னைகள் சற்று முன்பின் மாறியமைந்திருக்குமே அல்லாது முரண்பட்டதாக மட்டுமிருக்காது ! இருந்ததுமில்லை !

'மக்கள் வாழ்வு பெற வேண்டும் ; அந்த வாழ்வு நல்வாழ்வாக இருக்கவேண்டும். அந்த நல்வாழ்வில் பகுத்தறிவு மணம் கமழ வேண்டும்! தன்மானம் மிளிர வேண்டும்! என்றெல்லாம் முயன்ற இந்த இரு வேறு பேச்சாளர்கள் நல்ல அறிவாசிரியர்கள்! முறையே அமெரிக்க-தமிழக மக்களின் நெஞ்சங்களிலே இன்னும் கொலு வீற்றிருப்பவர்கள்!

இங்கர்சால் 19ஆம் நூற்றாண்டின் புகழ் வாய்ந்த பேரறிஞன்! அதுவரை, ஏன் இன்று

வரையும்கூடத்தான் -உலகில் தோன்றியிராத மிகச் சிறந்த பேச்சாளரும் அவர்தான்!

அறிஞர் அண்ணா அவர் சென்ற பாதை பின் வழி நடப்பவர்...! அவர் விட்டுச் சென்ற பேச்சுத் தொண்டை - எழுத்துச் சேவையை தென்னகத்தில் அதன் சூழ்நிலைக் கேற்ப தொடர்ந்து செய்து வந்தவர்! பேச்சுலகைப் பொறுத்தமட்டில் அறிஞர் அண்ணா இங்கர்சாலின் இதயம்-அவருடைய நேரிடையான வாரிசு! நல்ல வாழையடி வாழை!

இருவர் மனமும் எழுத்தும் பேச்சும், ஏறத்தாழ ஒன்றாக அமைந்திருப்பதே இதற்குச் சரியான எடுத்துக் காட்டாகும்! உலகின் இந்த உயர்ந்த பிரஜைகள் ஒரே கருத்தை வல்யுறுத்தி இருவேறு நாட்டில் தனித்தனியாக அவ்வப்போது ஒரே பொருளைப் பற்றிப் பேசிய பேச்சுக்களில் மிகச் சிறப்புடையதாகக் கருதப்படும் வாசகங்களில் சிலவற்றைக் கீழே தருகிறோம்! இந்த வாசகங்களில் எதுவும் எதற்கும் நேரிடையான மொழி பெயர்ப்பு அல்ல. ஆனாலும் ஒரே எண்ணத்தை இருவர் பேச்சும் எந்த அளவுக்கு ஒற்றுமைச் சிறப்புடன் வலியுறுத்தி நிற்கின்றன என்பதை எடுத்துக்காட்ட எழுந்த ஒப்புவமை வாசகங்கள் தாம் இவைகள்! எனவேதான் அண்ணாவை இங்கர்சாலின் பிரதிபிம்பமென்கிறோம்! வாழ்க இவர்களின் பெரும் புகழ்!

"To Express Desires, Longings, Ecstacies, Prophecies, and Passions in form and colour; to put Love, Hope, Heroism, and Truimph in marble; to paint Dreams and Memories with words; to portray the Purity of down, the Intensity and Gloiy of noon the Tenderness of Twilight, the Splendour and Mystery of night, with sounds; to give the Invisib'e to sight and touch, and Enrich the common things of earth with gems and jewels of the mind-'this is art'.

**R.G. Ingersoll**
**'Art and Morality'**

"கலையைக் குலைக்கும் செயலல்ல எமது. கலையிலே புரட்சி உண்டாக்க விழைகிறோம், தக்க காரணங்களோடு. கலை ஒரு இன மக்களின் மனப்பண்பு, அவ்வின மக்களிடையே தோன்றும் தெளிவு, வீரம் ஆகியவற்றின் எடுத்துக்காட்டு. எனவே கலை இன வளர்ச்சிக்கு ஏற்றபடி மாறியும் விரிந்தும் வருமென்பதே நுண்ணறிவினரின் துணிபு. கலையுலகில் அவ்வப்போது மாறுதல்கள் உண்டாகும். இனத்துக்கோர் கலையும், இடத்தின் இயல்பு, தட்ப வெப்பம் ஆகியவற்றிற்கு ஏற்ற முறையிலும் கலை உண்டாகும், வளரும், மாறும்.

"தமிழருக்குத் தமிழ் நெறி, தமிழ்முறை, ஒழுக்கம், வீரம், கற்பு, காதல் எனும் பண்புகளைத் தரக் கூடியவை கலையாக இருக்க வேண்டுமேயொழிய வேறோர் இனத்தைப் புகழ்வதும், அதற்கு ஆதிக்கமளித்து தமிழ் மக்களின் மனதிலே தன்னம்பிக்கை அற்றுப் போகும்படியுமான கலையாக இருக்கக் கூடாதென்று தான் கூறுகிறோம்!"

— அறிஞர் அண்ணா

## தாடிச் சூரியன்

—வேலூர் ம. நாராயணன்



வரலாற்று வானத்தில் விண்மீன் கோடி
விளங்குமொரு சூரியனே ஐயாநின் தாடி
நிறைகாலம் நானிலத்தே வாழ்ந்தாய்; மக்கள்
நிலம்பலவும் தழுவுதற்குத் துணையு மானாய்
குறைமதியர் கொட்டத்தைத் தூள்தூ ளாக்கிக்
குனிந்ததமிழ் இனத்தின்தலை நிமிர்த்த லானாய்;
முறையாக நமக்குற்ற உரிமை யாவும்
முற்றத்தில் வந்திறைஞ்ச வைத்தாய்: நன்றி!

நாட்டத்தை நன்றின்பால் வைத்தாய்: வார்த்தை
நாணயத்தைச் சொத்தாக மதித்தாய்: எந்த
வேட்கைக்கோ வெறியினுக்கோ ஆளா காமல்
வள்ளுவர்போல் ஒழுக்கத்தை உயிராய்க்கொண்டாய்;
கோட்டைவிட்ட வாழ்வுதனைத் தேடித் தந்தாய்
கோணல்மனப் போக்குகளை மாற்றி வைத்தாய்
மாட்டிற்கும் கேடாக இழிந்தி ருந்தோர்
மாண்புயர, மதிப்புயரச் செய்தாய்; வென்றாய்!



# 21-ஆம் நூற்றாண்டில் வேளாண்மை

நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வேளாண்மைதான் அடிப்படை. நாடு சுதந்திரம் அடைந்த பின், உணவு உற்பத்தி சுமார் 3½ மடங்காக, அதாவது 45 மில்லியன் டன்னிலிருந்து 150 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளது. மக்கள் தொகை தற்போதுள்ள 720 மில்லியனிலிருந்து 21ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் 900 மில்லியனாக உயருமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. கி. பி. 2000-ஆண்டின் உணவு தானியங்களின் தேவை சுமார் 250 மில்லியன் டன்னாக இருக்கும். எனவே, உணவு தானியங்களின் உற்பத்தியைக் கணிசமான அளவு கூட்டவேண்டியது அவசியமாகிறது.

அதே போலப் பழங்கள், காய்கறிகள், பால், முட்டை, மாமிசம் மற்றும் மீன் உற்பத்தியையும் பெருக்கவேண்டும். எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 50 மில்லியன் டன்னாக உயர்ந்தால்தான் நமது நாட்டின் தேவையை இறக்குமதி இன்றிப் பூர்த்தி செய்யமுடியும்.

ஆகவே, நமது மக்களின் உணவு, உடை, இருக்க இடம், மற்றும் கால்நடைத் தீவனங்களின் தேவையை முற்றிலும் நிறைவேற்றும் வகையில், நமது வேளாண்மை உற்பத்தி பெருக வேண்டியது இன்றியமையாததாகிறது. அத்துடன் நமது உழவர் பெருமக்களின் வாழ்க்கைத் தரம் கணிசமாக உயர்ந்து, நாட்டின் பொருளாதார நிலை பெருகவேண்டும்.

வேளாண்மை அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்களில் ஏற்படும் மகத்தான முன்னேற்றங்களால், நமது நிலங்களிலிருந்து கிடைக்கப்பெறும் சராசரி வருமான அளவும், உற்பத்தித் திறனும், மொத்த உற்பத்தியும் வெகுவாக அதிகரிக்கவும் நல்ல வாய்ப்பிருக்கிறது. இக்குறிக்கோளை அடைய, நமது வேளாண்மை முயற்சிகளில் முக்கியமான சில மாற்றங்கள் தேவைப்படுகின்றன. தற்போது


டாக்டர் சோ. ஜெயராஜ்,

இயக்குநர்,
பயிர்ப்பாதுகாப்பு ஆராய்ச்சி மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்.


நமது நாட்டில் உணவு தானியங்கள் உற்பத்திக்காக, விளை நிலங்களில் சுமார் 70 சதவீத நிலங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் மட்டும், நமக்குக் கிடைத்துள்ள மொத்த பாசன நீரில் சுமார் 80 சதத்தைப் பயன்படுத்துகிறோம். இந்நிலை மாறி, ஏக்கர் ஒன்றிலிருந்து கிடைக்கப் பெறும் தானிய விளைச்சலைப் பன்மடங்கு பெருக்கி, தானிய உற்பத்திக்காகப் பயன்படுத்தப் படும் மொத்தப் பரப்பளவையும் பாசன நீரையும் பெரிதும் குறைக்க வேண்டியது அவசியமாகிறது. பணப்பயிர்களின் உற்பத்திக்காக அதிக நிலப்பரப்பளவும் பாசன நீரும் கிடைக்கவேண்டும். நமது தேவை போக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யுமளவிற்கு வேளாண்மை உற்பத்தி பெருகிட வேண்டும். பருத்தி, கரும்பு, எண்ணெய் வித்துக்கள், பழங்கள், காய்கறிகள், வாசனைத் திரவியப் பயிர்கள், பானகப் பயிர்கள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பல மடங்கு அதிகரித்து, அதன் மூலம் விவசாயப் பெருமக்களின் வருமானத்தைப் பெருக்க முடியும்.

இம்முயற்சியில் அரசின் பங்கு மிகவும் மகத்தானது. பயிர் மற்றும் கால்நடை உற்பத்திப் பொருட்களின் விலை நிர்ணயம் கடன் மற்றும் மார்க்கெட் வசதி, பயிர் இன்ஸ்யூரன்சுத் திட்டம், விவசாயப் பொருட்களின் ஏற்றுமதிக்குத் தேவையான திட்டங்கள் போன்றவற்றால் விளைச்சலையும் வருமானத்தையும் பெருக்கிட உதவி செய்யமுடியும்.

இத்துடன் வேளாண்மையைச் சார்ந்த துணைத்தொழில்கள் பலவற்றை ஆரம்பித்து அதன் மூலம் விவசாயப் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்ய வேண்டும். தற்போது பருத்தி மற்றும் சர்க்கரை ஆலைகளில் பெருமளவில் வேளாண்மை உற்பத்திக்கும், வருமானத்திற்கும் உதவிபுரிகின்றன. இதேபோல, சோயாமொச்சை, மக்காச்சோளம், மரவள்ளிக்கிழங்கு, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, சணல், உருளைக் கிழங்கு, சிறுதானியங்கள், மலர்கள் மற்றும் மருந்துச் செடிகள் ஆகியவற்றின் உற்பத்தி அதிகரித்து பலவிதமான துணைத் தொழில்கள் வளம்பெற வாய்ப்புகள் ஏராளமாக இருக்கின்றன. பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் பால்பண்ணைப் பராமரிப்பு



போன்றவற்றால் தொழில் அபிவிருத்தி அடைந்து, விவசாயிகளுடைய. வருமானத்தை உயர்த்த முடியும். உலகில் பல நாடுகள் வேளாண்மைப் பொருட்களை ஏற்றுமதி செய்து வாழ்க்கைத் தரத்தை மேம்பாடடையச் செய்திருக்கின்றன.

21ஆம் நூற்றாண்டில் வேளாண்மைய்ல் நாம் நல்ல வெற்றி காண இயற்கை வளங்களைப் பேணிக் காத்து, அவற்றின் தரத்தைப் பெருக்க வேண்டும். நமது நிலங்களின் நல்ல தன்மைகளைக் காக்க வேண்டும். காரம் மற்றும் அமில நிலைகளால் நிலவளம் பாழாகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இயற்கை உரங்களால் நிலத்தை மேலும் செழுமையாக்க வேண்டும். மண் அரிப்பைத் தடுத்து மண்ணின் உற்பத்தித் திறனைப் பெருக்கிட வேண்டும்.

நிலத்தடி நீர் நமக்குக் கிடைத்ததற்கரிய சொத்தாகும். அதைப் பக்குவமாகப் பயன்படுத்தி வேளாண்மையை செழிக்கவைக்க வேண்டும். கழிவுப் பொருட்கள் நிலத்தையும் நீரையும் பாதிக்க விடக்கூடாது. பயிர்களின் பூச்சிகளையும் நோய்களையும் அழிக்கக் கூடிய இயற்கை எதிரிகளை ஊக்குவித்து, நல்லபயிர்ப்பாதுகாப்புச் செய்ய வேண்டும். பயிர்களின் மகரந்தச் சேர்க்கைக்கு மிக உதவியாக இருக்கக்கூடிய தேனீக்களைப் பராமரித்து வளர்க்க வேண்டும்.

பயிர் அறுவடையின் போதும், அதற்குப்பின்பும் பலவிதங்களில் சேதாரம் ஏற்படுகின்றது. பலவிதமான பூச்சிகள், எலிகள் மற்றும் பூசனங்கள், சேமித்து வைக்கப்பட்டுள்ள தானியங்களைப் பாழடையச் செய்கின்றன. இவற்றால் மட்டும் சுமார் 15 சதம் சேதமாகிறது. நல்ல சேமிப்பு முறைகளால் இச்சேதாரத்தைக் குறைக்க முடியும்.




வேளாண்மையில் பல சாகுபடி முறைகளுக்கு எரி பொருட்கள் தேவைப்படுகின்றன. மின்சாரம், டீசல்போன்றவற்றால்விவசாயச் செலவு அதிகமாகிறது. சாண, எரிவாயு, சூரிய ஒளி மற்றும் காற்றின் வேகத்தில் இயங்கும் பலவிதமான பண்ணை இயந்திரங்களைப் பயன்படுத்துவதால் வேளாண்மையில் இலாபம் அதிகம் கிடைக்கச் செய்ய முடியும். இனி வரும் ஆண்டுகளில் இவற்றின் உபயோகம் பன்மடங்கு பெருகும். பொதுவாக, பண்ணை இயந்திரங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படும். இவ்வியந்திரங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் பல புதிதாக நிறுவப்படும்.

பயிர்ப்பாதுகாப்பில், முன் கூட்டியே பூச்சி, நோய்களின் அளவையும், அவை பாதிக்கும் நேரத்தையும் அறிவித்து, பொருளாதாரச் சேத நிலை அடையும் போது தேவைக்கேற்ப பூச்சி, நோய்கள் தடுப்பு முறைகள் தீவிரமாகப் பின்பற்றப்படும்.

நமது நாட்டில் தற்போது பயன்படுத்தப்படும் பூச்சி, பூசன மற்றும் களைக்கொல்லிகளின் மொத்த அளவில் பூச்சிக் கொல்லிகள் 80 சதமும், பூசணக் கொல்லிகள் 10 சதமும், களைக் கொல்லிகள் 7சதமும், நச்சுவாயுப் பொருட்கள் மற்றும் எலி மருந்து போன்றவை 3 சதமும் பயன்படுத்தப்படுகின்றன. பூசணக் கொல்லிகளும், களைக்கொல்லிகளும் அதிக அளவில் பயன்படுத்த வாய்ப்பிருக்கிறது.

மேலும், சுமார் 5 சத விளை நிலங்களில் மட்டும் பயிர் செய்யப்படும் பருத்திப் பயிரில், நாம் ஆண்டொன்றில் எல்லாப் பயிர்களிலும் பயன்படுத்தும் மொத்த பூச்சி, பூசண மற்றும் களைக் கொல்லிகளில் சுமார் 55 சதத்தைப் பயன்படுத்துகிறோம். எனவே தான், பருத்திப் பயிர் பாதுகாப்பில் வெள்ளை ஈ, அசுவினி, தண்டுக் கூன்வண்டு மற்றும் வாடல் நோய் போன்றவற்றின் சிக்கல்கள் உற்பத்தியை மிகவும் பாதிக்கின்றன.

இதற்கு முற்றிலும் மாறாக, சிறுதானியங்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பயறு வகைகள் நமது நாட்டின் மொத்த விளை நிலங்களில் சுமார் 58 சத பரப்பளவில் பயிர் செய்யப்பட்டாலும், பூச்சி, பூசணக் கொல்லிகள் 6 சத அளவே பயன்படுத்தப் படுகின்றன. இப்பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க பயிர்ப் பாதுகாப்பு அதிக அளவில் செய்யப்படவேண்டும்.




பூச்சி, நோய் தாக்காத உயர் விளைச்சல் பயிர் ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படும். பயிர் சுழற்சியில் பல மாற்றங்கள் ஏற்பட்டு, இறவையில் 3 அல்லது 4 பயிர்கள் பயிர் செய்யப்படும். மானாவாரில் 2 அல்லது 3 பயிர்கள் பயிர் செய்யப்படும். கலப்புப் பண்ணைகள் அதிகமாக ஏற்பட்டு, பயிர் விளைச்சல் கால்நடை, மீன் வளர்ப்பு போன்றவற்றால் வருமானம் பெருகிவிடும்.

நாட்டிலுள்ள பல வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் பெரும்பணி புரிந்து, புதிய வேளாண்மை முறைகள், பயிர் மற்றும் கால்நடை இரகங்களைக் கண்டறிந்து உழவர் பெருமக்களுக்கு அளிப்பார்கள். வேளாண்மை விரிவாக்கத் திட்டங்கள் பல வெற்றிகரமாக நிறைவேற்றப்படும். மொத்தத்தில், கி. பி. 2000 ஆண்டில் வேளாண்மை நமது நாட்டில் இன்னும் அதிகமாக விஞ்ஞான முறையில் கடைப்பிடிக்கப்பட்டு விவசாயப் பொருட்களின் உற்பத்தி பன்மடங்கு பெருகும். விவசாயப் பெருமக்களுக்கு வருமானம் அதிகமாகும். வேளாண்மையைச் சார்ந்த பல புதிய தொழில்கள் உருவாகும். விவசாய அபிவிருத்தியால் நாட்டின் பொருளாதார நிலை கணிசமாக உயரும். நமது வேளாண்மையின் பலத்தினால் நாடு பலமடையுமென்பது உறுதி.



# இந்திய விண்வெளிக்கலங்கள்

விண்வெளிக் கலங்கள் செய்தித் தொடர்புகளில் நமக்கு மிகுந்த பயனளிக்கின்றன. ரேடியோ அலைகளும் தொலைக் காட்சி அலைகளும் ஒரே நேர்க் கோட்டில் செல்வன என்பதை நாம் அறிவோம். விண்வெளி ஆய்வறிவு இந்திய மக்களுக்கு வரலாற்றுக் காலம் முதலாக இருப்பதை நாம் தெளியலாம். ஆரியப் பட்டாவும், பாஸ்கராவும், 5ஆம், 6ஆம் நூற்றாண்டுகளில் புகழ் பெற்ற வான்வெளி விஞ்ஞானிகளாக இருந்தனர். தற்கால இந்திய விணவெளி ஆய்வாளர்கள் ஆரியப்பட்டா, பாஸ்கரா போன்றோருடைய தொலை நோக்குப் பார்வையில் அறிந்த செய்திகளையே பின்பற்றி வருகின்றனர்.

1972ஆம் ஆண்டு மே மாதம் சோவியத் விஞ்ஞானப் பேரவையும், இந்திய விண்வெளி ஆராய்ச்சி ஸ்தாபனமும் சோவியத் கேரியர் ராக்கெட் ஒன்றின் மூலம் இந்தியாவில் முதல் ஆராய்ச்சிச் செயற்கைக் கோளை ஏவுவது பற்றி ஓர் உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. மூன்றாண்டுகளுக்குப் பின்னர் 1975ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் தேதியன்று இந்தியாவின் முதற் செயற்கைக் கோளான ஆரியப் பட்டா சுழற்பாதையில் அனுப்பப்பட்டது.

விஞ்ஞான எல்லைகளை ஆராய்ச்சி செய்வதில் ஆரியப் பட்டா உதவி செய்தது. பிரபஞ்சம் பற்றிய எக்ஸ்ரே ஆராய்ச்சியை நடத்தியது. சூரியக் காமாக் கதிர் வீச்சையும் ஆராய்ந்தது. பூமியின் அயன மண்டலத்திற்கும் சூரியப் பரப்பின் மீது நிகழ்ந்து வரும் கிரியைப் போக்குகளுக்குமுள்ள உறவைக் கண்டறியப் பயன்பட்டது.

1979ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஏழாம் தேதி இந்தியாவின் இரண்டாம் செயற்கைக் கோளான பாஸ்கரா-1ம், 1981ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் தேதி இந்தியாவின் மூன்றாம் செயற்கைக் கோளான பாஸ்கரா 2ம் விண்ணில் ஏவப்பட்டன. தனது சுழற்பாதையிலிருந்து உலகை நோக்குவதே அவற்றின் நோக்கமாகும்.

1980ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் நாள் இந்தியா தன்னுடைய (எஸ்.எல்.வி.3) ரோகிணி செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தியது. இது உலக நாடுகளில் இந்தியாவின் பெருமையை நிலைநாட்டச் செய்தது. இந்நிகழ்ச்சி மூலம் ரஷ்யா, அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான், சீனா போன்ற நாடுகளுக்கு அடுத்தபடியாக வான வெளியில் விண்வெளிக் கோள்களை அனுப்பிய ஏழாவது நாடாக இந்தியா இடம் பெறுகிறது. எஸ்.எல்.வி.3 இந்தியாவின் முதல் செயற்கைக் கோளாகும். அது முழுமையாக இந்தியாவில் தயாரிக்கப்பட்டதாகும். இது ஏ.எஸ்.எல்.வி., பி. எஸ். எல். வி. மாடலைப் போன்ற அமைப்பிலுள்ளது.

1984ஆம் ஆண்டு சல்யூத்-7, சோயஸ்-டி ஆகியன விண்ணில் ஏவப்பட்டன. ஏவப்பட்ட உடனேயே பலனளிக்காமல் போன இன்ஸாட்-1 ஏ பூமியிலிருந்து 36,000 கி.மீட்டர் வளைபாதையில் வலம் வந்து கொண்டிருக்கிறது.

இந்திய விண்வெளித் தொழில் நுட்பத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை உருவாக்கி வைத்தது இன்சாட்-1 ஏ ஆகும். இது அமெரிக்காவின் கேப் கென்னடி முனையிலிருந்து 1982 ஏப்ரல் 8ஆம் தேதி ஏவப்பட்டது. அதனை அடுத்து அமெரிக்க சேலஞ்சர் ராக்கெட் மூலம் இன்சாட்-1 பி ஏவப்பட்டது. இது முழுவதும் இந்திய விஞ்ஞானிகளால் தயாரிக்கப்பட்டது. அதுதான் உலகின் முதன் முதலான, மூன்று வேறுபட்ட செயல்களை உள்ளடக்கிய விண்வெளிக்கலமாகும். இது தொலைத் தொடர்பிற்கும், கால நிலை கணக்கறியவும் தொலைக் காட்சி ஒலி ஒளி அலைகளுக்கும் வானொலிப் பெட்டியில் ஒலிபரப்பிற்கும் மிகுந்த உதவியாயுள்ளது.

மிகவும் உயர்தரமான விண்வெளிக்கலம் ஒன்று இவ்வாண்டில் விண்ணில் அனுப்ப இந்தியா திட்டமிட்டுள்ளது. இயற்கைச் சூழலையும், வெள்ளப் பெருக்கையும் தூரத்திலிருந்தே காணும் வகையில் அமைந்துள்ள இவ்விண் கலம் இந்தியாவின் முதல் தரமான விண்கலமாகும்.

கிழக்கு கடற்கரையில் அமைந்துள்ள ஸ்ரீஹரிக்கோட்டா, தற்போது விண்வெளிக் கலங்களை விண்ணில் ஏவும் வண்ணம் சிறந்த உபகரணங்களுடன் விளங்கி வருகிறது.

இந்தியா இனி வருங்காலத்தும், மேலும் பல விண்வெளிக் கலங்களை வான்வெளியில் தன்சொந்த முயற்சியில் அனுப்பத் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் இந்தியா முன்னேறிய நாடுகளின் பட்டியலிலும், விஞ்ஞான வளர்ச்சி பெற்ற நாடுகளின் பட்டியலிலும் தன் பெயரைப் பதிவு செய்ததுடன் நல்லமுறையில் அதனைத் தக்கவைத்தும் கொண்டுள்ளது.

**தா. நீலகண்டன்**
**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**சென்னை.**

# திருவள்ளூரில் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம்

இதுவரை அம்பத்தூர் மற்றும் திருவள்ளூரில் இயங்கி வந்த இரு துணை வேலைவாய்ப்பு அலுவலகங்களும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு 4.8.86 முதல் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகமாக உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வலுவலகம் திருவள்ளூரில் எண். 6, லால்பகதூர் சாஸ்திரி தெரு, பெரிய குப்பம் என்ற முகவரியில் செயல்பட்டு வருகிறது.

இந்தப் புதிய மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலக எல்லையில் திருவள்ளூர் வட்டம், ஊத்துக் கோட்டை வட்டம், திருத்தணி வட்டம், பள்ளிப்பேட்டை வட்டம், பொன்னேரி வட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், அம்பத்தூர் நகரியம், ஆவடி நகரியம், வில்லிவாக்கம் நகராட்சி ஒன்றியம் ஆகியவை அடங்கும்.

புதிதாகத் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் மேற்கண்ட இடங்களில் வசிக்கும் மனுதாரர்கள் திருவள்ளூரிலுள்ள மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தை அணுகுதல் வேண்டும்.

மேற்கண்ட இடங்களிலுள்ள வேலையளிப்பவர்களும், இப்புதிய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குத் தங்கள் அலுவலகங்கள் நிறுவனங்கள் ஆகியவற்றில் எழும் காலி வேலையிடங்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.


மீண்டும் பார்க்கத் தூண்டும் ஜொலிப்பு...
மின்னலடிக்குது ஸூப்பர் ரின் வெளுப்பு.
SUPER
RIN
STRIKES WHITER
மின்னலடிக்கும் ஸூப்பர் ரின்— அதி வெண்மை.
இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை.
LINTAS RIN 99 2015 TM
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு



# கடமையாற்றுவோம்!

—கவிஞர் இனியவேந்தன்

**கா**ஞ்சி புரத்தில் பிறந்த அண்ணா
கருணை மிக்கவர்!-என்றும்
வாஞ்சை உள்ளம் கொண்டு சேவை
மண்ணில் செய்தவர்!

கன்னித் தமிழை நன்கு பேணிக்
கலைகள் வளர்த்தவர்! - புவியில்
கன்னல் வாழ்க்கை நிலைத்து நிற்கக்
கல்வி தந்தவர்!

மூடப் பழக்கம் அறவே விட்டு
முயன்று நடந்தவர்! - அதனில்
நாட வைத்து நம்மைக் கூட
நடக்க வைத்தவர்!

கொடுமை யின்றி வாழத் திட்டம்
கொடுத்து இறந்தவர்! - அவரின்
கடுமை யான உழைப்பைப் போற்றிக்
கடமை யாற்றுவோம்!

## மாணவர் பக்கம்



# கம்ப்யூட்டரின் கதை!

**1671-ல்** லிப்னிட்ஸ் என்ற ஜெர்மானியர் எண்களைப் பெருக்கும் ஒரு இயந்திரத்தைக் கண்டு பிடித்தார். 1673ல் ஸாம்யுவெல் மோர் லாண்ட் மற்றொரு வகைப் பெருக்கல் இயந்திரததைக் கண்டு பிடித்தார். இம்மூன்று விஞ்ஞானிகளின் கணடுபிடிப்புகள் நவீன கணக்கியந்திரங்களுக்கு அடிப்படைகளாகின.

''கார்லஸ் பாபேஜ்'' கம்ப்யூட்டர் இயலில் மிக முக்கியமானவர். பாபேஜின் அனலிட்டிக்கல் இன்ஜின் ஓர் ஆச்சரியகரமான கற்பனை. அவர் இதன் சித்தாந்தங்களைச் சிந்தித்து 1833-ல். பாப்பேஜ் தன் அனலிட்டிக்கல் இன்ஜினை செய்து முடிக்கவே இல்லை என்றாலும், இன்றைய மிக நவீன கம்ப்யூட்டரில் கூட, அவர் சொன்ன ஆதார விஷயங்கள் அப்படியே பயன்படுகின்றன. அதனால்தான் சார்லஸ் பாபேஜ் ''கம்ப்யூட்டரின் தந்தை'' என அழைக்கப்படுகிறார்.

1890-ல் அமெரிக்க சென்ஸஸ் கணக்கெடுப்புத் துறையைச் சேர்ந்த ''ஹர்மன் ஹாலரித்'' என்பவர் கணக்கியந்திரங்களை முதன் முதலில் சொந்தமாகவே தயாரிக்க ஒரு கம்பெனி ஆரம்பித்தார். இன்றைய ராட்சச கம்ப்யூட்டர் கம்பெனியான ஐ.பி.எம். கம்பெனியின் முன்னோடி அது.

1946-ல் நிறுவப்பட்ட ''ஈனியாக்'' அந்த காலத்து கம்ப்யூட்டர்களில் பிரசித்தமானது. பென்சில்வேனியா அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் பிறந்த இது ராணுவ பீரங்கிக் குண்டுகளின் பாதையைக் கணக்கிடுவதற்காக ஸ்பெஷலாக அமைக்கப்பட்ட ராட்சச கம்ப்யூட்டராகும். ஈனியாக் செய்யக் கூடிய அத்தனைக் காரியங்களையும் அதைவிடத் திறமையாக, வேகமாக இன்றைய பாக்கெட் மைக்ரோ கம்ப்யூட்டர் செய்யும்.

கால்குலேட்டர்களைச் செய்து கொண்டிருந்த ஐ.பி.எம். கம்பெனி 1951ல் கம்ப்யூட்டர் தயாரிப்பில் இறங்கியது. ஐ.பி.எம்.மின் முதல் கம்ப்யூட்டர் பெயர் 701. அதன்பின் பற்பல மாடல்களைத் தயாரித்தார்கள்.

1960-ல் இரண்டாவது தலைமுறை கம்ப்யூட்டர்களும், 1964ல் மூன்றாவது தலை முறை கம்ப்யூட்டர்களும் வரத் தொடங்கின. இன்று நாடுமுழுவதும் பெரும்பாலும் பயன்படுத்துவது நான்காவது தலைமுறை கம்ப்யூட்டராகும். ஐந்தாவது தலைமுறை கம்ப்யூட்டர்கள் இன்னும் வெளிவரவில்லை என்றாலும் அதன் அதி நவீன அமைப்பு பிரிட்டனில் சமீபத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

முதன் முதலாக விலைக்கு விற்கப்பட்ட கம்ப்யூட்டரின் பெயர் யூனிவாக். அதை 1951ல் அமெரிக்க சென்ஸஸ் பீரோ வாங்கியது.

**தகவல் : புகழேந்தி**

**ஆதாரம்: சுஜாதாவின் 'கம்ப்யூட்டரின் கதை'**

# கேள்வி-பதில்

**நாம் தினமும் உபயோகிக்கும் மஞ்சளின் குணங்கள் என்ன?**

'கர்குமா லாங்கா' எனப்படும் மஞ்சளின் கிழங்குப் பகுதியை நாம் பெரிதும் உபயோகிக்கின்றோம். மங்களப் பொருள் மட்டுமல்லாமல் இது ஒரு சிறந்த மருந்துப் பொருளும் கூட. 'கர்குமின்' எனும் மஞ்சள் படிதங்கள இதில் உள்ளன. இதுதான் செயல்படும் வேதியியல் பொருளாகும். ஆமாம். மஞ்சளை நாம் பல ஆண்டுகளாக வீட்டு வைத்தியத்திற்குப் பயன்படுத்துவோமே இது சரியா? எந்த வியாதிக்குப் பயன்படுத்தலாம்? மத்திய மருத்துவ ஆராய்ச்சி நிலைய சோதனையின் படி 'ஆன்டி இன்ப்ளாம் மேட்டரி' எனும் வீக்கத்தைக் குறைக்கும் சிறந்த மருந்தாக இதைப் பயன்படுத்தலாம். இது ஆங்கில மருந்தான பெனைல்ப்யூட்டசோனுக்கு இணையானது. ஆனால் அதிலுள்ள துணைத் தீங்குகள் அதாவது வயிற்றில் எரிச்சல் ஏற்படுவதுபோன்றது இதில் கிடையாது.

இது சிறந்த கிருமி நாசினியாக நோயுண்டாக்கும் பல பாக்டிரியா பூஞ்சைகளுக்கு, எதிர்ச் சக்தி உடையதாக உள்ளது.

அதனால்தான் வீக்கத்திற்கும், அடிபட்டாலும் மஞ்சள் அரைத்துப் பூசுகிறோம். கலப்படமில்லாத மஞ்சள் சீரண சக்தியை அதிகரிக்கிறது. இரைப்பைச் சுரப்பிகளை தூண்டி நல்ல பலனைத் தரும் பொருளாகும் இது.

அதிக மஞ்சள் உடலில் சென்றால் எந்தத் தீங்கும் ஏற்படுவதில்லை. தற்போது மஞ்சளில் உள்ள 'கர்குமின்' மூட்டுவலி, கால்வீக்கம் ஆகியவற்றையும் குணப்படுத்தும் மருந்தெனக் கண்டுள்ளனர்.

**ஜலதோஷத்திற்காக வைட்டமின் 'சி' சாப்பிடுவது ஏன்?**

வைட்டமின் 'சி' எனப்படுவது 'எ' ஆஸ்கார்பிக் அமிலமாகும். இது நீரில் கரையும் ஒரு வைட்டமின் ஆகும். நமக்குத் தினமும் கட்டாயம் 30 முதல் 50 மில்லி கிராம் வரை உணவில் தேவைப்படுகிறது. நம் உடம்பில் இதைத் தயாரிக்கும் சக்தி இல்லை. இது ஜலதோஷத்தைக் கட்டுப்படுத்துகிறது, மற்றும் ரத்தசோகை என்னும் 'அனீமியா' வியாதியைக் குணமாக்குகிறது.

'லிபோபுரோடின் லைபேஸ்' என்னும் பொருளை அதிகமாக உண்டாக்குவதன் மூலம் வைட்டமின் 'சி' இரத்தத்திலுள்ள 'ஹேமோ குளோபினை' அதிகரிக்கிறது. இரத்தத்திலுள்ள 'கொலஸ்டிரால்' என்னும் கொழுப்புப் பொருளைக் குறைக்கிறது. கொல்லோஜின் என்னும் நார்ப்பொருளை உண்டாக்கி காயங்கள் குணமடைய உதவுகிறது.

எந்த உணவுப் பொருளில் வைட்டமின் 'சி' உள்ளது? ஆரஞ்சு, சாத்துக்குடி, எலுமிச்சை போன்றவற்றில் உள்ளது. நெல்லிக்கனியிலும் அதிகம் உள்ளது.

புகை பிடிப்பது உடலில் உள்ள வைட்டமின் 'சி'யை அழிக்கிறது.

**நன்றி: சென்னை வானொலி**



# அறிஞர் போற்றும் உலக மேதை

— முருகுவண்ணன்

அறிஞர் போற்றும் உலக மேதை
அண்ணா ஒருவரே!-மக்கள்
அனைவர் போற்றும் மனித மேதை
அண்ணா ஒருவரே! அறிஞர்
அண்ணா ஒருவரே! (-அறிஞர்)-

குறளைப் போன்ற அறிஞர் அண்ணா
உருவம் சிறியதே!-
குறளின் பொருளைப் போன்றே அண்ணா
இதயம் பெரியதே! (அறிஞர்)

அமிழ்தும் தேனும் சிந்தும் அண்ணா
வாய் மலர் மொழிகள்-அவை
அடுக்கடுக்காய் அமைந்த ஞானத்
தாமரை மலர்கள்!-அவற்றில்
கமழும் தூயத் தமிழின் மேன்மைக்
காவிய இதழ்கள்!-பொற்
காலம் புலரும் நேரம் காட்டும்
ஓவிய விழிகள்! (அறிஞர்)

உலக அரங்கில் தமிழ நாட்டின்
புகழ் ஒளி விளக்கு!-ஆழ்ந்த
உறக்கம் கொண்ட தமிழர் பெற்ற
புத்துயிர் விழிப்பு!-பல
கலை-அறிவாய் வந்த கால-
தேவனின் பிறப்பு!-திருக்
காஞ்சி தந்த அறிஞர் அண்ணா
மன்பதைச் சிறப்பு! (அறிஞர்)



> "இந்தியாவில் நடத்தப்படுகிற எந்தப் புரட்சிக் காரியங்களுக்கும் வழிகாட்டி தந்தை பெரியார் அவர்கள்தான்"

# தந்தை பெரியார் பிறந்த நாள் விழா

பகுத்தறிவுப் பகலவன்
சீர்திருத்தச் செம்மல்
வைக்கம் வீரர்
—என்றெல்லாம் போற்றிப் புகழப்படும் தந்தை பெரியார் அவர்களின் 108ஆவது பிறந்த நாள் விழா, ஈரோடு நகரில் 17.9.86 அன்று மிகச் சீரும் சிறப்புமாக நடந்தது.

மாலை ஜீவா இன்னிசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி எல்லார் இதயத்தையும் கவர்ந்தது. தொடர்ந்து கவியரங்கம் நடந்தது. பெரியார் மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு கா.சம்சுதீன் அனைவரையும் வரவேற்றார்.

கவிஞர் ஈரோடு தமிழன்பன் தலைமையில், 'தந்தை பெரியார் வகுத்த ஐம்பால்' என்னும் தலைப்பில் கவிஞர் முத்துராமலிங்கம் (அரசியல் ), கவிஞர் இளந்தேவன் (சமுதாயவியல்), கவிஞர் தங்க அன்புவல்லி (தமிழியல்), கவிஞர் இரா.வடிவேலன் (பொருளியல்), கவிஞர் சோ.கு. திருநாவுக்கரசு (பகுத்தறிவியல்) ஆகியோர் கவிதை பாடி, தந்தை பெரியார் அவர்களின் அரிய தொண்டுகளை அழகு தமிழில் வடித்துக் காட்டினார்கள்.

இரவு சிறப்புக் கூட்டம்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில்—

''தந்தை பெரியார் அவர்கள் வாழ்ந்த இல்லம் முன்பு இந்த விழா நடப்பது மிகவும் பொருத்தமுடையது, சிறப்புடையது. சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட மக்களுக்காக அரும்பாடுபட்ட தந்தை பெரியார் அவர்களை நினைவுகூர மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் விழா எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

''தந்தை பெரியார் பெயரில், அறிஞர் அண்ணா பெயரில் மாவட்டங்கள் தோன்றியுள்ளன. கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் பெயரில் புதிய மாவட்டம் மலரவிருக்கின்றது. இவ்வாறு அன்னைத்தமிழகத்திற்கு அருந்தொண்டாற்றிய அறிஞர் பெருமக்களை நினைவுகூரும் வகையில் தமிழக அரசு செயலாற்றிக் கொண்டு வருகின்றது.

''நான் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன். நான் இந்த அளவுக்குப் பதவி உயர்வு பெற்றிருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம், தந்தை பெரியார் அவர்கள் தான். அதற்கு நான் நன்றிக் கடன்பட்டிருக்கிறேன்.

> "நாட்டின் மிகப்பெரிய வளர்ச்சிக்கு- மாற்றத்துக்கு—விழிப்புணர்ச்சிக்கு தந்தை பெரியார் அவர்களின் கொள்கைகள் பெரிதும் பயன்பட்டிருக்கின்றன"



''ஈரோடு பாசறை என்பார்கள். அதைவிட ஈரோடு பட்டறை என்று சொன்னால் மிகப் பொருத்தமாக இருக்கும். இங்கே நல்ல நல்ல வைரங்கள் பட்டை தீட்டப்பட்டு நாட்டுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. பாவேந்தர் பாரதிதாசன் அவர்களால் புகழ்ப்பெற்ற தந்தை பெரியார் அவர்கள் நம் மனத்துள் என்றென்றும் நிலைத்து நிற்கிறார்'' என்றார்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எஸ்.முத்துசாமி அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''தந்தை பெரியார் அவர்கள் நாட்டிலே தோன்றியிராவிட்டால், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் ஒரு கணிசமான அளவு இடத்தை எட்டிப்பிடிக்கின்ற அளவுக்கு உயர்ந்திருக்கமாட்டார்கள். நாட்டின் மிகப் பெரிய வளர்ச்சிக்கு-மாற்றத்துக்கு-விழிப்புணர்ச்சிக்கு அவரது கொள்கைகள் பெரிதும் பயன்பட்டிருக்கின்றன. அரசியல்வாதி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் தந்தை பெரியார் அவர்கள் விளங்கினார்கள்.

''தந்தை பெரியார் அவர்கள் மிகப் பெரிய சக்தியாக விளங்கினார்கள். அவரது எண்ணங்களை-செயல்களைத் தொடர்ந்து செயலாற்றி வருகிறார் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்''.

மாண்புமிகு தொழிலமைச்சர் திரு.க.இராசாராம் அவர்கள், தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து விழாப்பேருரை நிகழ்த்தினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''தந்தை பெரியார் அவர்கள் இந்தத் தெருவிலேவாழ்ந்தார்கள். அந்தக் காலத்தில் சாதிக் கொடுமை தலைவிரித்தாடியது. அதை ஒழிப்பதற்கு அவர்கள் அரும்பாடுபட்டார்கள். பெண்ணுரிமைக்காகக் குரல் எழுப்பினார்கள். தேவதாசி முறை ஒழித்திட வழி வகுத்தார்கள். அவரது பெருமுயற்சி காரணமாக 1927ல் அது ஒழிக்கப்பட்டது. 1937ல் பெண்களுக்குச் சொத்துரிமைச் சட்டம் வரவும், பெண்களுக்கு ஓட்டுரிமை கிடைக்கவும் அவர் கடுமையாக உழைத்தார்.

''இன்று தெருக்களில் சாதிப் பெயர்கள் நீக்கப்பட்டிருக்கின்றன. அறுபது ஆண்டுகளுக்கு முன்பே சாதிப் பெயர்களை ஒழிக்கச் செங்கல்பட்டு மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பெண் கல்விக்காகவும் தீர்மானங்கள் போடப்பட்டன. ஆதிதிராவிடர்கள் கோயிலில் நுழைவதைத் தடுக்கும் முறையை நீக்கிட வழி வகுத்தார்கள். இன்று கோயில்களில் சமபந்தி போஜனம் நடக்கின்றது. இதை அன்றே - ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே தந்தை பெரியார் அவர்கள் நடத்திக் காட்டினார்கள்.

''தந்தை பெரியார் அவர்கள் சுய சிந்தனையாளர். மிகச் சிறந்த தீர்க்கதரிசி. அவர் தமிழகத்தை





முன்னேற்றியிருக்கிறார்கள். பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் இன்று புதிய இருபது அம்சத்திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவையெல்லாம், அறுபது ஆண்டுகளுக்கு முன்பே பெரியார் அவர்கள் சொன்ன கருத்துகள் தாம் என்றால் அது மிகையாகாது.

''நிலச் சீர்திருத்தத் திட்டத்தை, வங்கிகள் தேசிய மயமாக்கப்படவேண்டும் என்ற கருத்தை முதலில் தெரிவித்தவர் தந்தை பெரியார் அவர்கள்.

''இந்தியாவில் நடத்தப்படுகிற எந்தப் புரட்சிக் காரியங்களுக்கும் வழிகாட்டி தந்தை பெரியார் அவர்கள்தான்''.

பிறகு மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள், தீண்டாமை ஒழிப்புக்குச் சிறப்பாகப் பணியாற்றியதற்காக கோபி நகரசபைத் தலைவர் தியாகி திரு ஜி.எஸ்.லட்சுமணன் அவர்களுக்கு ஆதிதிராவிடர் நலத்துறை சார்பாக பொன்னாடை போர்த்தி சான்றிதழ் வழங்கினார். சமூக நலத்துறை சார்பில் 25 பேர்களுக்குக் காதுகேட்கும் கருவிகளும், விதவைத் திருமணத் திட்டத்தின் கீழ் மூவருக்குத் தலா ஐயாயிரம் ரூபாயும், விதவை மகள் திருமணத்துக்காக ஆறு பேருக்குத் தலா ஆயிரம் ரூபாயும்,அநாதைப் பெண்கள் திருமணத்துக்காக நால்வருக்குத் தலா ஆயிரம் ரூபாயும் வழங்கினார்.

விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு அருண்ராமநாதன் இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு எஸ்.பாலகிருஷ்ணன், திரு.வி.கே. சின்னசாமி, திரு வி. கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் தந்தை பெரியார் அவர்களின் தொண்டுகளை எடுத்துக் கூறினார்கள்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறைத் துணை இயக்குநர் திரு வி.டி வீரப்பன் நன்றி நவின்றார். விழா இறுதியில் நடிப்பிசைப் புலவர் நாடக மன்றத்தின்-கரிக் கோல்ராஜ் குழுவினர் நடித்த பேரறிஞர் அண்ணா அவர்களின் 'காதல்ஜோதி' நாடகம் நடந்தது.

மூடநம்பிக்கைகள் மூலையில் முடங்க முழக்கமிட்ட-அறியாமை இருள் விலகி அறிவொளி எங்கணும் பரவப் பாடுபட்ட தந்தை பெரியார் அவர்களின் அழியாப் புகழைப் பறைசாற்றும் வகையில் விழா அமைந்திருந்தது.

—நமது செய்தியாளர்



# தந்தை

**கவியரசு நா. காமராசன்**

சந்திர சூரியர் இற்று விழுந்தெங்கள்
சரிதம் முடியட்டும் தந்தையே—மண்ணில்
தலைகள் உருளட்டும் தந்தையே
இந்திர நீலக் காட்டிலே தேவர்கள்
இருவிழி எழுதிய காதலை
தந்திர வேதங்கள் சாற்றிய நீதியே
தவங்கள் என்றாகிய சேதியை
முந்தி எதிர்த்தவன் மூளையின் மாணவன்—எங்கள்
முத்தமிழ் நாட்டினர் காவிய நாயகன் தன்
அந்திம வேளையில் கண்களை மூடினான் இனி
அனைத்தும் உறங்கட்டும் காலமே!
மென்வளைத் தாதியர் மன்னர்கள் மேல்விழ
மெத்தென வீசிய காற்றினைத்
தன்னிடம் கொண்டதோர் சாமரம் போன்ற உன்
தாடி அழகெங்கே தந்தையே!
ஒருமுறை கூட என் தமிழ் நதி நீரினில்
உன்னை நனைத்திலேன் தந்தையே
இருவிழி சிந்திய கவிமழை போதுமோ
இன்னும் எழுதவோ தந்தையே!

# திருச்சி மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள்



வ. விஸ்வநாதன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருச்சி மாவட்டம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் தமிழகத்தின் மையப் பகுதியிலே அமைந்திருக்கிறது. இந்த மாவட்டத்தின் மொத்த பரப்பளவு 11,114 சதுர கிலோ மீட்டர். அல்லது 27,48,030 ஏக்கர். பொதுவாக திருச்சி மாவட்டம் என்ற உடனேயே மக்களுக்கு காவிரியாறு இந்த மாவட்டத்தின் மையப் பகுதியிலே ஓடுகிறது; இந்த மாவட்டம் செழிப்பாக இருக்கின்றது. வளமாக இருக்கின்றது என்ற எண்ணம்தான ஏற்படும். ஆனால் உண்மை நிலை அதுவல்ல. இந்த காவிரியாறு ஓடுகின்ற இரு பகுதிகளிலும்-இரு கரைகளிலும் சுமார் 2 கி.மீ. அளவுக்குத்தான் காவிரியாறு பயன்படுகின்றது. லால்குடி, திருச்சி, முசிறி, குளித்தலை ஆகிய 4 தாலுக்காக்களைத் தவிர மற்ற தாலுக்காக்களில் எல்லாம் காவிரி ஆற்றுப் பாசனம் இல்லை என்றே சொல்லலாம்.

இந்த நாலு தாலுக்காக்களிலே கூட லால்குடியைத் தவிர மற்ற தாலுக்காக்களில் பாதி அளவு தான் காவிரி ஆற்றுப் பாசனம் இருக்கின்றது. ஏற்கனவே குறிப்பிட்டது போல 27,48,030 ஏக்கர் நிலங்களில் நஞ்சை நிலங்கள் 2,10,000 உள்ளன 18,40,000 ஏக்கர் புஞ்சை நிலமாக இருக்கிறது. மீதம் இருக்கக்கூடிய 7,00,000 ஏக்கர் நிலங்கள் காடுகள், புறம்போக்கு நிலங்கள், தீர்வு ஏற்படாத தரிசு நிலங்களாக இருக்கின்றன. இவ்வாறு புஞ்சை நிலங்கள் அதிகமாக இருக்கக்கூடிய இந்த மாவட்டம் பெரும்பாலும் வானத்தையே நம்பி இருக்கின்றது.

இந்த மாவட்டத்திலே அதிக மழை பெய்யக் கூடிய மாதங்கள் வடகிழக்குப் பருவக்காற்று மாதங்களான அக்டோபர் முதல் டிசம்பர் வரைதான். தென் மேற்குப் பருவக்காற்று மாதங்களாகிய ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களிலே அதிகமான அளவிற்கு மழை இல்லை என்று சொன்னாலும் ஓரளவிற்கு திருப்தியான மழை பெய்வது இந்த மாவட்டத்திலே வழக்கம். அதுவுமில்லாமல், சாதரணமாக ஜூன் மாதம் 12-ந் தேதி மேட்டூரிலே நீர் அதிகமாக வந்து சேரும் பட்சத்தில் ஜூன் 12ந் தேதி மேட்டூர் அணை திறந்துவிடப் படும். அதன் காரணமாக இந்த மாவட்டத்திற்கு உதவிகரமாக இருக்கும். ஆனால் சென்ற இரு ஆண்டுகளில் இந்த மாவட்டத்தின் நிலையைப் பார்க்கும்போது அதாவது 1985-86 ஆம் ஆண்டுகளில் இந்த மாவட்டத்தில் மழை மிகக்குறைவாகப் பெய்ததின் காரணமாகப் பாதிக்கப் பட்டிருக்கின்றது.

1985-ஆம் ஆண்டில் சாதாரணமாக இந்த மாவட்டத்தில் சராசரி பெய்யக்கூடிய மழை அளவான 842 மி.மீ. மழை அளவு இல்லாமல் 644 மி.மீ. மழை அளவுதான் பெய்திருக்கின்றது. மொத்தத்தில் இது 71% ஆகும். 1986 வது ஆண்டு ஜூலை மாதம் முடிய சாதாரணமாக பெய்யக்கூடிய அளவினைவிட 31% குறைவாகவே மழை பெய்திருக்கின்றது. எனவே கடுமையான வறட்சி நிலை இருக்கினறது என்றே சொல்ல வேண்டும். இந்த நிலைமையைச் சமாளிக்கின்ற வகையில் இந்த மாவட்டத்தில் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன. முதலாவதாக இந்த நிலைமையைச் சமாளிப்பதற்குரிய அறிக்கைகள் அரசுக்கு அனுப்பப்பட்டன. அதன் காரணமாக அரசு பல்வேறு துயர் துடைக்கும் பணிகளுக்காகப் பணம் ஒதுக்கீடு செய்திருக்கின்றது. சாதாரணமாக வறட்சி நிலைமை ஏற்படும்போது அரசாங்கம் முதன் முதலில் சமாளிக்க வேண்டிய பிரச்சனை என்று கருதுவது குடிநீர்ப் பிரச்சனை.

குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்காக இந்த மாவட்டத்திலே பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. கிராமப் பகுதிகளிலே குடிநீர் வசதி மூன்று வழிகளில் செய்து கொடுக்கப் படுகின்றது. ஒன்று கிணறுகளில்

இருந்து குடிநீரை எடுத்து குடிப்பது, இரண்டு ஆழ்குழாய்க் கிணறு அமைத்து அடிப்பம்பு மூலம் தண்ணீரைப் பயன்படுத்துவது, மூன்றாவதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி அதன் மூலமாகத் தண்ணீரைப் பயன்படுத்துவது. இதிலே மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிச் செயல்படுத்துவது என்பது சற்று நீண்ட நாட்கள் கொண்ட வேலையாகும்.

கிணறுகளை ஆழப்படுத்துதல், புதிதாகக் கிணறுகள் தோண்டுதல், ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல் இம் மூன்றும்தான் இது போன்ற ''வறட்சிக் காலங்களிலே'' செய்யக்கூடிய பணிகளாகும். திருச்சி மாவட்டத்திலே கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக முதல் கட்டமாக ரூ. 15,80,000 கொடுக்கப்பட்டது. அதே போன்று முதல் கட்ட பணிகளுக்காக 150 ஆழ்குழாய்க் கிணறுகள் கைப்பம்புகள் அமைப்பதற்காக ரூ. 45,00,000 கொடுக்கப்பட்டது. லாரிகள் மூலம் குடி தண்ணீர் விநியோகிப்பதற்காக ஆரம்பத்தில் ரூ. 1.50 இலட்சம் கொடுக்கப்பட்டது. இதுவும் அல்லாமல் குடிநீர் ஆதாரங்களை அதிகப்படுத்துவதற்காக நகராட்சிகளுக்கு ரூ.3 இலட்சம் கொடுக்கப்பட்டது.

இப்படி ஆரம்பக் கட்டத்திலே கொடுக்கப்பட்ட இந்தத் தொகைகள் ஏப்ரல் மாதத்தில் இருந்து செலவு செய்யப்பட்டு ஓரளவுக்கு அப்பொழுது இருந்த நிலைமைகள் சமாளிககபபட்டன. ஆனால் மேலும் நிலைமைகள் மோசமானது காரணமாக அரசாங்கம் 2-வது கட்டமாக கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு ரூ. 31.40 இலட்சம் கொடுத்துள்ளது. புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு அதாவது 465 ஆழ் குழாய்க் கிணறுகளை இந்த மாவட்டத்திற்குக் கொடுத்திருக்கின்றது.

**இதனுடைய மதிப்பீடு ரூ. 1.15 கோடி ஆகும். இதுவும் அல்லாமல் 400 வடிமுனை குழாய்க் கிணற்றை ஆழ்குழாய்க் கிணறுகளாக மாற்ற ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வடிமுனை குழாய்க் கிணற்றை ஆழ் குழாய்க் கிணறாக மாற்றுவது என்பதில் இந்த பகுதி மக்களுக்கு இதனால் பெரும்பயன் இருக்கின்றது.**

சாதாரணமாக வடிமுனைக் குழாய்க் கிணற்றில் உள்ள பிரச்சனைகள் எல்லாம் 20 அடி வரையில் தான் தண்ணீர் கிடைக்கும். அதற்கு கீழாக தண்ணீர் சென்று விடுமானால் இந்த வடிமுனைக் குழாய்க் கிணறுகள் பயன் இல்லாமல் போய்விடும். அப்போது இதை பிடுங்கி வேறொரு இடத்தில் பதிக்க வேண்டும். எனவே இதனால் பல பிரச்சனைகள் இருக்கின்றன. எனவேதான் அரசு இதை மனதில் கருத்தில் கொண்டு அரசு இந்த மாவட்டத்திற்கு 400 வடிமுனைக் குழாய்க் கிணறுகளை ஒதுக்கீடு செய்துள்ளது.



இதுவும் அல்லாமல் துறையூர், மணப்பாறை, பொன்மலை போன்ற நகராட்சிகளுக்கு அங்கே குடிநீர்த் தட்டுப்பாடு அதிகமாக இருக்கின்றது என்பதைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு லாரிகள் மூலம் தண்ணீர் விநியோகிப்பதற்கு ரூ. 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. துறையூர் நகராட்சிப் பகுதியிலே குடிநீர்த்தட்டுபாடு மிகவும் கடுமையாக இருக்கின்றது. அதேப் போன்று மணப்பாறை நகராட்சிப் பகுதிகளிலும் குடிநீர்த் தட்டுப்பாடு மிகவும் கடுமையாக இருக்கின்றது. துறையூருக்கு முசிறியில் இருந்து லாரிகள் மூலம் தண்ணீர் கொண்டு செல்லப்படுகின்றது. அதே போன்று மணப்பாறைக்குத் திருச்சியில் இருந்து லாரிகள் மூலம் தண்ணீர் கொண்டு செல்லப்படுகின்றது. இதற்காகத்தான் அரசு ரூ. 2 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

வறட்சி நிவாரணப் பணிகளிலே அடுத்தப்படியாக, நம்முடைய கவனத்தைக் கவருவது வேலையில்லாத கிராமப்புற மக்களுக்கு வேலை கொடுக்க வேண்டியது. இது நம்முடைய அடுத்த முக்கியமான பணியாகும். திருச்சி மாவட்டத்திலே 2 இலட்சத்திற்கும் அதிகமாக நஞ்சை நிலங்கள் இருக்கின்றன. இதிலே சுமார் 75,000 ஏக்கர் நஞ்சை நிலத்தில் குறுவைச் சாகுபடி செய்வது வழக்கம். இந்த ஆண்டு தான் இது வரையிலும் இல்லாத அளவுக்கு குறுவைச் சாகுபடியே இல்லாத ஒரு நிலமை ஏற்பட்டு இருக்கின்றது. இதனால் குறுவைச் சாகுபடியில் வேலை செய்யக் கூடிய விவசாயத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் கஷ்டப்படக் கூடிய ஒரு நிலமை இருக்கின்றது. அதுவுமில்லாமல் மற்ற மானாவாரி புஞ்சை நிலங்களிலே தென்மேற்குப் பருவக்காற்று மூலம் வரக்கூடிய மழையைப் பயன்படுத்திக் கொண்டு வேர்க்கடலை, சோளம், கம்பு போன்ற புஞ்சை தானியங்களையும் விளைவித்து, அதன் மூலமாக வேலை வாய்ப்பு கிடைத்து பயன்பெற இருந்த தொழிலாளர்களும் வேலை இல்லாத ஒரு நிலமையில் இருக்கின்றார்கள்.

எனவே இவர்களுக்கு எல்லாம் வேலை கொடுக்க வேண்டிய ஒரு அவசியம் வந்திருக்கின்றது. எனவே இதையும் கருத்தில் கொண்டு அரசு திருச்சி மாவட்டத்திற்கு வேலையில்லாமல் இருக்கக்கூடிய கிராமப்புற தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற ஒரு அடிப்படையிலே ஆகஸ்ட், செப்டம்பர் 2 மாதங்களுக்கும் ரூ.411 இலட்சம் பல்வேறு திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்து அந்தப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த ரூ. 411 இலட்சத்தைச் செலவு செய்து 4,400 வேலைகள் முடிக்கப்பட இருக்கின்றன. இதுவரையில் 50 சதவீதம் வேலைகள் முடிக்கப்பட்டு இருக்கின்றன. இந்த செப்டம்பர் மாதத்திலே மீதம் இருக்கக் கூடிய வேலைகளும் முடிப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன.

# கன்னியாகுமரி மாவட்டத்தில் மண்வளப் பாதுகாப்பு

இம்மாவட்டத்தில் 1. பழையாறு 2. தாம்பிரபரணி3. வள்ளியாறு ஆகிய மூன்று ஆறுகள் ஓடுகின்றன. மழைக் காலங்களில் மலைப்பாங்கான இடங்களில் உள்ள வளமான மேல் மண் அரித்துச் செல்லப்பட்டு நீர்த் தேக்கம், மற்றும் ஆற்றுப்படுகைகளில் படிகின்றன. இதனால் பயிர் நிலங்கள் மண் வளத்தினை இழக்கின்றன. இதனை உணர்ந்த வவசாயப் பெருங்குடி மக்கள் தொன்று தொட்டுத் தொழில் நுட்ப ரீதியில்லாமல், தன்னிச்சையாகவும், அனுபவ பூர்வமாகவும் தங்கள் நிலங்களில் மண் வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனை உணர்ந்த அரசு தொழில் நுட்ப ரீதியோடும் பொருளாதார உதவியோடும் மண்வளப்பாதுகாப்புத் திட்டங்களை மேற்கொள்கிறது.

**மண் வளப் பாதுகாப்பும் அதன் பயன்களும்:**

நிலத்தின் புவியியல் அமைப்பிற்கு ஏற்ப நிலத்தினைச் சரி செய்து கூடுதல் மகசூல் பெறும் வகையில் நிலத்தினைச் சரி செய்வதே மண் வளப்பாதுகாப்பு ஆகும். இம் மாவட்டத்தின் புவியியல் அமைப்பினைப் பார்க்கும் போது நிலத்தின் அமைப்பு பொதுவாக சரிவாக உள்ளது. இதனால் மழைக்காலங்களில் வளம்மிக்க மேல் மண்ணில் மழை நீரால் அரிமானம் ஏற்பட்டு நீர்த் தேக்கம், குளம் ஆறு ஆகியவைகளில் படிந்து நீரின் கொள்ளளவைக் குறைக்கின்றது. மண் வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளுவதுதான் நிலங்களில் உள்ள வளமான மேல் மண்ணின் அரிமானத்தைத் தடை செய்வதுடன் நீர்த்தேக்கம், குளம் ஆறு ஆகியவைகளில் மண்படிவதைத் தடை செய்கின்றது. மேலும் தரிசு நிலங்களை வளமிக்க பயிர் செய்யும் நிலங்களாக மாற்றுவதுடன் மகசூல் கூடுதல் கிடைக்க உதவுகின்றது.

**மண் வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளுவதால் ஏற்படும் நன்மைகள்:**

1. பெரும் மழை பெய்வதால் ஏற்படும் மண் அரிப்பையும் மழை நீர் சேதத்தையும் மிகவும் குறைக்க முடியும்.

2. மழை நீர் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்தி, நீரை நிலத்திலேயே அனுப்பும்படி செய்யப்படுகிறது.

3. நிலத்தின் மண் தன்மையும் நீர் உறிஞ்சும் தன்மையும் அதிகப்படுத்துவதால் வேண்டிய அளவு நீர் நிலத்ினூடே சேகரிக்கப்பட்டு பயிர் சாகுபடி செய்யும்பொழுது பயிருக்கு அவசியமாக உதவுகிறது.

4. நிலத்தின் ஊடே சேகரிக்கப்பட்ட நீர் ஆவியாகி மாறி அகற்றப்படுவதையும் நிலங்கள் வறண்டு போவதையும் தடுக்கிறது.

5. மண் வளப் பாதுகாப்புப் பணிகளைக் கையாளுவதால் நிலத்திலுள்ள மண் பக்குவப் படுத்தப்பட்டு, பயிர் விளைவுக்கு ஏற்ற தரத்தைக் கொடுப்பதால் அமோக விளைச்சலை நிரந்தரமாக அடைய முடிகிறது.

6. தரிசு நிலங்கள், மற்றும் கழிவு நிலங்கள் மேம்பாடு செய்

குமரி மாவட்டத்தில் நடைபெற்றுவரும் வறட்சி நிவாரணப் பணிகளை, தமிழ்நாடு அரசு நிலச் சீர்திருத்த ஆணையாளர் திரு மு. ரகுபதி இ.ஆ.ப., குமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு எஸ். முனீர் ஹோதா, இ.ஆ.ப. ஆகியோர் பார்வையிடுகின்றனர்.



யப்பட்டு பயிர் . நிலங்களாக மாற்றப்படுகிறது.

மேற்கண்ட காரணங்களால் நாட்டின் உழவு உற்பத்தி பெருகுவதுடன் தனிப்பட்ட நில உரிமையாளர்களின் பொருளாதார வசதியும் உயருகிறது. மேலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மண் வளப்பாதுகாப்புப் பணிகள் மிகவும் தேவையாகும்.

**உபகோட்டத்தின் வரலாறு:**

மேற்குறிப்பிட்ட காரணங்களைக் கருத்தில் கொண்டு அரசு 1964-65 நிதியாண்டில் இம்மாவட்டத்தில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டி திருநெல்வேலி உதவி செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) மண்வளப் பாதுகாப்புத் திட்டம் அவர்களின் மேற்பார்வையில் இம்மாவட்டம் திருவட்டார் என்ற கிராமத்தில் ஒரு இளநிலைப் பொறியாளர், இரண்டு உதவி மண்வளப்பாதுகாப்பு அலுவலர், மற்றும் இரண்டு நில உதவியாளர்களுடன் ஒரு பிரிவு அலுவலகம் செயல்படத் துவங்கியது. இப்பிரிவு அலுவலகம் சரிவு நிலங்களை ஆய்வு செய்து, சர்வே செய்தும், நிலத்தில் சரிவிற்கு ஏற்ப சம உயர கற்சுவர்களும் சம உயரப் படிமட்டமும், சம உயர வாய்க்கால் படிகளும் மேற்கொண்டனர். இப்பணியினால் ஏற்பட்ட நன்மைகள் நன்கு உணர்ந்தவிவசாயப் பெருங்குடி மக்கள் இம்மாவட்டத்தில் ஒரு உபகோட்டம் தேவை என்று அரசிடம் முறையிட்டனர். அரசு இசைந்து இம்மாவட்டத்திற்கு ஒரு உபகோட்டத்திற்கு ஆணை பிறப்பித்து 8-7-1968 முதல் இம்மாவட்டத்தில் ஒரு உபகோட்டம் செயல்படத் துவங்கியது. இவ் உபகோட்டம் நான்கு பிரிவு அலுவலர்கள் முறையே 1. நாகர்கோவில் 2. தக்கலை 3. குலசேகரம் 4. குழித்துறை

உபகோட்டத்தின் வருடாந்திர இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு நிதி உதவியும் வழங்குகிறது.

**கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவில் உபகோட்டத்தில் வேளாண்மை பொறியியல் பணி**

வேளாண்மைப் பொறியியல் துறையைச் சார்ந்த இவ் உபகோட்டத்தின் முக்கியப் பணி மலைப் பிரதேசத்தில் ஏற்படும் மண் அரிமானத்தைத் தடை செய்து மேல் மண் வளத்தைப் பாதுகாப்பது ஆகும். பெரும்பாலான மலைப்பகுதிகள் வனத்துறையைச் சார்ந்தது ஆகும். வனத்துறைக்குச் சொந்தமான நிலத்தினை வனத்துறையினர் மேம்பாடு செய்து வருகின்றனர்.

எஞ்சியுள்ள தனியார் நிலங்களில் இவ் உபகோட்டம் இசைவு வாக்கு மூலம் பெற்று மண் வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொண்டு வருகின்றது. மண் வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ள ஏற்படும் செலவினங்களுடன் செயல் அமைப்புச் செலவாக 25 சதவிகித்தினைச் சேர்த்தும் தொகையில் 40 சதம் அரசு மானியமாக நில உரிமையாளருக்கு வழங்கப்பட்டு வருகிறது. மீதியுள்ள தொகை நீண்ட காலக் கடனாக வழங்கப்படுகின்றது. இத்துடன் தொகையினைத் திட்டப்பணிகள் நிறைவு செய்து இரண்டு ஆண்டுகள் முடிந்தபின் சுலபமாகப் பத்து ஆண்டுத் தவணைகளில் குறைந்த வட்டியுடன் திருப்பிச் செலுத்த வழி செய்கின்றது.

தற்பொழுது இவ் உபகோட்டத்தில் ஆறு பிரிவு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. அவைகள் முறையே (1) நாகர்கோவில் பிரிவு எண். 1, (2) நாகர்கோவில் பிரிவு எண். 2, (3) தக்கலை (4) குழித்துறை (5) குலசேகரம், (6) பூதப்பாண்டி ஆகியவை ஆகும். திட்டம் செயல்பட ஆரம்பித்ததிலிருந்து 1964-65ல் 31-3-86 முடிய இவ் உபகோட்டத்தினால் 10,426 ஏக்கர் நிலங்களில் மண் வளம் பாதுகாக்கப்பட்ட வகையில் ரூபாய் 87,75,797 செலவு செய்யப்பட்டுள்ளது.

1986-87-ஆம் ஆண்டிற்கு ரூ. 13,97,475 செலவில் 690 ஏக்கர் நிலம் பயனடையும் வகையில் திட்டம் தயாரிக்கப்பட்டு மண் வளப்பாதுகாப்புத் திட்டபணிகள் நடைபெற்று வருகின்றன.

**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**

**கன்னியாகுமரி மாவட்டம்.**



**சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் குமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு எஸ். முனீர் ஹோதா இ.ஆ.ப., அவர்கள் மரக்கன்றை நடுகின்றார்.**




LINTAS RIN 99 2015 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

# இராமநாதபுர மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள்..

**தேவேந்திரநாத்சாரங்கி, இ.ஆ.ப.,**
**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**இராமநாதபுரம் மாவட்டம்.**

இராமநாதபுரம் மாவட்டம் இலக்கியச் சிறப்பும், இதிகாசப் பெருமையும் தன்னகத்தே கொண்ட மாவட்டம் ஆகும். இராமநாதபுரம் புனித பூமி என்றும், ஆதி மனிதன் ஆதம் வாழ்ந்த பகுதி என்றும் போற்றப்படுகின்ற பகுதியாகும். குமரிக் கண்டம் கடலால் அழிந்த பிறகு தமிழுக்குச் சங்கம் கண்ட சேதுபதி மன்னர்கள் ஆண்ட பகுதியுமாகும். இராம காதையை நினைவூட்டும் வகையில் 'சேது பந்தனம்', 'சேதுக்கரை'. 'தர்ப சயனம்', 'நவ பாஷாணம், ,'வாலி நோக்கம்' போன்ற பெயர்களைக் கொண்ட நல் ஊர்கள் அமைந்துள்ள மாவட்டமாக விளங்குகின்றது. வீர பாண்டிய கட்டபொம்மன், சுவாமி விவேகானந்தர், தாயுமானவர், வள்ளல் சிதக்காதி மற்றும் சங்கம் கண்ட தமிழ்ப் புலவர்கள், சத்திய சீலர்கள் வாழ்ந்த பகுதியாகும். இராமேஸ்வரத்தில் இராமநாதசுவாமி ஆலயமும், ஏர்வாடியில் இஸ்லாம் மதத்தை உருவாக்கிய முகமது நபியின் 21வது வாரிசு சுல்தான் செய்யது இபுராஹிம் சகீது ஒலியுல்லா நாயகம் அடக்கம் செய்யப்பட்ட தர்க்காவும், ஓரியூரில் அருளானந்தர் தேவாலயமும் அமைந்துள்ள மாவட்டம்.

12 ஆயிரத்து ஐநூற்று எழுபத்தி ஐந்து சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இராமநாதபுரம் மாவட்டம் மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு நீண்ட ,நெடிய காலமாக இயங்கி வந்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் திரு.எம்.ஜி.ஆர் அவர்கள் நிர்வாக வசதி, வளர்ச்சிப் பணிகள், மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படல் ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு இராமநாதபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டத்தை 15.3.85 முதல் இயங்கும் வகையில் உருவாக்கித் தந்துள்ளார்கள்.

புதிய இராமநாதபுரம் மாவட்டத்தின் மக்கள் தொகை 11 லட்சத்து 33 ஆயிரமாகும். 264 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையைக் கொண்ட இம்மாவட்டத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக மீன் பிடி தொழில் மிக முக்கியமாக விளங்குகிறது.

இராமநாதபுரம் மாவட்டம் மழை மற்றும் கண்மாய்ப் பாசனத்தால் விவசாயம் மேற்கொள்ளும் பகுதியாகும். இம்மாவட்டத்தில் 1,836 பாசனக் கண்மாய்கள் உள்ளன. இவைகளில் 244, வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் பெறும் வசதி உள்ளவை. எஞ்சியவை மழை நீரையே நம்பி உள்ளன. இம்மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகள் பெரும்பாலும் வடகிழக்குப் பருவ மழையையே நம்பி உள்ளன. 1985ஆம் ஆண்டு, மாவட்டம் முழுவதும் பரவலான மழை பெய்யவில்லை. சராசரி மழை 220 மில்லி மீட்டர் தான். அதுவும் சில இடங்களில் மட்டுமே மழை பெய்தது. போதிய மழை இல்லை; வைகை அணையில் போதிய தண்ணீர் இல்லை; இவ்வாறான பாதகமான பருவ நிலையினால் இராமநாதபுரம்



மாவட்டம் பாதிக்கப்பட்டது. ரூ.4 கோடியே 50 லட்சத்திற்குப் பயிர் இழப்பு ஏற்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 419 கிராமங்களில் நடப்பு பசலி ஆண்டில் (1395) மழையின்மை காரணத்தினால் உணவு தானிய விளைச்சல் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடானைத் தாலுக்காவில் உள்ள 7 கிராமங்கள், இராமேஸ்வரம் தாலுக்காவில் 2 கிராமங்கள் தவிர மற்ற கிராமங்களுக்கு நிலவரி வசூல் தள்ளுபடி செய்ய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. தமிழக அரசு ரூ. 48 லட்சத்து 85 ஆயிரத்துக்கு நிலவரி தள்ளுபடி செய்துள்ளது.

தமிழக அரசு, இராமநாதபுரம் மாவட்டத்தில் நிலவி வருகின்ற பருவநிலை பாதகமான சூழ்நிலையை மனதில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆய்வுக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. உடனடி தேவையான குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் வேலை தொடர்பான நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறு ஆணையிடப்பட்டது.

இராமநாதபுரம் நகரில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் 10 லாரிகள் மூலம் 60 இடங்களில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதற்காக அரசு ரூ. 4 லட்சத்து 14 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இராமநாதபுரம் நகரில் 10 உறை கிணறுகளும், 5 குழாய்க் கிணறுகளும் ரூ. 80 ஆயிரம் செலவில் நிறுவப்பட்டு, அதன் மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. லட்சுமிபுரம் ஊரணி, முகவை ஊரணி, நீலகண்டி ஊரணி மற்றும் சொச்சிவயல் ஊரணி ஆகிய 4 இடங்களில் ரூ. 2 லட்சத்து 50 ஆயிரம் செலவில் திறந்த கிணறுகள் குடி தண்ணீருக்காக நிறுவப்பட்டுள்ளன.

இராமநாதபுரத்திலிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள வைகை ஆற்றில் அமைந்துள்ள பொட்டிதட்டி என்னும் இடத்திலிருந்து குடிநீர், விசைப் பம்புகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வந்துள்ளது. பருவ நிலை தவறியதால் பொட்டிதட்டி நீர் ஆதாரத்திலிருந்து தேவையான குடிநீர் கிடைக்கவில்லை. நீர் ஆதாரத்தைப் பெருக்கும் வகையில் பொட்டிதட்டியில் 2 ஆழ் குழாய்க் கிணறுகளும் 2 நுண் துளைக் கிணறுகளும் ரூ.7 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் இராமநாதபுரம் நகருக்குக் கிடைக்கும் குடிநீரின் அளவு அதிகமாக்கப்படும். இராமநாதபுரம் நகரில் குடிநீர்த் தேவை விரைவில் பூர்த்து செய்யப்பட உள்ளது.



இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருவாடானை, ஆர்.எஸ். மங்கலம், இராமநாதபுரம், நைனார்கோயில், பரமக்குடி, முதுகுளத்தூர், கடலாடி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களை சேர்ந்த 59 குடியிருப்புகளுக்கு லாரி மூலம் குடிநீர் வழங்குவது நடைபெற்று வருகிறது. இதற்காக ரூ. ஒரு லட்சத்து 30 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது. போகலூர் ஒன்றியத்தைச் சார்ந்த டி. வேலங்குளம், வைரவன் ஏந்தல், கடலாடி ஒன்றியத்தைச் சார்ந்த கிடாத் திருக்கை, பிள்ளையார் குளம், ஆர்.எஸ். மங்கலம், கீழக்கரை, கமுதி, முதுகுளத்தூர் ஆகிய பேரூராட்சிகளில் 9 புதிய கிணறுகள் ரூ.3 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் அமைக்கப்படுகின்றன.

கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டத்தின் கீழ் கமுதி, பரமக்குடி நைனார் கோயில், போகலூர். ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் 30 கிணறுகள் ரூ. 78 ஆயிரம் செலவில் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்தில் 629 உறை கிணறுகள் ரூ.24 இலட்சம் செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டு, 573 உறை கிணறுகள் ரூ.15 லட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன. 30.7.86ல் மதுரையில் தமிழக அரசு தலைமைச் செயலாளர் நடத்திய கூட்டத்தில் மேலும் 60 ஆழ் குழாய்க் கிணறுகள், 330 உறை கிணறுகள் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

417 ஊருணிகள் தூர் வாரும் பணி, ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 16 இலட்சத்து 80 ஆயிரம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 80 ஆழ் குழாய்க் கிணறுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் அமைக்கப்பட்டு வருகின்றன. இதுபோன்ற நீர் ஆதாரப் பெருக்குத் திட்டங்கள் போர்க்கால வேகத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் ராஜகம்பீரம், கொளிந்துறை, கள்ளிக்காட்டை, மேலப் பெருங்கரை, கீழப் பெருங்கரை ஆகிய இடங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் முடிவடையும் தருவாயில் உள்ளன. ரூ. ஒரு இலட்சத்து 69 ஆயிரம் செலவில் அக்காடவலசை, ரூ. 2 இலட்சத்து 53 ஆயிரம் செலவில் மகாசவன்குடி, ரூ. 30 ஆயிரம் செலவில் உசிலங்காட்டு வலசை ரூ. 20 இலட்சம் செலவில் ரெகுநாதபுரம மற்றும் வேதாளை, வீரவனூர், கருத்தனேந்தல் ஆகிய இடங்களில் புதிய கூட்டுக்

குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதனால் இம்மாவட்டத்தின் குடிநீர்த் தேவை விரைவில் பூர்த்தி செய்யப்படும்.

பருவநிலை பாதகமான சூழ்நிலையில் குளங்கள், கண்மாய்கள் காய்ந்தன. தமிழகத்திலேயே கண்மாய்கள் அதிகமுள்ள மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டம். மழையின்மையின் காரணமாக விவசாயம் குன்றியது. விவசாய வேலைகளில் ஈடுபடுவோர்களுக்கு வேலை வாய்ப்புத் தேடித் தரும் வகையில் ரூ. ஒரு கோடியே 50 இலட்சத்திற்கு இராமநாதபுரம் மாவட்டத்திற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. இதன் காரணமாக ஊரக நிலமற்றோர் வேலை உறுதி அளிப்புத் திட்டத்தின் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் 11 லட்சத்து 80 ஆயிரம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்படும். இதற்காக ரூ. ஒரு கோடியே 77 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் கிராமச் சாலைகள் அமைத்தல், சமூக நலக் காடுகள் அமைத்தல், சிறு பாசனக் கண்மாய்கள் செப்பனிடுதல், கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல் போன்ற வேலைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் வறட்சிக் காலத்தில் கிராமப்புற மக்கள் பலரும் வேலைவாய்ப்புப்பெற்றுள்ளனர்.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 58 லட்சம் செலவிற்கு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதில் 401 ஆதிதிராவிடர் குடியிருப்புகளும் சாலைகள் சீரமைக்கும் பணியும், கிணறு ஆழப்படுத்துதலும், கோழி வளர்ப்புக்கான கொட்டகை அமைத்தலும், சிறிய பாலங்கள் அமைத்தலும், கழிவு நீர்க் கால்வாய் அமைத்தலும் போன்ற வேலைகள் செய்து முடிக்கப்படும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் நடப்பு நிதியாண்டில் ரூ. ஒரு கோடியே 10 இலட்சம் செலவிடப் பட உள்ளது. இதனால் 4,227 நபர்கள் பயன் பெறுவார்கள். இதில் 1,164 நபர்கள் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்கள் ஆவர்.

கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் இம்மாவட்டத்தில் ரூ.66 இலட்சம் முதலீட்டில் பனைத் தொழில்கள் நடப்பு ஆண்டில் துவக்கப்படும். இதனால் 4500 நபர்கள் புதிதாக வேலை வாய்ப்புப் பெறுவார்கள்.

மத்திய அரசின் 7வது திட்ட காலத்தில் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய 50 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் இத்திட்டம் 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். இதில் இராமநாதபுரம் மாவட்டமும் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

அரசின் வறட்சி நிவாரணப் பணித் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் பருவநிலை பாதகமானதால் ஏற்பட்டுள்ள வறட்சியின் கொடுமை உறுதியாக நீக்கப்படும்.

# தொழிலாளர் காப்புறுதி

தீப்பெட்டி, பட்டாசு மற்றும் வெடிமருந்து தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்காக நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனியோடு இணைந்து தமிழ்நாடு அரசு தனிநபர் தொகுதி விபத்து ஈட்டுறுதித் திட்டத்தினை அறிமுகப்படுத்தி உள்ளது.

பணிநேரத்தில் ஏற்படும் விபத்துக்களுக்கு இழப்பீடாக மட்டுமன்றி, நாள் முழுதும் (24 மணி நேரம்) ஈட்டுறுதிப் பாதுகாப்புத் திட்டமாக இது செயல்படுத்தப்படும். தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் 14 வயது முதல் 65 வயது வரை உள்ள தொழிலாளர்கள் இத்திட்டத்தில் சேரலாம். சேரும் உறுப்பினர் ஆண்டுச் சந்தாவாக ஏழு ரூபாய் செலுத்த வேண்டும். முதல்ஆண்டுச் சந்தாவை அந்தந்த நிறுவனங்களின் உரிமையாளர்களே அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்லுடைக்கும் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், பாரம் சுமக்கும் தொழிலாளர்கள் போன்ற அமைப்பு ரீதியாக உருவாகாத தொழிலாளர்களுக்கும் இத்தகைய விபத்துக் காப்புறுதித் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தவும் மேலும் பல்வேறு துறைகளுக்கு இதனை விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

விபத்தினால் மரணம் அடைய நேரிட்டால் ரூ. 16 ஆயிரமும் இரண்டு கால் அல்லது இரண்டு கை, ஒரு கால் அல்லது ஒரு கை இழப்பு ஏற்பட்டாலும், ஒரு கண் பார்வை பாதிக்கப்பட்டாலும் ரூ. 16 ஆயிரம் ஈட்டுறுதித் தொகையாக இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும். விபத்துக் காரணமாக நிரந்தரமான உடல் ஊனம் ஏற்பட்டாலும் இதே தொகை வழங்கப்படும். ஒரு கால் அல்லது ஒரு கையை இழந்து ஒரு கண் பார்வையை இழந்தால் ரூ. 8 ஆயிரம் கிடைக்கும். இத்திட்டம் 1986 ஜூலை மாதம் முதல் தேதியிலிருந்து, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தில் 17,870 தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இத்தகவல்களை மாண்புமிகு நிதி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தெரிவித்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி நிறுவனத்தினர் இத்திட்டத்திற்கான ஒட்டு மொத்த ஈட்டுறுதி ஆவணங்களை 28.8.86 அன்று வழங்கினர்.

## கண் நோய்களுக்கு லேசர் சிகிச்சை

கண்களில் ஏற்படும் 'கிளகோமா' போன்ற நோய்களுக்கும், விழித்திரைக் கோளாறுகளுக்கும் புதியமுறை 'லேசர்' கதிர் சிகிச்சையைக் கலிஃபோர்னியா பல்கலைக் கழக மருத்துவ நிலையம் மேற்கொண்டு வருகிறது. இதற்கு நல்ல பலனும் கிட்டிவருகிறது.

வழக்கமாக 'ஆர்கான் லேசர்' (Argon Laser ) எனப்படும் லேசர் முறைதான், கண் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும். ஆனால் இந்த மருத்துவ நிலையம் 'டை லேசர்' ( Dye Laser ) என்னும் புதிய லேசரைப் பயன்படுத்துகிறது; இதனால் சிக்கல்கள் தவிர்க்கப்படுவதுடன், அதிக் வெற்றியும் கிட்டுகிறது.

கண்ணில் 'சொட்டு மருந்து' விட்ட பிறகும், ''கிளகோமா'' நோயைக் குணப்படுத்த முடியாத நிலையில்தான் 'லேசர் சிகிச்சை' சிபாரிசு செய்யப்படுகிறது. கண்ணின் ரத்தக் குழாய்களில் கசிவு ஏதேனும் ஏற்பட்டால் 'லேசர்' மூலம் அதனை அடைக்கவும் முடியும்.

# பெரியார் மாவட்டத்தில்....

## வறட்சி நிவாரணப் பணிகள்...



பருவ கால நிலை மாறியதால் ஏற்பட்ட வறட்சியினைப் போக்க, பெரியார் மாவட்டத்தில் மிகத் துரிதமாக நிவாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெரியார் மாவட்டம் வேளாண்மையைத் தலையாய தொழிலாகக் கொண்ட மாவட்டம். இம்மாவட்டத்து மக்கள் அனைவரும் விவசாயத் தொழிலையே நம்பி வாழ்பவர்கள். கடந்த ஆண்டு வானம் பொய்த்த தன் விளைவாக வறட்சி ஏற்பட்டது. இவ் வறட்சியைப் போக்க இம்மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின் வருமாறு:

ரூ. 17.25 இலட்சம் செலவில் 945 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. புதிதாக இம்மாவட்டத்தில் 350 ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. நகராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்ய இது வரை ரூ. 2.32 இலட்சம் செலவில் லாரிகள மூலம் குடிநீர் 492 தடவை விநியோகம் செய்யப்பட்டுள்ளது. பேரூராட்சிப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்ய ரூ. 1 இலட்சம் செலவழிக்கப்பட்டு 1,231 தடவை தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இம்மாவட்ட விவசாய கூலித் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்துன் கீழ் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 2.11 இலட்சம் செலவழிக்கப்பட்டு 21,000 மனித சக்தித் திறன் பயன்படுத்தப்பட்டுள்ளது. சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ. 11.02 இலட்சம் செலவழிக்கப்பட்டு 0.943 இலட்சம் மனித சக்தித் திறன் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 45.312 இலட்சம் செலவழிக்கப்பட்டு 5.148 இலட்சம் மனிதசக்தித் திறனும், நிலமற்ற ஏழை விவசாயக் கூலி தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ் ரூ. 24.785 இலட்சம் செலவழிக்கப்பட்டு 1.996 இலட்சம் மனித சக்தித் திறனும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இம் மாவட்டத்தில் உள்ள 1,438 மோட்டார் பம்பு செட்டுகளும் பழுதடையாமல் வேலை செய்ய உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதன் மூலம் இம்மாவட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கும் பணிகள் நிறைவு பெற்று வருகின்றன.

**—நா. தில்லைகோவிந்தன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெரியார் மாவட்டம்.**





# தாய்ப்பாலின் மேன்மையும் மகிமையும்

—மு. முத்துக்காளத்தி

**தா**ய்ப்பால் இயற்கையானது. தாய்க்கும் சேயக்கும் மிகுநத நன்மை பயப்பது.குடும்பத்தையும் இதன் மூலம் சமுதாயத்லதயும் வாழ வைப்பது.

குழந்தை தாயின் கர்ப்பத்தில் வளரும்பொழுது அதற்கு இடங் கொடுத்து, தாயின கருபபை பெரிதாகும். குழந்தை பிறந்த பிறகு இந்தக் கருப்பை சுருங்கி, பழைய நிலையை அடையும்.இது இயற்கை வைத்துள்ளதோர் அற்புதமான ஏற்பாடு. தாய் குழந்தைக்குப் பால் கொடுக்கும் பொழுதுதான்,கருப்பை சுருங்கிப் பழைய நிலையை அடைவது விரைவுபடுத்தப்படுகிறது.

தாய்ப்பால் குழந்தைக்குப் பலவித நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கிறது. வயிற்றுக் கோளாறுகள் ஏற்படாதபடி செய்கிறது. தாய்ப்பால்மாசற்று, தூய்மையாக, கிருமிகளற்று இருப்பதால்குழந்தைக்கு உணவுக் குழல் உபாதைகள் எதுவும் வருவதில்லை.

வேறு எந்தப் பாலையும்போல, தாய்ப்பாலைத் தயாரிக்கவேண்டியது இல்லை. தண்ணீரைச் சூடாககி, பவுடரைப் போட்டுக் கலக்கி, புட்டிகளைக் கழுவி நிரப்பி..இப்படியெல்லாம்கஷ்டப் பட வேண்டியதில்லை. ஸ்டெரிலைசரோ ரிப்ரிஜிரேட்டரோ தேவையில்லை. எந்த இடத்திலும் எளிதாகக் கிடைக்கக் கூடியது. விலை போட்டு வாங்கத் தேவையில்லாதது. செலவு கிடையாது. நேரம் மிச்சம்.

ரயிலிலோ பஸ்ஸிலோ நாள் கணக்கில், மணிக் கணக்கில் பிரயாணம் செய்ய நேர்ந்தால்தான் தாய்ப்பாலின் மகிமையே தெரியும். எங்கேயும் ஓடிப்போய்த் தேடாமல் இருந்த இடத்திலேயே எளிதாகக் கிடைக்கும் ஒப்பற்ற அமுதம் தாய்ப்பால்.

இன்னொன்றும் பார்க்க வேண்டும், குழந்தைகளுக்கு உறிஞ்சுகிற, சப்புகிற வழக்கம் இருக்கும். தாய்ப்பால் கொடுக்கும் பொழுது தான் அதனுடைய இந்தப் பழக்கம் - ஆர்வம் தீர்த்து வைக்கப்படுகிறது. தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தைகள் கைவிரலைச் சூப்புவது குறைவாகவும், வேறு வகையில் பால் புகட்டி வளரும் குழந்தைகள் கைவிரலைச் சூப்புவது அதிகமாகவும் இருப்பதற்கு இதுதான் காரணம்.

குழந்தையைத் தாய் தன் மார்போடணைத்து, 'உனக்கு என்னைத் தவிர வேறு எவனடா இந்த அமுதத்தைத் தரமுடியும்'? என்ற உணர்வோடு குழந்தைக்குப் பால் தரும்பொழுது அவளது உள்ளத்தில் பொங்கிவரும் பாச உணர்வுக்கும் பரிவுணர்வுக்கும் ஈடாகச் சொல்ல உலகத்திலே எதுவுமே கிடையாது. பால் கொடுத்து அனுபவித்த தாய்மார்களுக்கே இந்த இன்பம் புரியும்.

தாய்-சேய் உறவு நெருக்கம் கொள்வதும், அந்நியோன்யப் படுவதும், தாய்ப்பால் கொடுக்கும்பொழுதுதான் நடக்கிறது. ஒரு குழந்தை தன்னைப்பார்த்துக் கொள்ள உலகத்தில் ஓர் உயிர் இருக்கிறது என்ற பாதுகாப்பு உணர்வைப் பெறத் தாய்ப்பால் உதவுகிறது. அழும் குழந்தை, யார் தூககினாலும் அழுகையை நிறுத்தாது. அம்மா தூக்கினால் மட்டுமே அழுகையை நிறுத்துவதும், அவள் பால் கொடுக்கத் தொடங்கியதும் பரமானந்தம் நிம்மதி அடைவதும் இதனால்தான்.

இப்படிப்பட்ட பண்பட்டதொரு வழக்கம் இன்று குறைந்து வருவதைக் காண்கிறோம்.முக்கியமாக நகரங்களில், அதுவும் குறிப்பாக வேலைக்குச் செல்லும் பெண்களில் சிலர் இந்தக் கடமையை நிறைவேற்றத் தவறுகிறார்கள். குழந்தைக்குப் புட்டிப் பால் கொடுத்துவிடுகிறார்கள். அக்கம்பக்கத்தில் செய்வதைப் பார்த்து, இன்னும் சிலர்அதைப் பின்பற்ற, குழந்தையென்றால் அதற்குப் புட்டிப்பால்தான் கொடுத்து வளர்க்க வேண்டும் போல் இருக்கிறது என்றதோர் எண்ணம் சமூகத்தில் தோன்றியுள்ள வேதனையைப் பார்க்கிறோம்.

இது தவறு. குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுத்துத்தான் வளர்க்க வேண்டும்.

தாய்ப்பால்கொடுக்கத் தயக்கம் காணப்படுவதற்கு என்ன காரணம்?

தாய்ப்பால் கொடுத்தால் அழகு போய்விடும் என்று சில தாய்மார்கள் நினைக்கிறார்கள். இது அறியாமை தவிர,வேறல்ல. தாய்ப்பால் தருவதால் அழகு கெடாது. வழக்கமான உணவு வகைகளில் ஓரளவு சத்துள்ள பண்டங்களைச் சேர்த்துக்கொண்டால் போதும். பால் கொடுப்பதால் எதையோ இழக்கிறோம், அதனை ஈடு செய்ய நிறைய சாப்பிட வேண்டும் என்ற எண்ணம் தவறு. தாய் தனது எடையைக் கூட்ட வேண்டிய அவசியமே இல்லை.

பால் கொடுக்காமல் போனால் தான் தாயின் எடை கூடி,உருவம் கெட வாய்ப்பேற்படும். மார்

பகங்கள் பெரிதாக இருப்பவர்களுக்குத்தான் பால் சுரக்கும். சிறிதாக இருப்பவர்களுக்குப் பால் சுரக்காது என்ற கருத்தும் தவறானது. சிறிதாக இருந்தாலும் குழந்தைக்குத் தேவையான அளவு பால் சுரக்க இயற்கை வழி செய்திருக்கிறது.

இன்னும் சில தாய்மார்கள், தாய்ப்பால் தருவதால் தங்களுக்குக் களைப்பும் சோர்வும் ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். குழந்தை பெற்ற தாய்க்கு, ஆரம்பத்தில் சில நாட்கள் பலவீனம் உண்டாவது இயற்கை. மருத்துவமனையிலிருந்து வீட்டுக்கு வந்து, ஓய்வெடுத்து, மருந்தும் உணவும் சாப்பிட்டு வரும்பொழுது சரியாகி விடும். சத்துணவு ஓரளவுக்குக் கூட்டிச் சாப்பிட்டால்போதும். களைப்பும் சோர்வும் நீங்கிவிடும். தாய்ப்பால் கொடுப்பதால் மகிழ்வான மனநிலையில் உடம்புக்குத் தெம்பும் சுறுசுறுப்பும் வருமே தவிர, சோர்வும் களைப்பும் ஏற்படாது.

சில கணவர்கள் தங்கள் மனைவிகளை, தாய்ப்பால் கொடுக்க வேண்டாம் என்று தடுக்கிறார்கள். தாய்ப்பால் கொடுப்பதால் மனைவியின் அழகு கெட்டுவிடும் என்று அவர்கள் தவறாக நினைப்பது ஒரு காரணம். மனோதத்துவ ரீதியில் மற்றொரு காரணமும் இருக்கிறது. குழந்தையை அவர்கள் தங்களுக்குப் போட்டியாக வந்து, தாயின் அன்பைப் பகிர்ந்து கொள்வதாகவும், குழந்தை பிறந்ததிலிருந்து மனைவி குழந்தையைத்தான் அதிகம் பார்த்துக் கொள்கிறாள் தங்களைக் கவனிக்கவில்லை என்பதாகவும் நினைப்பதுதான். இதுவும் தவறான அடிப்படையில் தோன்றும் கருத்தே.

பாலில் உள்ள கால்சியம் சத்து குழந்தையின் பல், எலும்பு போன்றவை வளர உதவுகிறது. அதனால் தாய், கால்சியம் சத்துள்ள உணவுப் பொருள்களைச் சாப்பிட வேண்டும். பால், பால் பண்டங்கள், சூப்புகள், பருப்பு வகைகள், கீரைகள் சேர்த்துக் கொள்ள வேண்டும். வெண்ணெய், பழங்கள், இறைச்சி, கோழி, மீன் ஆகியவை சிறந்தவை.

குழந்தைக்குப் பகலில் 3 மணி நேரத்துக்கு ஒரு தடவை வீதமும், இரவில் 4 மணிக்கு ஒரு தடவை வீதமும் ஒரு நாளைக்கு 7 தடவை தாய்ப்பால் கொடுக்க வேண்டும்.

குழந்தைக்குத் தாய்ப்பால் சாதாரணமாக 10 நிமிடத்திலிருந்து 20 நிமிடம் வரை கொடுத்தால் போதும். பிறந்த ஒரு வாரம் வரை 5 நிமிடங்களுக்கு மேல் குடிக்காது. நாளாக நாளாக அதிக நேரம் குடிக்கும். எப்படியானாலும் 30, 40 நிமிடங்களுக்கு மேல் தாய்ப்பால் கொடுக்கத் தேவையில்லை.

தாய்ப்பால் கொடுக்கும்பொழுது இரு மார்பகங்களிலும் பால் குடிக்குமாறு கொடுக்க வேண்டும். ஒரு தடவை முதலில் இடது மார்பகத்தில் பால்கொடுத்தால், அடுத்த தடவை முதலில் வலது மார்பகத்தில் கொடுக்க வேண்டும். முதல் மார்பகத்தில் 10-15 நிமிடமும் அடுத்த மார்பகத்தில் 5-10 நிமிடமும் கொடுத்தால் போதும்.

குழந்தைக்குப் போதிய அளவு தாய்ப்பால் கிடைக்கிறதா, அது திருப்தியடைகிறதா என்பதை ஒரு தாய் தனது அனுபவத்திலிருந்துதான் கண்டு கொள்ள வேண்டும். குழந்தையின் எடை கூடி வருவதையும், அது சந்தோஷமாக இருப்பதையும் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும். எடை கூடாமலும்' அடிக்கடி குழந்தை அழுவதாகவும் இருந்தால், குழந்தைக்குப் போதிய தாய்ப்பால் கிடைக்கவில்லை என்ற முடிவுக்கு வந்து, டாக்டரிடம் யோசனை கேட்க வேண்டும்.

ஒரு குழந்தைக்குத் தாய்ப்பால் 7 அல்லது அதிகபட்சம் 10 மாதம் வரை தந்தால் போதும். பிறகு ஓரளவு திட, முழு அளவு திட உணவு வகைகளைக் கொடுக்க ஆரம்பிக்க வேண்டும்.

புட்டிப்பால் யாரும் கொடுக்கலாம். தாய்ப்பால் ஒரு தாய் தான் தர முடியும்.

'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து'-என்று பாடினார் மாணிக்கவாசகர்.

பண்டைத் தமிழகத்தில் ஒரு தாய், தன் மகன் போர்க்களத்தில் முதுகில் அம்புபட்டு இறந்துவிட்டான் என்று கேள்விப்பட்டு 'மகனுக்குப் பாலூட்டிய மார்பினைப் பிளந்தெறிவேன்' என்று சூளுரைத்தாள். அது மூதின் முல்லையாகப் புறநானூற்றில் மணம் பரப்புகிறது.

பாலூட்டும் போதே வீரவுணர்வு, நீதிக் கருத்துக்கள், அறவுரை, நாட்டுப் பற்று முதலியவற்றைத் தன் மகனுக்கு ஒரு தாய்தான் ஊட்டி வளர்க்க முடியும். அப்படித்தான் பண்டைத் தமிழகத்தில் வளர்த்தார்கள். இப்பொழுதும் நாம் வளர்க்க வேண்டும்.

## தாய்மொழியே பயிற்று மொழி

“தமிழ் இலக்கியத்தைப் பற்றி நான் ஒன்றும் சொல்வதில்லை எனக் குறை கூறப்படுகிறது. அதை நான் ஏற்றுக்கொள்ள முடியாதவனாக இருக்கிறேன். ஆங்கிலம் கற்பதற்குமுன் அவரவர்கள் தாய்மொழியைக் கற்க வேண்டுமென நான் பல வருஷங்களாகக் கூறி வருவதை நீங்கள் அறியாமலிருக்க முடியாது. அதிலும் ஆங்கிலத்தைவிடத் தமிழ்ப்படிப்பையே நாட வேண்டுமென்று உத்தேசித்திருக்கிறேன். பாடசாலையிலும் தாய்மொழி மூலமாகவே பாடங்கள் கற்பிக்கப்படவேண்டுமென்று கருத்துத் தெரிவித்திருக்கிறேன். ஆகையால் இப்பொழுதேனும் தாய்மொழியினிடத்து எனக்குள்ள அபிப்பிராயத்தை அறிந்து என்மீது சாட்டப்பட்டுவரும் குற்றத்திற்கு ஆதாரம் இல்லை என்பதை உணருங்கள்.

—காந்தியடிகள்

[தூத்துக்குடிக்கு வந்தபோது ஆற்றிய உரையிலிருந்து]

ஆதாரம்: சுதேசமித்திரன் 12.10.1927.





# பேரறிஞர் அண்ணா

# பிறந்த நாள்



**கலையழகு கொஞ்சும் காவிய நகரின் காஞ்சியில் பிறந்த அண்ணா கொள்கையை கட்டிக் காக்கும் புரட்சித் தலைவர் கருணையின் வடிவாம் தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஆட்சி, குடிசைகளை மாற்றி வீடுகள் கொடுத்து குவலயம் பாராட்டும் வண்ணம் ஏழைகள் நெஞ்சைக் குளிர வைக்கிறது.**

**பா. அங்கமுத்து.**
**தலைவர்,**
**தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்.**

DIPR/39566/207/86-64/NAS



## சென்ற இதழில்....

பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தைச் சென்ற இதழ் (16-9-86) அட்டை அலங்கரித்தது.

## பார்த்தோம்! படித்தோம்!

'தமிழரசு' இதழ்களை ரசித்துப் படிக்கிறேன். தமிழக அரசின் வளர்ச்சித் திட்டங்கள் என்னை மிகவும் கவர்ந்துள்ளது.

நி.யோ.அன்டன்,
நியூசிலாந்து.

1.9.'86 இதழில் 'என் தலைவர்' என்ற தலைப்பில், பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தீரர் சத்தியமூர்த்தி அவர்களுடன் கொண்ட அனுபவங்களை விளக்கியுள்ளது சிறப்பாக இருந்தது.

சொ.முத்தமிழ்வாணன்
தஞ்சாவூர்.

சுதந்தரப் போராட்ட வீரர் தியாகி சத்தியமூர்த்தி சிறப்பிதழ் பார்த்தேன். அவரின் சீரிய தொண்டுகளைத் 'தமிழரசு' திரட்டி வெளியிட்டிருந்தது அருமை.அட்டைப்படம் ஜோர். மருத்துவ விந்தைகள் மனதில் வைத்திருக்க வேண்டியவை.

ஆர்.ஜி.துரைராஜு,
கீழப்பழுவூர்.

'வழிகாட்டும் வெளிநாடுகள்' கட்டுரை சிறப்பாக இருப்பதுடன் சிந்தனைகளை மேலோங்கச் செய்தது. நேரில் சென்று பார்க்கவில்லையே என்ற கவலையைப் போக்கியது.

எஸ்.எஸ்.வாசன்,
தென்எலப்பாக்கம்.

சத்தியமூர்த்தியின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் படம் பிடித்து, விடுதலைக்குப் பாடுபட்ட அவரது நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கொடுத்தமைக்குப் பாராட்டுகள்.

எஸ்.இராமலிங்கம்,
விலங்கல்பட்டு.




# பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்

முத்தமிழ் ஆட்சியை
முறையுடன் ஆண்ட
முன்னாள் முதல்வர்
அண்ணா வழியில்
இன்பத் தமிழ் நாட்டை
இனிதுடன் ஆளும்
இதயக் கனியின்
இலட்சியக் கனவாம்
குடும்பத்துக்கொரு வீடு என்ற
கோலநிகர் திட்டமதை
நனவாக்கும் நல் தொண்டில்
நலமிகு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
நல்லநடை போட்டுத்தான், நம் அண்ணன்
புகழ்பாடி நல்வணக்கம் சொல்லி நிற்கும்.

திருப்பூர் வி. ஆர். மணிமாறன்,
தலைவர்,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்.

DIPR/40128/207/86-69/NAS



ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


Exotic Designs for
the New Year
A new range added in
Chiffon, Polyester, Silk
and Cotton sarees for you.
Visit Co-optex showroom.
Co-optex
Handlooms
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

